யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 52 | சர்வதேச மின் செய்தித்தாள் | யூலை 01 2023





# KARUMPULIKAL NAAL

"கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள்
எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள்
எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்




























# விளம்பரத்துக்கு அழையுங்கள்:

# 437.345.4203



## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**மலைபோல் மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை, எந்தப்புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.**





# சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca



அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# வான் கரும்புலிகள்

## கேணல் ரூபன்
## லெப். கேணல் சிரித்திரன்
## வீர நினைவுகளில்!



லெப்.கேணல்.சிரித்திரன் (முருகுப்பிள்ளை சிவரூபன்)

வீரனாய் – 07.09.1979

வித்தாய் – 20.04.2009

பிறந்த இடம் – இடைக்காடு

கல்வி கற்றது – இடைக்காடு மகாவித்தியாலம்"

'காற்றிலேறியே விண்ணையும் சாடுவோம்' என வானிலும் எங்கள் வீரம் வரலாறு கண்ட வீரத்தின் அடையாளங்களாக வான்புலிகளில் முதல் வான்கரும்புலியாய் போனான் லெப். கேணல்.சிரித்திரன்.

சிரித்திரன் பெயரைப் போலவே சிரித்த முகம். வீரத்தை விழி களில் சுமந்த விசித்திரம் அவன். தமிழீழ வான்புலிகள் சரித் திரத்தில் சிரித்திரனும் ஒரு விடி நட்சத்திரம். விடிவெள்ளிகளின் ஒளிக்கதிர்கள் பார்வையில் சிறுபுள்ளயே. எனினும் அதன் வீரியம் என்பது உலகைவிடவும் ஒளிபொருந்தியது. அப்படியே எங்கள் சிரித்தினும் வீரத்தின் விவேகத்தின் ஆற்றலின் ஆதாரம். விடுதலையின்றேல் வாழ்வில்லை போராட்டமே வாழ்வென்று ஆகியிருந்த காலத்தின் கட்டளையை ஏற்றுச் சிரித்திரனும் புலி வீரனாகியது 1996ம் ஆண்டு. யாழ்மண்ணி லிருந்து வேரறுக்கப்பட்டு வீழ்ந்த வீரம் வன்னியில் புதுப்பிக்கப் பட்ட தருணமது.

விழவிழ எழும் வீர மரபைக் கொண்ட வீரத்தின் வேர்களின் வழியில் தன்னையும் இணைத்த சிரித்திரன் விசுவமடுவில் அமைந்திருந்த மாறன் 1 பயிற்சி முகாமில் தனது அடிப்படைப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டான்.

முதல் கள அனுபவம் கிளிநொச்சி ஊடறுப்புச் சமராகும். சமர் முனையில் சிரித்திரன் சிறந்த வீரனாய் தனது திறனை வெளிக் காட்டிய போராளி. போர்க்களத்தையே அதிகம் விரும்பிய தாய் மண் விரைவில் வெல்லப்பட வேண்டுமென்பதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த காரியப்புலியவன்.

முதல் கள அனுபவம் முடிந்து வந்த வீரன் 1998 இல் விக்ரர் கவச எதிர்ப்புப் படையணியில் பயிற்சிக்குத் தெரிவாகினான். சிறப்பாய் பயிற்சிகள் முடித்து விக்ரர் கவச எதிர்ப்புப் படையணி' வீரனாகினான். கவசங்களை உடைத்து எதிரியை நிலத்தி லிருந்து விரட்டி விடியலைத் தேடி விழித்திருந்த தென்றல் அவன்.

* * *

RPG என்ற ஆயுதத்தை சிறீலங்காப் படையினருக்கு அறிமுகம் செய்தவர்கள் புலிகள். ஏனெனில் புலிகள் இவ்வாயுதத்தைப் பாவிக்கத் தொடங்கிய பின்னரேயே சிறீலங்கா படை RPGஐ பாவிக்கத் தொடங்கியது.

யாழ் மண் எதிரியிடம் பறிபோன பின்னர் வன்னியில் 1996 நடுப்பகுதியில் RPG கொமாண்டோப் பயிற்சிகள் நடைபெற்று RPG அணியொன்று உருவாக்கப்பட்டது. முல்லைத்தீவு முகாம்



மீதான தாக்குதல் நடந்து கொண்டிருந்த காலத்தில் அந்த RPG அணியானது கிளிநொச்சியைக் கைப்பற்ற முனைந்த சத்ஜெய நடவடிக்கையில் இராணுவத்தினருக்கு எதிராக களமிறக்கப் பட்டது.

சிறு அணியாக உருவாக்கம் பெற்றிருந்த RPG அணியானது அப்போது சிறப்பான பெயர் எதுவும் சூட்டப்பட்டிருக்காமல் ஒரு படையணியின் சிறு அணியாகவே செயற்பட்டிருந்தது.

சத்ஜெய சமரில் எதிரி அதிகம் டாங்கிகளைப் பயன்படுத்திக் கொண்டே படை முன்னேற்றங்களை மேற்கொண்டான். அந் தக் காலத்தில் எதிரியின் டாங்கிகளை எதிர்பார்த்த அளவு அழித் தொழிக்கும் வலுவை RPG படையணி கொண்டிருக்கவில்லை. அப்போது தான் RPG கொமாண்டோ அணியை புதிதாய் வடி வமைக்கும் நோக்கம் தலைவர் பிரபாகரன் அவர்களால் வித் திடப்பட்டது. எப்போதுமே எதிர்காலத்தேவைகளை முற்கூட் டியே உணர்ந்து செயற்படும் தலைவரின் நேரடியான கவனிப் பில் உருவாகியதே RPG கொமாண்டோ அணி. (விக்ரர் கவச எதிர்ப்புப் படையணி)

இம்ரான் பாண்டியன் படையணியின் கீழ் 'கவசத்தை உடைப் போம் நாட்டினை மீட்போம்' எனும் சுலோக வாக்கியங்களைக் கொண்டு 'விக்ரர் கவச எதிர்ப்புப் படையணி' உருவாக்கம் பெற்றது. 1997 தொடக்கத்தில் முதலாவது 'விக்ரர் கவச எதிர்ப்புப் படையணி' ஆரம்பிக்கப்பட்டு பயிற்சிகள் நடைபெற்று விக்ரர் கவச எதிர்ப்புப் படையணியின் வரலாறு ஆரம்பமாகியது.

இப்படையணியின் சீருடை நெடுக்கு வரிச்சீருடையாகும். ஏனைய படையணிகளிலிருந்து இப்படையணியானது வித்தியாசமாகவே அறிமுகமானது. இப்படையணியின் முதல் களம் ஜெயசிக்குறு களமாகும். ஜெயசிக்குறு ஆரம்பித்து முடி வதற்கிடையில் விக்ரர் கவச எதிர்ப்புப் படையணி வீரர்கள் அதிகளவில் வீரச்சாவடைந்தார்கள். எனினும் புதிய புதிய அணிகள் வேகவேகமாகப் பயிற்சிகளை முடித்துக் களத்தில் நின்றார்கள். ஜெயசிக்குறு வெற்றியில் இப்படையணியின் பங்கும் காத்திரமானது.

கிளிநொச்சிச் சமரில் வீரச்சாவடைந்த மேஜர் நவச்சந்திரன், ஓயாத அலைகள் மூன்றில் வீரச்சாவடைந்த லெப்.கேணல் மணிவண்ணன், சமாதான காலத்தில் சுகவீனமடைந்து சாவடைந்த லெப்.கேணல் சுட்டா போன்றோர் விக்ரர் கவச எதிர்ப்புப் படையணியின் தளபதிகளாக இருந்தார்கள்.

வன்னியின் மீட்பில் கவசப்படையணியின் பங்கு உணரப்பட்டு தலைவரால் உருவாக்கப்பட்ட இப்படையணியின் பொறுப் பாளராக நியமனம் பெற்று இறுதிவரை 'விக்ரர் கவச எதிர்ப்புப் படையணியின் வேராக விழுதாக வாழ்ந்து வீரச்சாவடைந்தார் தளபதி லெப்.கேணல்.அக்பர் அவர்கள்.' விக்ரர் கவச எதிர்ப்புப் படையணியின் வரலாற்றில் அக்பர் அவர்களைத் தவிர்த்து வரலாற்றை எழுத முடியாத அளவு அக்பர் அவர்களின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் ஆணிவேராகியதை என்றென்றும் வரலாறு சுமந்து கொண்டே செல்லும்.

இவ்வாறு பல தளபதிகள் போராளிகள் மாவீரர்களின் தியாகத் தால் உருவாகிய; விக்ரர் கவச எதிர்ப்புப் படையணியில் சிரித்திரனும் இணைந்து கொண்டதும் கவசங்களை உடைத் ததும் இன்னொரு வரலாற்றின் பரிணாமம் தான்.

யுத்தம் சமாதானம் இரண்டிற்கும் இடைப்பட்ட காலமொன்றை சர்வதேசத்தலையீடு உருவாக்கிய காலம். 2001 சிங்கள ஆள ஊடுருவும் படையணி ஆதிக்கம் வன்னி நிலத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. அது RPG கொமாண்டோக்களின் தேவை களும் அவசியமும் குறைந்த காலம்.

சிங்கள ஆள ஊடுருவும் படையணியின் ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டிய சவால் நிறைந்த நேரமது. RPG கொமாண்டோவில் இருந்த போராளிகள் தரைக்கரும்புலியாவதற்கு தங்களை இணைக்குமாறு தலைவருக்கு கடிதம் எழுதிவிட்டுக் காத்திருந் தார்கள். அவர்களில் சிரித்திரனும் தரைக்கரும்புலியாக தலை வருக்கு கடிதம் எழுதிவிட்டுக் காத்திருந்தான்.

கரும்புலிகளுக்கு நிகரான ஆள ஊடுருவும் படையணியின் உருவாக்கத்தை தலைவர் தனது நேரடி நெறிப்படுத்தலில் ஆரம்பிப்பதற்கான தருணமும் வந்தது. அப்போது திடீரென ஒருநாள் கரும்புலிகளுக்காக கடிதம் எழுதிய போராளிகளைச் சந்தித்தார். கரும்புலியாக விரும்பிய அனைவரையும் புதிதாக உருவாக்கம் பெறும் ஆளு ஊடுருவும் அணிக்கான பயிற்சிக்கு தயாராகுமாறு அழைத்தார்.
தலைவன் அருகாமையில் தலைவனின் கண்காணிப்பின் கீழ் அமைந்த அந்த சிறப்பு அணியில் எங்கள் சிரித்திரனும் இணைந்து கொண்டான். குறித்த நேரத்தில் செய்து முடிக்கப் பட்ட வேண்டிய தெரிவுப்பயிற்சிகளில் சிரித்தின் தனது திறனை வெளிப்படுத்தி தெரிவாகி சிறப்புப் பயிற்சியினை முடித்திருந் தான்.

இக்காலத்தில் திறமையாகச் செயற்பட்ட சிரித்திரனின் திற மையை அவதானித்த ரட்ணம் மாஸ்ர் தலைவரின் பாதுகாப்புப் பணியில் சிரித்திரனை இணைத்துக் கொண்டார். அவனது ஆற்றலும் எடுத்த காரியத்தை சாதிக்கும் வல்லமையும் தலை வரின் பிரத்தியேக உதவியாளராகத் தெரிவு செய்யப்பட்டு தலை வரின் நன் மதிப்பையும் அன்பையும் பெற்றான் எங்கள் சிரித்திரன்.

சிரித்திரன் என்றால் அவனை யாரும் மறந்துவிடமாட்டார்கள் அந்தளவு எல்லோருக்கும் பிடித்த போராளி. அவனது சிரித்த முகம், அவனில் சிறப்பாயமைந்த பண்புகள், எல்லோரையும் எளிதில் கவர்ந்துவிடும் பன்முக ஆற்றலுமே எல்லோரிடத்திலும் அவனை அடையாளப்படுத்தியது.

சிறந்த சண்டைக்காரன் மிகப்பெரும் ஆற்றலையெல்லாம் அள்ளி வைத்திருந்த பெருமைக்குரியவன் ஆனாலும் தனது



கரும்புலிக் கனவை கைவிடாமல் தலைவரின் பிரத்தியேக செயலாளர் பணியின் இடையிலும் தனது கரும்புலியாகும் விருபத்தை தெரிவித்துக் கொண்டேயிருந்தான். குறைந்த இழப்பில் பெரும் இழப்பை எதிரிக்கு வழங்கி பெரிய வெற்றிகளைக் குவிக்கும் சிந்தனையே அவனது செயல்கள் ஒவ்வொன்றின் பின்னாலும் இருந்தது.

தனது தரைக்கரும்புலியாகும் எண்ணத்தை தலைவருக்கு எழுதிவிட்டு கரும்புலியாகும் கனவோடு தான் தனது பணிகளைச் செய்து கொண்டிருந்தான். வெளியில் தென்றலாய் சிரிப்பவன் உள்ளுக்குள்ளே எரிமலையை வளர்த்துக் கொண்டேயிருந்தான். இதயத்தில் ஈரமும் விழிகளில் நெருப்பையும் ஒன்றாய் கொண்ட தேசப்புயல் அவன்.

சிரித்திரனின் இனிமையான சுபாவம், அன்பு, ஆழுமை, ஆற்றலை அவதானித்த தலைவர் சிரித்திரனையும் மேலும் சில போராளிகளையும் வெளிநாட்டுக் கட்டமைப்பிற்குள் பணிக்கு அனுப்புவதற்கு முடிவெடுத்தார். காரணம் சிரித்திரனின் வல்லமையும் ஆற்றலும் தமிழீழ தேசத்திற்கு மேலும் பயனையும் பன்முக ஆற்றலையும் கொண்டவர்களை உருவாக்கும் திறனையுடையது. அத்தகைய திறமையாக தலைவரின் எண்ணத்திற்கு ஏற்ப சிரித்திரன் தன்னை ஆற்றலாளன் ஆக்கியிருந்தான். தலைவர் அதிகளவில் அவனிடமிருந்து எதிர்பார்த்தார். ஏனெனில் அவனது ஆற்றல் அந்தளவு பெறுமதியானவை.

ஆனால் தனது பணியை தாயகத்தை விட்டுப் புலம் பெயர்ந்து செய்ய மறுத்து மண்ணில் நிற்பதையே விரும்பினான். தனது முடிவில் தளம்பாமல் ஒரே முடிவாக தாயகத்தில் இருந்து பணி செய்யப்போகிறேன் என்றே வெளிநாட்டுப் பயணத்தை மறுத்திருந்தான். கடைசியில் அவனது விருப்பமே நிறைவேறியது. அவன் வெளிநாடு சென்றிருந்தால் ஆயிரம் சிரித்திரன்களை அவனால் உருவாக்கியிருக்க முடியும். ஆனால் தான் நேசித்த தலைவனை தளபதிகளை போராளிகளைப் பிரிய விரும்பாமல் அவர்களுடனேயே வாழ விரும்பிய இனியவன்.

இக்காலத்தில் தான் சிரித்திரனின் ஆற்றல் அவதானிக்கப்பட்டு வான்புலிகள் அணியில் இணைவதற்கான அழைப்பு வந்தது. வான்புலிகளின் தேவையை உணர்ந்த சிரித்திரன் மகிழ்சசியோடு வான்புலிகள் பயிற்சிக்குச் சென்றான். பின்னால் உலகையே வியக்க வைக்கும் வான்கரும்புலியாகப் போவானென்று யாருக்கும் தெரியாது. ஆனால் அவன் கரும்புலியாகவே தன்னை வளர்த்துக் கொண்டான்.

* * *

வான்புலிகளின் வரலாறு 1985 - 1986களில் உருவாக்கம் பெற்று விமானம் கட்டும் பணிகளும் ஆரம்பித்த காலமது. மெல்ல மெல்ல கால ஓட்டத்தோடு புலிகளின் வான்புலிகள் அணியானது உயிர் பெற்று உருவாக்கப்பட்டது. முதல் முதலாக 1998 மாவீரர் நாள் மாவீரர் உரையில் தலைவர் பிரபாகரன் அவர்களால் வான்புலிகள் படையணி தொடர்பான அறிவிப்பு அறிவிக்கப்பட்டது. 2000ம் ஆண்டு வான்புலிகள் ஆண்டாக விடுதலைப்புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்டு வான்புலிகள் வரலாறு எழுதப்படத் தொடங்கியது.

வான்புலிகளின் வேராகவும் அந்தப் படையணியின் உருவாக்கத்திலும் முக்கிய பங்காக இருந்து இயங்கியவர் தளபதி கேணல் சங்கரண்ணா அவர்கள். சென்னையில் பொறியியல் கல்லூரியில் ஏறோனோட்டிக்ஸ் பிரிவில் BA படித்து முடித்த தளபதி சங்கரண்ணா அவர்கள் கனடா நாட்டிற்குச் சென்று கனடா விமான நிறுவனத்தில் பொறியியலாளராகப் பணி புரிந்தார்.

வெளிநாட்டு வாழ்வை விட்டு தாயகம் திரும்பியவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து புலியாகிப் பல போராளிகளை வளர்த்தெடுத்ததோடு நின்று விடாமல் வான்புலிகளின் தோற்றமும் அவராகினார். வான்புலிகள் உருவாக்கத்தில் உறக்கம் மறந்து இறுதிவரை உழைத்த வீரன் தளபதி சங்கரண்ணா. 2001 செப்ரெம்பர் தியாகி திலீபனின் நினைவுநாளில் சங்கரென்ற இமயம் இலங்கையரசின் ஆழ ஊடுருவும் படையணியால் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். எனினும் வானுயர்ந்த புலிவீரம் வான்புலிகள் வளர்சியில் வெகவேகமாக முன்னேற்றமடைந்து வளர்ந்தது.

* * *

விமானப்பயிற்சியை முடிப்பதற்கு சாதாரணமாக 2வருடங்கள் வரை செல்லும். ஆனால் சிரித்திரனும் அவனுடனான போராளிகளும் இரவு பகல் ஓய்வு ஒளிவின்றி இயங்கி 3மாதத்தில் பயிற்சியை முடித்துக் கொண்டார்கள். அதுவும் வன்னி நிலத்திலேயே வான்புலிகள் பயிற்சியினையும் பயின்று பயிற்சியை நிறைவு செய்தார்கள்.

பின்னாளில் வான்புலிகளின் வரலாறும் பயிற்சிகள் எங்கே பெற்றிருக்கலாம் என்ற இராணுவ ஆய்வாளர்களின் புனைவுகளும் கற்பனைகளும் ஊடகங்களை நிறைத்தது. எனினும் எவராலும் கண்டறிய முடியாது வான்புலிகளின் வீரம் நிமிர்ந்தது தான் உண்மை வரலாறு.

உலகில் எங்குமே நிகழ்ந்திராத மாற்றத்தை புலிகளின் வான்புலி வீரர்கள் நிகழ்த்திக்காட்டினர். வானோடிக்கான பயிற்சியில் சிரித்திரனின் ஆற்றலை நேரிலிருந்து பார்த்த சாட்சியங்கள் இன்றும் அவனை அதிசயிக்கும் அதிசயமாய் அவன் நிமிர்ந்து நிற்கிறான்.

சிங்கள தேசத்தினால் வன்னி வான்பரப்பில் பறக்க அனுப்பப்படும் ஆளில்லாத வேவு விமானங்களின் தொல்லைகள் அதிகரித்திருந்த காலமது. இவ் ஆளில்லா விமானங்களை சிங்கள தேசம் மிகப்பெரும் செலவில் கொள்வனவு செய்திருந்தது. இவ் ஆளில்லா வேவு விமானத்தை அழிக்க சிரித்திரனும் சக வான்புலி ஒருவரும் மேற்கொண்ட தாக்குதல் பற்றி சிங்கள தேசம் கூட செய்தியை வெளியில் விடாமல் இயந்திரக்கோளாறென்று கதையை முடித்த சம்பவம் ஒன்று வன்னி வான்பரப்பில் நிகழ்ந்திருந்தது.

தனது நவீன தொழில்நுட்பத்தினை எவராலும் அழிக்க முடியாதென்று இறுமாந்திருந்த சிங்கள தேசத்திற்கு எங்களால் எதுவும் முடியும் என்று செய்து நிரூபித்துக்காட்டிய சம்பவம் :-

அன்றொருநாள் வன்னி வானில் திமிரோடு பறந்த ஆளில்லா வேவுவிமானத்தை சிரித்திரனும் அவனது தோழனும் சுட்டு வீழ்த்தியிருந்தார்கள். அந்த ஆளில்லா விமானத்தை புலிகளின் விமானத்திலிருந்தே சுட்டு வீழ்த்தியிருந்தார்கள் என்பதனை இன்று வரை சிங்கள தேசம் கூட அறிந்திருக்காத உண்மை.

இத்தாக்குதலானது மிகவும் ஆபத்தும் சவாலும் நிறைந்தது. புலிகளின் விமானப்பறப்பு அடையாளம் காணப்பட்டால் அவர்களின் தரையிறக்கும் இடம் அடையாளம் காணப்படும். அடையாளம் காணப்படும் போது கிபிர் விமானங்களின் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலமையும் உருவாகும்.

வான்புலிகளின் விமானமும் பாதுகாப்பாக தரையிறங்க வேண்டும் அதேநேரம் தரையிறங்கும் இடமானது எதிரி அறியாமல் பாதுகாக்கப்பட வேண்டும். எல்லா பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே தாக்குதலை நிகழ்த்த வேண்டும்.

ஆளில்லா வேவு விமானங்கள் வீதியில் வேகமாக செல்கின்ற இரு சக்கர ஊர்தியின் இலக்கத்தைக் கூட துல்லியமாகக் கணிக்கக் கூடிய தொழில்நுட்பத் திறனைக் கொண்டது. இத்தனை சிறப்புகளைக் கொண்ட ஆளில்லா வேவு விமானம் வன்னியின் வான்பரப்பில் பறந்து கொண்டிருந்தது.

ஒரு விமானம் பறத்தலில் ஈடுபடும் பகுதியில் அந்த விமானத்தின் உயரத்திற்கு மேல் பறந்து தாக்குவது என்பது இலகுவானது அல்ல. ஆனால் வான்புலிகளால் எங்கும் செல்லவும் வெல்லவும் முடியும் என்பதனை சிரித்திரனும் அவனது தோழனும் நிரூபித்துக் காட்டினர்.

எதிரி விமானம் பறந்து கொண்டிருந்த சமநேரம் சிரித்திரனும், அவனது தோழனும் தங்கள் விமானத்தை எதிரி விமானத் திற்கு மேலாக உயரப் பறந்து மேலிருந்து ஆளில்லா வேவு விமானத்தைச் சுட்டுவீழ்த்தித் தரையிறங்கினார்கள்.

சிங்கள தேசம் இயந்திரக்கோளாற்றினால் வீழ்ந்ததாகச் சொல்லி தனது இழப்பை வெளியில் தெரியாமல் மறைத்துக் கொண்டது. இந்த மர்மம் பற்றி ஆய்வுகளும் அறிக்கைகளும் பல வடிவங்களின் அப்போது ஆராயப்பட்டது வேறுகதை.

வார்த்தைகளை விடவும் வரலாற்றைப் படைத்தவர்கள் புலிகள். அவ்வரலாற்றின் சுவடுகளில் சத்தமின்றிச் சாதித்துவிட்டு தரை யிறங்கிய சிரித்திரனும் அவன்கூட அத்தாக்குதலில் இணைந் திருந்த தோழனும் அன்றைய ஆய்வுகளின் கதாநாயகர்கள். ஆனால் அந்த வேர்கள் வெளியில் வராமல் வெற்றியைத் தந்துவிட்டு அமைதியானார்கள்.

* * *

1998 மாவீரர் நாளன்று வான்புலிகள் பயிற்சியை முடித்த வான்புலி மறவர்கள் விமானத்திலிருந்து முதல் முதலாய் முள் ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் பூத்தூவி தங்கள் முதல் பயணத்தை ஆரம்பித்திருந்தார்கள். அன்றைய நாள் தலை வரினால் அதிகாரபூர்வமாக வான்புலிகள் படையணியின் உருவாக்கம் பற்றிய அறிவிப்பு நிகழ்ந்தது.

வான்புலிகள் உருவாக்கப்பட்டு முதல் முதலாக எரித்திரியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 2 விமானங்கள் முதல் முதலாக வான்படையை உருவாக்கிய எங்கள் தலைவனும் தளபதிகளும் நேரில் பார்வையிட்டு வான் புலிவீரத்தின் அடையாள முகங்களை வாழ்த்தி வரவேற்றார்கள். அவ்விமானங்கள் பின்னர் வரிநிறம் பூசப்பட்டு தாக்குதலுக்கு தயார் செய்யப்பட்டது.

சிறிய ரக விமானம் நெடுந்தூரம் சென்று வருவதற்குப் போதிய எவு எரிபொருள் போததது. ஆனால் தாக்குதலுக்குச் சென்று திரும்புவதற்குத் போதியளவு எரிபொருளை மீதப்படுத்த அவர்கள் மேற்கொண்ட உத்திகளை உலகம் அறிந்ததில்லை.

விமானத்தை வழங்கிய நிறுவனத்தால் கூட நெடுந்தூரத்துக்கான பயணத்தினைச் செய்ய முடியாதெனத் தெரிவிக்கப்பட்டும் வான்புலிகள் எரிபொருளை சேமிக்கும் வகையில் விமானத்தை மேலேற்றிப் பறந்து வெற்றியுடன் தாக்குதல்களை நடாத்திவிட்டுத் திரும்பும் வீரத்தையும் வித்தியாசமான உத்தியையும் எவரும் அறிந்திருக்கவே இல்லை. வான்புலிகளின் தோற்றமும் தாக்குதல் வியூகங்கள் வெற்றிகள் உலகிற்குப் புரியாத புதிர்களாகவே அமைந்தது.

* * *

தமிழர் நிலத்தைத் தேடி வந்து தாக்கி உயிர்களைப் பலியெடுத்துக் கொண்டிருந்த அரசின் தலைமை மையத்தினுள் 'காற்றிலேறியே விண்ணையும் சாடுவோம்' என விடுதலைப் புலிகளின் வான்புலிகள் 26.03.2007அன்று கட்டுநாயக்கா இராணுவ விமானப்படைத்தளத்தின் மீது தாக்குதலை நடாத்தி வான்புலிகளின் இருப்பை உலகிற்கும் அதேவேளை இலங்கையரசிற்கும் அறிவித்தனர்.

இதுவே முதல் முதல் புலிகள் உரிமையேற்ற முதல் வான்தாக்குதல் ஆகும். அந்தத் தாக்குதலில் சிரித்திரனும் விண்ணிலேறி வீரனாய் நீலப்புலியுடையில் வானோடியாய் போனான். எங்கள் நிலத்தில் வந்து எங்கள் குடிமனைகளையும் குழந்தைகளையும் அழித்தவர்களின் வானில் நின்று தாக்குதல் மேற்கொண்டு திரும்பிய வான்புலிகளில் எங்கள் சிரித்திரனும் ஒருவன்.

22.10.2007 அன்று அனுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட எல்லாளன் நடவடிக்கையில் வான்புலிகளின் பங்கும் அளப்பரியது. திங்கள் அதிகாலை அனுராதபுரத்தினுள் ஊடுருவிய 21 சிறப்பு ஆண் பெண் கரும்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் அனுராதபுரம் வான்படைத்தளம் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வீழ்ந்தது. புலிகளின் வான்படையினர் துணையாக அனுராதபுர வான்படை மையத்தினுள் குண்டுகளை வீசி சேதத்தை விளைவித்தனர்.

திங்கள் பகல் 11மணிவரையும் கரும்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அனுராதபுரத்தளத்திற்கு ஆதரவு வழங்க வவுனியாவிலிருந்து அனுப்பப்பட்ட பெல் 212 உலங்குவானூர்தி மிகிந்தலைப்பகுதியில் வைத்து விமான எதிர்ப்பு அணியினரின் தாக்குதலுக்கு உள்ளாகி இலங்கையரச வானோடிகளும் உலங்குவானூர்தியும் அழிந்து போனது. இலங்கையரசின் வான்படைபலமானது பெரும் வீழ்ச்சி கண்டது இப்பெரும் அழிவில் தான்.

22.10.2007 அன்று 21 விசேட கரும்புலிகள் அணிக்கு ஆதரவாக தாக்குதலில் ஈடுபட்டு எல்லாளன் வாழ்ந்த மண்ணில் புலிவீரத்தை அறியச்செய்த மாவீரர்களின் தியாகத்தில் உலகமே திகைத்தது. அந்த வரலாற்று வெற்றியில் சிரித்திரனும் பங்கேற்றுத் தளம் திரும்பியிருந்தான்.

வான்புலிகள் ஐரோப்பிய நாடுகளில் பயிற்சி பெற்றிருக்கலாம் என தனது இராணுவ ஆய்வில் இராணுவ ஆய்வாளரெனப்படும் இக்பால் அத்தாஸ் கட்டுரையெழுதியிருந்தார். அதேபோல மேலும் சில ஊடகங்கள் மலேசியாவில் பயிற்சிகள் பெற்றிருக்



கலாம் எனவும் ஆளாளுக்கு ஆய்வுகள் செய்து கொண்டிருந்தார்கள்.

எல்லா ஆய்வுகளையும் விஞ்(மி)சிய வான்புலிவீரத்தை இது வரையில் எந்த ஆய்வுகளும் ஆராட்சிகளும் அதன் அடி முடியைக் கண்டறியவில்லை. தென்னிலங்கையை கலங்கடித்து தென்னிலங்கையில் மட்டும் 7தடவைகள் சென்று தாக்குதலை நடாத்திவிட்டுத் திரும்பினர் வான்புலிகள்.

அனைத்து நவீன வளங்களையும் அறிகருவிகைளயும் பொருத்தி வானிலேறும் வான்புலிக்கலங்களைத் தேடிக்கொண்டிருந்தது சிங்கள தேசத்தின் தொழில்நுட்பம். அவற்றையெல்லாம் தாண்டி கட்டுநாயக்கா, அனுராதபுரம், கொலன்னாவை என வான்புலிகளின் வீரம் உலகை வென்றிருந்தது.

ஓரிடத்திலிருந்து மேலெழும் விமானம் திரும்பி வருகிற போது போதிய எரிபொருளைக் கொண்டிராது. எனினும் பிறிதொரு இடத்தில் தரையிறங்கி பாதுகாப்பாக வான்கலங்களையும் கொண்டு வந்து சேர்க்கும் திறன் வான்புலிகளுக்கானது. சாவல்களைத் துணிச்சலோடு ஏற்று சாதிக்கவும், முடியாதென்ற எல்லாவற்றையுமே மனபலத்தால் செய்து முடித்துக் காட்டிய புலிவீரத்தின் வரலாற்றில் வான்புலிகள் வீரமும் வித்தியாசமானது.

வவுனியா கூட்டுப்படைத்தளம் மீதான வான்புலிகளின் தீரமிகு தாக்குதலை நடாத்தியதற்காக 'நீலப்புலி மறவர்' விருதினை வான்புலிவீரர்களுக்கு வழங்கி மதிப்பளித்துக் கௌரவித்தார் தேசியத்தலைவர்.

அதேபோல களனிதிச அனல்மின் நிலையத்தின் மீதான தாக்குதல் உட்பட 5தடைவைக்கு மேல் வான்தாக்குதல்களை நடாத்தி சிங்களத்திற்கு பெரும் பொருளாதார அழிவையும் இழப்பையும் ஏற்படுத்திய வான்புலிகளுக்கு 'நீலப்புலி' விருதினையும், இத்தாக்குதல்களுக்கு துணையாக செயற்பட்டு தாக்குதல் நடாத்திய துணை வானோடிகளுக்கு 'மறவர்' விருதினையும் வழங்கினார் தலைவர். இப்படித்தான் வான்புலிகளின் வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருந்தது. தரை கடல் பலத்துக்கு நிகராக எங்கள் தலைவன் படைத்த வான்புலிகளின் சாதனைகளை வெற்றிகளை என்றென்றும் பெருமையுடன் நினைவு கொள்கிறோம்.

* * *

ஈழத்தமிழர் வரலாற்றில் கண்ணீரையும் துயரையும் அவலத்தையும் தந்த மறக்க முடியாத ஆண்டு 2009. தமிழனத்தின் அரசியல் வெளியில் பெரும் வெற்றிடத்தையும் இட்டு நிரப்ப முடியாத இழப்புகளையும் தந்த 2009ம் ஆண்டில் வீரமும் எங்கள் விடுதலையின் அடையாளங்களும் ஒன்றாய் அழிக்கப்பட்டு ஏதிலிகளாக நாங்கள் ஆகிப்போன விதியை எழுதியதும் இதே வருடம் தான்.

அவலங்கள் நிறைந்த 2009இல் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மெல்ல மெல்ல எதிரியின் கையில் இழக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு விடுதலையமைப்பிற்கு எதிராக உலகம் கூட்டுச்சேர்ந்து 30ஆண்டுகால விடுதலைப் பயிரை அதன் வீரியத்தை வீரத்தை பலியெடுத்துக் கொண்டிருந்தது.

எதிரியின் கொலைவலயத்தினுள் வன்னி நிலம் முழுமையாகி இழக்கப்பட்டு எஞ்சிய முல்லைத்தீவும் இதோ அதோ என்ற நிலமையில் இருந்த போது மாற்று வழி ஏதோவொன்றைத் திறக்க வேண்டுமென்று திட்டமிடலில் இறங்கியது வான்புலிகள் அணி.

புதுக்குடியிருப்பு எதிரியிடம் பறிபோனால் மீள்வதற்கான வழிகள் யாவும் போய்விடும் என்பதனை உணர்ந்த வான்புலிகள் கேணல் ரூபன், லெப்.கேணல். சிரித்திரன் இருவரும் ஏதாவது செய்ய வேண்டுமென்று முன்வந்து வான்கரும்புலிகளாகினார்கள்.

கேணல் ரூபன் தனது கடைசிப் பயணத்திற்கு தயாராகிய நேரம் தான்நேசித்த மக்களுக்கு தனது இறுதி மடலை எழுதிவிட்டு தோழன் சிரித்திரனோடு புறப்பட ஆயத்தமானான். 2002களிலிருந்து ஒருநாள் வானேறி பகைவன் பலத்தையழிப்பேனென்று சொல்லிக் கொண்டிருந்த ரூபன் கனவும் அன்று கைகூடும் நாளாக...!

விமானத்தை வானேற்றக்கூட பொருத்தமான வான்தளமோ வசதியோ எதுவுமில்லாத சுற்றிவர எதிரியின் கொலை வளையத்தினுள் இருந்து கொலைஞர்களின் கோட்டையில் பேரிடியை இறக்கும் கனவோடு நந்திக்கடல் வெட்டையிலிருந்து புறப்பட்டார்கள் சிரித்தின், ரூபன். 3லட்சத்துக்கும் மேலான மக்கள், போராளிகள் சாட்சியாக கேணல் ரூபன், லெப்.கேணல். சிரித்திரன் வானேறினார்கள்.

அந்த நேரத்து மனவுணர்வுகளையும் அவர்களது தூய்மையான தேசத்தின் மீதான அன்பையும் விடுதலைக் கனவையும்








இன்றுவரை உலகம் புரிந்ததில்லை. அவர்கள் புரியாத புதிர்களாகவே என்றும்...! ஆனால் எங்களால் புரிந்து கொள்ளப்பட்ட புனிதங்களாக நெஞ்சம் முழுதும் அவர்கள் நினைவுகள்...!

கொழும்பு நகரம் வான்புலிகள் வரவில் விழித்துக் கொண்டது. சிங்களத்தின் வான்படைத் தலைமையகம் மற்றும் கட்டுநாயக்கா வானூர்த்தித் தளத்தை அழிக்கும் கனவோடு ரூபன், சிரித்திரன் எதிரியின் மையத்தை நெருங்கியிருந்தனர்.

கொழும்பு மாநகரம் பயத்தில் உறைந்தது. வெளிச்சம் நிறைந்த தெருக்கள் இருளில் நிறைந்தது. சிரித்திரன், ரூபன் வரவில் சிங்களம் திகைத்தது. மரண வாசனையைக் கொழும்பு உணர்ந்தது. சாவின் பயத்தைக் சிங்கள தேசம் நுகர்ந்தது. தமிழனித்தின் வரலாற்றை அதன் வீரத்தை 30ஆண்டு விடுதலைப் போராட்டத்தை அழித்துவிடும் முனைப்போடு ஆயிரக்கணக்கில் வன்னியைத் தின்று கொண்டிருந்த படைகளின் நெஞ்சிலும் ரூபன், சிரித்திரன் பூகம்பச்சுழியாய் பயமுறுத்திக் கொண்டிருக்க வான்புலிவீரர்கள் இருவரும் வானிலே வரலாறு படைத்திட சிங்கள வான்பரப்பில்...!

வெற்றிச் செய்திக்காகக் காத்திருந்தது வன்னிமண். வான்கரும்புலிகள் இருவரும் எதிரியின் இலக்கை மிகவும் அண்மித்திருந்தார்கள். இலக்கை எட்டும் தொலைவில் புலிகளின் வானுர்தி சிங்களதேசத்து வானில்...! சிரித்திரன், ரூபன் கனவு நனவாகும் கணங்கள் இலக்கு மிக அண்மையாகியிருந்தது.

எல்லாம் சரியாக அமைந்து இறுதிக்கட்டத்தில் தாயகக்கனவோடு தமிழரின் சேனையின் வீரத்தைச் சுமந்து புறப்பட்ட வான்கலம் எதிரியின் வானெதிர்ப்பு ஆயுதங்களால் அழிக்கப்பட்டு எங்கள் ரூபனும், சிரித்திரனும் தாயகத்திற்கான பயணத்தில் தங்கள் உயிர்களைத் தந்து எதிரி தேசத்தில் உயிரை விதைத்து காற்றிலேறி விண்ணையும் சாடும் வீரத்தை எழுதி விட்டு அமைதியாகிப் போனார்கள்.

அவர்களது தாக்குதல் நினைத்தபடி வெற்றியில்லாது போனாலும் சிங்கள தேசத்தை சேதப்படுத்தி அச்சமூட்டி எங்கள் வீரத்தை அடையாளப்படுத்திவிட்டு இருவரின் மூச்சும் சிங்கள தேசத்தில் நிறைந்தது.

தலைவனின் நிழலில் வளர்ந்து வென்றுவரப்போன சிரித்திரனையும் ரூபனையும் எங்கள் தேசம் இழந்தது. ஒருகணம் சுவாசத்துடிப்பெல்லாம் நின்றுவிட்டாற்போலவே அவர்களது தியாகம் அவர்களை நேசித்த எல்லோரின் நெஞ்சிலும் துயரிடி.

வானில் பறந்தவர்கள் வானிலே தங்கள் வீரத்தையெழுதிய விலாசம் மறந்த விடிவெள்ளிகள். தங்களின் தாக்குதலில் போர்க்கள நிலமையில் மாற்றம் வருமென்று நம்பிப்போன இரு வீரர்களின் நம்பிக்கையும் கானலாகிப் போனதையும் அறியாமல் ஒருநாள் ஈழம் விடியும் எனும் கனவோடு போன ரூபன், சிரித்திரன் கனவுகள் உலகெங்கும் வியாபித்துக் கிடக்கிறது.

இறுதியாய் சிரித்திரன், ரூபன் சொல்லிவிட்டுப் போன வார்த்தைகளும், எங்கள் முன்னால் விதைத்துச் சென்ற கனவுகளும் இன்னும் ஆறாத , மாறாத காயத்தைத் தந்த போதும் அவர்கள் கனவை நனவாக்கும் வேகத்தோடும் விடுதலையின் மீதான தாகத்தோடும் நகர்கிறது.

ஒவ்வொரு மாவீரரின் நெஞ்சிலும் மூண்ட நெருப்பு ஒருநாள் பிரளமாய் எங்களை ஏமாற்றி எங்கள் தேசத்தை அழித்தவர்கள் வீடுகளில் நிச்சயம் இடியாகும். அழிவைத் தந்த ஒவ்வொரு வீட்டிலும் எங்களது விடுதலைக்காய் இழக்கப்பட்ட லட்சக்கணக்கான உயிர்களின் பேரோசை ஒலித்தபடியே இருக்கும்... அது விடுதலையடையும் வரையும் விழித்தபடியே...! உயிர்த்தபடியே...!

நினைவுப்பகிர்வு
நன்றி: சாந்தி ரமேஷ், வவுனியன்

# கரும்புலிகள் நாள்

## யூலை 05



**தேசத்தின் விடியலுக்காய் உயிர்க்கொடை தந்தவரே**
**ஒளி வீசும் உம் பாதங்கள் என்றென்றும் உயிர் தரும்**

**Oh you who sacrificed you precious lives**
**For our country's dawn of freedom**

**சாவுக்கு தேதி குறிக்கும் சரித்திரங்கள்**
**கந்தகத்தை மேனியிற் கட்டிய சந்தனங்கள்**
**வீதியுலாவுக்காக வெளியில் வராத விக்கிரகங்கள்**
**உயிர்மூச்சை ஊதிவிடும் உயிராயுதங்கள்**

# நெருப்பு மனிதர்கள்

## தமிழீழ விடுதலைப்போரில் காவியமான கரும்புலிகளின் விபரங்கள் 05.07.1987 தொடக்கம் 09.03.2009 வரை



கரும்புலி கப்டன் மில்லர்
வல்லிபுரம் வசந்தன்
துன்னாலை தெற்கு,
கரவெட்டி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 05.07.1987
★★★



கரும்புலி லெப்.கேணல்
போர்க்
மாப்பாணப்பிள்ளை
அரசரத்தினம்
ஆறுமுகத்தான்புதுக்குளம்,
ஓமந்தை, வவுனியா.
வீரச்சாவு: 23.11.1990
★★★



கடற்கரும்புலி மேஜர்
நிலவன்
(வரதன்) கந்தசாமி
இராமசந்திரன்
கள்ளிச்சை, வடமுனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 26.08.1993
★★★



கடற்கரும்புலி மேஜர்
கணேஸ்
நாகநாதி ஜீவநேசன்
புத்தூர் மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி கப்டன் சீராளன்
ஞானப்பிரகாசம் ரஞ்சன்
உயிர்த்தராசன்குளம்,
முருங்கன், மன்னார்.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கடற்கரும்புலி மேஜர்
காந்தரூபன்
யோகராசா
கோணேஸ்வரன்
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.07.1990
★★★



கரும்புலி மேஜர் டாம்போ
காசிப்பிள்ளை தயாபரன்
நாச்சிக்குடா சந்தி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 19.03.1991
★★★



கடற்கரும்புலி கப்டன் மதன்
சீனிவாசகம் சிவகுமார்
எல்லைவீதி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 26.08.1993
★★★



கரும்புலி மேஜர்
தொண்டமான்
கண்ணப்பர் நல்லதம்பி
ஊர்காமம், ஊற்றுச்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி கப்டன்
செந்தமிழ்நம்பி
செல்லத்துரை ஜெகன்
கோப்பாய், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கடற்கரும்புலி கப்டன்
கொலின்ஸ்
பர்ணாந்து சில்வெஸ்டர்
நறுவிலிக்குளம், மன்னார்.
வீரச்சாவு: 10.07.1990
★★★



கடற்கரும்புலி கப்டன்
ஜெயந்தன்
சம்புக்குட்டி பத்மநாதன்
சோதிபுரம், மட்டக்களப்பு.
வீரச்சாவு: 04.05.1991
★★★



கடற்கரும்புலி மேஜர்
புகழரசன்
(புவீந்திரன்) சுப்பிரமணியம்
நாதகீதன்
அரியாலை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.08.1993
★★★



கரும்புலி மேஜர்
கலையழகன்
பொன்னையா பேரின்பராசா
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி கப்டன் ஐயனார்
செல்வநாயகம் இராசசேகரம்
அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கடற்கரும்புலி கப்டன்
வினோத்
வேலுப்பிள்ளை திலகராசா
காட்டுவளவு,
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.07.1990
★★★



கடற்கரும்புலி கப்டன்
சிதம்பரம்
பெரியதம்பி சந்திரன்
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 04.05.1991
★★★



கடற்கரும்புலி கப்டன்
மணியரசன்
வேதநாயகம் ராஜரூபன்
மணற்காடு, குடத்தனை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.08.1993
★★★



கரும்புலி கப்டன் கரிகாலன்
இரத்தினசிங்கம் பிரபாகரன்
திருகோணமலை.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி கப்டன்
சிவலோகன்
சின்னத்தம்பி அருளானந்தம்
7ம் வட்டாரம், முனைக்காடு,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி கப்டன்
மதிநிலவன்
கணபதிப்பிள்ளை தவராசா
திருகோணமலை.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி லெப்டினன்ட்
கண்ணன்
நவரட்ணம்
நேசகுலேந்திரன்
உடுத்துறை வடக்கு,
தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி லெப்டினன்ட்
ஜீவரஞ்சன்
கிருஸ்ணபிள்ளை
முருகுப்பிள்ளை
தும்பங்கேணி,
திக்கோடை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி லெப்டினன்ட்
நல்லதம்பி
தங்கராசா கோகுலநாதன்
கொக்கட்டிச்சோலை,
முதலைக்குடா,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி லெப்டினன்ட்
வீரமணி
தெய்வேந்திரம் சுதாகர்
வட்டுக்கோட்டை கிழக்கு,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கரும்புலி லெப்டினன்ட்
செங்கண்ணன்தனுஸ்கோடி
செந்தூர்
சாத்தூர், சிவகாசி, இந்தியா.
வீரச்சாவு: 11.11.1993
★★★



கடற்கரும்புலி மேஜர்
குமணன்
(கோபி) சுப்பிரமணியம்
செல்வலிங்கம்
ஜெயபுரம்,
பல்லவராயன்கட்டு,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 12.11.1993
★★★



கரும்புலி மேஜர் ஜெயம்
குணநாயகம் தேவராசா
பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்,
மூதூர், திருமலை.
வீரச்சாவு: 02.08.1994
★★★



கரும்புலி கப்டன்
நவரட்ணம்
கிருஸ்தோகுலெம்பேட்
அண்ணதாஸ்
மடு, மன்னார்.
வீரச்சாவு: 02.08.1994
★★★



கரும்புலி லெப்டினன்ட்
ரங்கன்
குணமாலை ரதிக்குமார்
நயினாதீவு, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.08.1994
★★★



கரும்புலி கப்டன் திரு
கோணமலை முகுந்தன்
இறக்காம வீதி, அம்பாறை.
வீரச்சாவு: 02.08.1994
★★★



கரும்புலி மேஜர் திலகன்
சுப்பையா ராஜ்
மாங்கேணி,
வாழைச்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 02.08.1994
★★★



கடற்கரும்புலி கப்டன்
அங்கையக்கண்ணி
துரைசிங்கம்
புஸ்பகலா
கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.08.1994
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
நளாயினி ஆறுமுகசாமி
பத்மாவதி
ஊறணி, வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.09.1994
★★★



கடற்கரும்புலி மேஜர்
மங்கை
கணபதிப்பிள்ளை
புவனேஸ்வரி
முள்ளியான், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.09.1994
★★★



கடற்கரும்புலி கப்டன்
லக்ஸ்மன்
(இசைவாணன்) குகதாசன்
பிரணவன்
நல்லூர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.09.1994
★★★



கடற்கரும்புலி கப்டன்
வாமன்
(தூயமணி) கந்தசாமி
ரவிநாயகம்
கோயில்போரதீவு,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 19.09.1994
★★★



கடற்கரும்புலி மேஜர் வித்தி
(வேதமணி) சந்தனம்
யோகேஸ்வரன்
மாத்தறை, சிறீலங்கா.
வீரச்சாவு: 08.11.1994
★★★



கடற்கரும்புலி மேஜர்
தணிகைமாறன்
யாக்கோப்
அன்ரன் பெனிற்
கட்டைக்காடு, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.04.1995
★★★



கடற்கரும்புலி மேஜர்
கதிரவன்
கோவிந்தன் சிவராசா
குமாரபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 19.04.1995
★★★



கடற்கரும்புலி மேஜர் மதுசா
முருகேசு இராசலட்சுமி
திருகோணமலை.
வீரச்சாவு: 19.04.1995
★★★



கடற்கரும்புலி கப்டன் சாந்தா
சிவசுப்பிரமண்யம்
விஜயதேவி
புங்குடுதீவு, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.04.1995
★★★



கடற்கரும்புலி மேஜர் தங்கன்
வீரய்யா மயில்வாகனம்
பிட்டமாறுவ, பதுளை, சிறீலங்கா.
வீரச்சாவு: 16.07.1995
★★★



கடற்கரும்புலி மேஜர் செந்தாளன் (நியூட்டன்) பிரான்சில் டக்ளஸ்
பசையூர், குருநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.07.1995
★★★



கடற்கரும்புலி கப்டன் தமிழினி
சிவப்பிரகாசம் கனிமொழி
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.07.1995
★★★



கடற்கரும்புலி மேஜர் நகுலன் (தோமஸ்) கந்தையா கிருஸ்ணதாஸ்
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 03.09.1995
★★★



கடற்கரும்புலி மேஜர் கண்ணாளன்
விநாயகம் இளையதம்பி
புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 03.09.1995
★★★



கடற்கரும்புலி கப்டன் அருள்ஜோதி
முத்துலிங்கம் சியாமளா
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.09.1995
★★★



கடற்கரும்புலி கப்டன் செவ்வானம்
கிருஸ்ணபிள்ளை சுமதி
மூளாய் தெற்கு, சுழிபுரம், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.09.1995
★★★



கடற்கரும்புலி கப்டன் சிவன் (சிவா) கிருஸ்ணபிள்ளை மோகனதாஸ்
1ம்வட்டாரம், மண்டைதீவு, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.09.1995
★★★



கடற்கரும்புலி மேஜர் கீர்த்தி
வல்லிபுரம் நகுலேஸ்வரன்
பேரலை, பளை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.09.1995
★★★



கடற்கரும்புலி மேஜர் அன்பு (அந்தமான்) இராமசாமி இராஜ்பவான்
அல்வாய் மேற்கு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.09.1995
★★★



கடற்கரும்புலி மேஜர் அருமை
செல்லத்துரை விஜயானந்தன்
புத்துவெட்டுவான், கிளிநொச்சி.
வீரச்சாவு: 02.10.1995
★★★



கடற்கரும்புலி கப்டன் தணிகை
கணபதிப்பிள்ளை வதனா
ரக்கா வீதி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.10.1995
★★★



கடற்கரும்புலி மேஜர் சிவசுந்தர்
சித்திரவேல் இராமச்சந்திரன்
உப்புவெளி, திருகோணமலை.
வீரச்சாவு: 17.10.1995
★★★



கடற்கரும்புலி கப்டன் ரூபன்
சுப்பிரமணியம் சுதர்சன்
கொடுவாமடு, செங்கலடி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 17.10.1995
★★★



கடற்கரும்புலி கப்டன் சிவகாமி
சண்முகலிங்கம் இராஜகுமாரி
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 17.10.1995
★★★



கரும்புலி கப்டன் சிறைவாசன் (திலீப்) நாராயணப்பிள்ளை விக்கினேஸ்வரன்
கொக்குவில், மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி கப்டன் அகத்தி
இராமநாதன் நடராசா
கல்முனை, அம்பாறை.
வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி கப்டன் ஜீவன் (தினகரன்) கணபதிப்பிள்ளை இராமணேஸ்வரன்
திராய்மடுக்கொலனி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி கப்டன் ஈழவன்
திருச்செல்வம் றொபேட்சன்
நவாலி தெற்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி லெப்டினன்ட் வேணுதாஸ் கந்தப்பொடி தர்மன்
கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி லெப்டினன்ட் நளினன் (கோவிந்தன்) திசநாயகம் உதயதாசன்
1ம் குறிச்சி, தம்புலுவில், அம்பாறை. வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி லெப்டினன்ட் கலைச்செல்வன் ஆறுமுகம் சந்திரகுமார்
அவிசாவளை, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.10.1995
★★★

**மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லா தொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம் அந்தத் தெய்வீகப் பிறவிகள் தான் கரும்புலிகள்.** - தேசியத் தலைவர்



கரும்புலி லெப்டினன்ட்
தொண்டன்
இராசரத்தினம்
கிருஸ்ணராஜ்
கச்சாய் வீதி, சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி லெப்டினன்ட்
தங்கத்துரை (ராகுலன்)
சீவரட்ணம் காந்தரூபன்
வசாவிளான், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி லெப்டினன்ட்
சசிக்குமாரன் செல்வராசா
ரொபின்சன்
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி 2ம் லெப்டினன்ட்
இசைச்செல்வன் நாகராசா
சண்முகசீலன்
பண்டத்தரிப்பு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.10.1995
★★★



கரும்புலி மேஜர் ரங்கன்
(தினேஸ்குமார்) ஜெஸ்டின்
யூட்நெவின்
மாங்கேணி,
வாழைச்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 05.12.1995
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
மதன்
(சோலைநம்பி)
யோகச்சந்திரன்
ரதீஸ்குமார்
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 13.02.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
வேங்கை
சூசைப்பிள்ளை
செல்வக்குமார்
பொலிகண்டி,
வல்வெட்டித்தறை,
யாழ்ப்பாணம். வீரச்சாவு:
13.02.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
ஜெகநாதன்
சங்கரப்பிள்ளை தவராசா
பத்தினிப்பாய், பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 30.03.1996
★★★



கடற்கரும்புலி கப்டன்
இளையவள்
இராசலிங்கம் இராஜமலர்
உவர்மலை,
திருகோணமலை.
வீரச்சாவு: 30.03.1996
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
நதீஸ்
(பிரதாபன்) அருமைசந்திரன்
செந்தில்குமார்
கந்தர்மடம் வேம்படி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
பொய்யாமொழி விசுவாசம்
டானியல்
திருகோணமலை.
வீரச்சாவு: 12.04.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
ஜெனாத்தனன்
(வீணைக்கொடியோன்)
சிற்றம்பலம் கிருஸ்ணதாஸ்
காங்கேசன்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
தென்னமுதன் (பரன்)
நாகேந்திரன் தங்கராசா
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★



கடற்கரும்புலி மேஜர் ரவாஸ்
(வளநாடன்) திருச்செல்வன்
கிளைமென்ற்
சாக்கோட்டை, அல்வாய்
மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★



கடற்கரும்புலி மேஜர் ரதன்
வேலுப்பிள்ளை
சுரேஸ்ராஜன்
செல்வநாயகபுரம்,
திருகோணமலை.
வீரச்சாவு: 12.04.1996
★★★



கடற்கரும்புலி கப்டன் சுபாஸ்
மாரிமுத்து வசந்தகுமார்
தம்பலகமம்,
திருகோணமலை.
வீரச்சாவு: 12.04.1996
★★★



கடற்கரும்புலி கப்டன் மதனி
கணபதிப்பிள்ளை
தெய்வநந்தினி
வெற்றிலைக்கேணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★



கடற்கரும்புலி கப்டன் விக்கி
இராசரத்தினம் சுமதி
மருதங்கேணி வடக்கு,
தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
ஜீவறஞ்சன்
(இளங்கோ) பொன்னையா
தமிழ்ச்செல்வன்
பறநாட்டாங்கல், ஓமந்தை,
வவுனியா.
வீரச்சாவு: 10.06.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
செல்லப்பிள்ளை
இராமலிங்கம்
செல்வராசா
நறுவிலிக்குளம்,
வங்காலை,
மன்னார்.
வீரச்சாவு: 19.07.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
பார்த்தீபன்
(வேதமணி) உலகநாதன்
ரமேஸ்
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.07.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
கண்ணபிரான் (அப்துல்லா)
சாமித்தம்பி புலேந்திரன்
மறுங்கடிபூவல், அம்பாறை.
வீரச்சாவு: 19.07.1996
★★★

**கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே.** – தேசியத் தலைவர்



கடற்கரும்புலி மேஜர்
பதுமன்
ஆனந்தமயில் பாலமுரளி
நாகர்கோயில் வடக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.07.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
சுடரொளி
செபமாலை இரத்தினமலர்
மாதகல், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.07.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
மிதுபாலன்
வேதாரணியம்
ஜெயக்காந்தன்
சங்கத்தானை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 21.07.1996
★★★



கடற்கரும்புலி கப்டன்
சயந்தன்
தம்பிப்பிள்ளை
துரைரத்தினம்
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு: 21.07.1996
★★★



கடற்கரும்புலி மேஜர்
தில்லையன்
(நளினன்) தெய்வேந்திரன்
யோகேஸ்வரன்
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு: 25.10.1996
★★★



கடற்கரும்புலி கப்டன்
ஜெயராஜ்
(பெரியதம்பி) கந்தசாமி
கோபாலகிருஸ்ணன்
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 25.10.1996
★★★



கடற்கரும்புலி மேஜர் பாரதி
கமலராணி வீரகத்தி
நாகர்கோவில்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1996
★★★



கடற்கரும்புலி கப்டன்
இன்னிசை
புஸ்பலதா இராசதுரை
வெற்றிலைக்கேணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1996
★★★



கடற்கரும்புலி கப்டன்
மாலிகா
செல்வராணி ஆறுமுகம்
அல்வாய் வடக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 08.12.1996
★★★



கரும்புலி மேஜர் சிற்றம்பலம்
(குமார்) இராஜேந்திரம்
சத்தியகுமார்
சுதுமலை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.03.1997
★★★



கரும்புலி கப்டன்
விஜயரூபன்
கந்தசாமி சிவகுணம்
விசங்கேணி, கிரான்,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 06.03.1997
★★★



கரும்புலி கப்டன் நிவேதன்
சுப்பிரமணியம்
சுதேஸ்வரன்
மஞ்சந்தொடுவாய்,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 06.03.1997
★★★



கடற்கரும்புலி மேஜர்
நாவலன்
(மதீஸ்) கந்தையா
முருகையா
2ம் வாய்க்கால்,
திருவையாறு,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 24.03.1997
★★★



கடற்கரும்புலி மேஜர்
தமிழ்மாறன்
இராசையா மதியழகன்
ஊர்காவற்றுறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 24.03.1997
★★★



கடற்கரும்புலி கப்டன்
வானதி
இராமையா கலைவாணி
10ம் யூனிற், தர்மபுரம்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 24.03.1997
★★★



கடற்கரும்புலி கப்டன்
கலைவள்ளி
ஆறுமுகம் கசீந்திரா
அராலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 24.03.1997
★★★



கடற்கரும்புலி மேஜர் அன்பு
முத்துவேல் ரவிச்சந்திரன்
முருங்கன், மன்னார்.
வீரச்சாவு: 27.05.1997
★★★



கடற்கரும்புலி மேஜர்
இளமகன்
தர்மலிங்கம் திருகணேசன்
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 27.05.1997
★★★



கடற்கரும்புலி மேஜர்
வலம்புரி
கைலாசப்பிள்ளை புஸ்பவதி
அனுராதபுரம், சிறீலங்கா.
வீரச்சாவு: 27.05.1997
★★★



கடற்கரும்புலி மேஜர்
வினோதா
தேவசிகாமணி விஜயகுமாரி
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.05.1997
★★★



கடற்கரும்புலி மேஜர் சந்திரா
தம்புசெபஸ்ரியான்
மறியகொரற்றி
குருநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.05.1997
★★★



கடற்கரும்புலி கப்டன்
சுதாகரன்
கனகசபை அருள்
மொறக்கொட்டாஞ்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 27.05.1997
★★★

**கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள் – எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள் – எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்** – தேசியத் தலைவர்



கடற்கரும்புலி கப்டன்
அருளரசன்
தங்கராசா தியாகராசா
களுதாவளை, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 27.05.1997
★★★



கடற்கரும்புலி கப்டன் சித்தா
பாலசிங்கம் சிற்றூபன்
சுழிபுரம், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.05.1997
★★★



கரும்புலி மேஜர் நிதன்
(பர்வதன்)
மாணிக்கம் அருள்ராசா
மொறக்கொட்டாஞ்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 10.06.1997
★★★



கரும்புலி மேஜர் யாழினி
சிவசுப்பிரமணியம் ராகினி
உரும்பிராய் தெற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.06.1997
★★★



கரும்புலி கப்டன் சாதுரியன்
நடராசா அரசரட்ணம்
கிரான், மட்டக்களப்பு.
வீரச்சாவு: 10.06.1997
★★★



கடற்கரும்புலி மேஜர் பாலன்
சோமசுந்தரம் திலீபன்
கிருஸ்ணன்கோவில் வீதி,
அம்பாறை.
வீரச்சாவு: 28.06.1997
★★★



கடற்கரும்புலி மேஜர் சிறி
(திருமாறன்)
கணேசபிள்ளை
ரவிச்சந்திரன்
சிவன் கோவிலடி,
காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.10.1997
★★★



கடற்கரும்புலி கப்டன்
சின்னவன்
நந்தகோபாலன் சுரேஸ்
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.10.1997
★★★



கரும்புலி லெப்.கேணல்
சுபேசன்
(கிள்ளிவளவன்) மருசலீன்
அல்வீன்
காலிமோட்டை, முருங்கன்,
மன்னார்.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி மேஜர் குமுதன்
மயில்வாகனம் இன்பராஜ்
மானிப்பாய், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி மேஜர் ஜெயராணி
நடராசா சாந்தி
சிறுதோப்பு, பேசாலை,
மன்னார்.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி மேஜர் ஆசா
வேலுப்பிள்ளை சிவஜமுனா
கொடிகாமம், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி மேஜர் மங்கை
இரத்தினசிங்கம் நேசமலர்
5ம் யூனிட், இராமநாதபுரம்,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி கப்டன் குமரேஸ்
(குமணன்) ஜெகநாதன்
ரவிச்சந்திரன்
பல்லவராயன்கட்டு,
ஜெயபுரம்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி கப்டன் இந்து
கந்தையா புனிதா
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி கப்டன் நளாயினி
பழனி கோகிலா
நெடுங்கேணி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி கப்டன் தனா
பெருமாள் கலைநிதி
கொல்லன்கல்லட்டி,
தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி கப்டன்
உமையாள்
செல்லத்துரை புஸ்பராணி
நெடுங்கேணி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி கப்டன் செங்கதிர்
ஜெயரட்ணம் ஜெயந்தா
வசாவிளான், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி கப்டன்
நெடியோன்
குலேந்திரம் ஞானசங்கர்
வண்ணாமலை,
தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கரும்புலி கப்டன் அருண்
அம்பிகாவதி அருட்சோதி
நாரந்தனை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
கரன்
பாலசுந்தரம்
கோபாலகிருஸ்னன்
மன்னம்பிட்டி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி மேஜர்
வள்ளுவன்
செல்வராசா தவராசா
அராலி மேற்கு,
கொட்டைகாடு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி மேஜர்
குமரேஸ்
துரைராசா செல்வகுமார்
பூந்தோட்டம், வவுனியா.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி மேஜர்
தமிழினியன்
நடராசா கிருபாகரன்
காங்கேசன்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி மேஜர்
சுலோஜன்
(மாமா) குமாரசிங்கம்
விஜஜேந்திரன்
தம்பலகாமம்,
திருகோணமலை.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி மேஜர்
தமிழ்மங்கை
(நைற்றிங்கேல்) துரைராசா
சத்தியவாணி
வெட்டுக்காடு, பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி கப்டன்
மொறிஸ்
(தமிழின்பன்)
தர்மபாலசிங்கம்
தயாபரன்
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி கப்டன்
வனிதா
கந்தையா புஸ்பராணி
மாறாஇலுப்பை,
நெடுங்கேணி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி கப்டன்
நங்கை
பட்டுராசா கௌசலா
கொட்டடி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி கப்டன்
ஜனார்த்தினி
கைலாயநாதன் சுகந்தி
3ம் வட்டாரம்,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி கப்டன்
மேகலா
தங்கராசா தமயந்தி
வேம்படி, வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★



கடற்கரும்புலி கப்டன்
ஆர்வலன்
(கோபி) செபஸ்ரியான்
அகஸ்ரின்
நுவரெலியா, சிறீலங்கா.
வீரச்சாவு: 11.03.1998
★★★



கடற்கரும்புலி கப்டன்
இசையாளன்
சுந்தரராஜன் ரவிராஜா
இரத்தினபுரம், கிளிநொச்சி.
வீரச்சாவு: 11.03.1998
★★★



கடற்கரும்புலி கப்டன்
ஈழவேந்தன்
(ஈழவன்) ஆறுமுகம்
வீரசிங்கம்
சந்திக்காடு முகாம், சுழிபுரம்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 18.04.1998
★★★



கடற்கரும்புலி கப்டன்
பூங்குழலி
சாமிநாதர் சின்னமலர்
நெடுந்தீவு கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 18.04.1998
★★★



கரும்புலி மேஜர் நிலவன்
சூரியகுமார் திலீபன்
கோப்பாய் வடக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1998
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்

வள்ளுவன் (பாண்டியன்)
கௌரிசாமி திலக்மோகன்
கோண்டாவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.11.1998
★★★



கடற்கரும்புலி மேஜர்
நவநீதன்
(இசையாளன்) மரியநாயகம்
ஜெயசீலன்
எழுதுமட்டுவாள், கிளாலி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.03.1999
★★★



கடற்கரும்புலி கப்டன்
தோழன்
(திருச்செல்வன்)
சுப்பிரமணியம்
ராஜ்குமார்
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.
வீரச்சாவு: 10.03.1999
★★★



கரும்புலி மேஜர் அரசப்பன்
மயில்வாகனம்
அருட்செல்வன்
சந்திவெளி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.05.1999
★★★



கரும்புலி மேஜர்
ரட்ணாதரன்
(ரட்ணவேல்) குமாரசாமி
ஆனந்தன்
கோடைமடு, எருவில்,
களுவாஞ்சிக்குடி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 09.08.1999
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
நீதியப்பன் வீரபாகு
சிவனேஸ்வரன்
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு: 15.08.1999
★★★



கடற்கரும்புலி மேஜர்
அந்தமான்
(எழில்வேந்தன்) வடிவேல்
செந்தில்குமார்
ஆரையம்பதி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 15.08.1999
★★★



கடற்கரும்புலி மேஜர் ரவி
(விடுதலை) கந்தையா
செல்வராஜா
நவாந்துறை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.09.1999
★★★



கடற்கரும்புலி மேஜர்
உமேசன்
(செழியன்) தங்கவேல்
ஆனந்தகுமார்
நெளுக்குளம், வவுனியா.
வீரச்சாவு: 26.09.1999
★★★



கடற்கரும்புலி மேஜர்
நாதவேணிநாகேந்திரம்
அனுசா
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.09.1999
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
பழனியப்பன் (புவேந்திரன்)
ரெங்கையா யோகேந்திரன்
1ம் யூனிற், பாவற்குளம்,
வவுனியா.
வீரச்சாவு: 14.10.1999
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
அருந்தவம்
கிருஸ்ணபிள்ளை
உதயகுமார்
பெண்டுகள்சேனை, கிரான்,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 14.10.1999
★★★



கடற்கரும்புலி மேஜர் கோபி
(பரணி)
சூரியயோகானந்தன்
அமர்நாத்
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1999
★★★



கடற்கரும்புலி மேஜர்
சூரியப்பிரபா

அல்போன்ராஜா
ஜான்சிராணி
போயிட்டி, இளவாலை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1999
★★★



கடற்கரும்புலி மேஜர்
கலைமகள்
அரியகுட்டி கலைமதி
அச்சுவேலி தெற்கு,
நாவலம்பதி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1999
★★★



கடற்கரும்புலி கப்டன்
சுதாகரன்
(சுதா) இராசநாயகம்
பிரசன்னா
நல்லூர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1999
★★★



கரும்புலி மேஜர்
செங்கதிர்வாணன்
நடராசா நடேஸ்வரன்
சிவபுரி, திருகோணமலை.
வீரச்சாவு: 29.10.1999
★★★



கடற்கரும்புலி மேஜர்
முத்துமணி
குமாரசாமி சிவகாவேரி
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 04.11.1999
★★★



கரும்புலி மேஜர் அருளன்
நந்தகோபாலன் துஸ்யந்தன்
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 05.11.1999
★★★



கரும்புலி மேஜர் சசி
இராசரத்தினம் சுகந்தினி
சித்தங்கேணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 05.11.1999
★★★



கடற்கரும்புலி மேஜர்
றங்கன்
(யாழ்வேந்தன்) கதிரவேல்
ஜெயராம்
சடையாளி, காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 08.12.1999
★★★



கடற்கரும்புலி மேஜர்
இசைக்கோன்
சிவசாமி சுகந்தன்
இன்பருட்டி, பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 08.12.1999
★★★



கடற்கரும்புலி கப்டன்
கானவன்
சிவஞானம் சிவகுமார்

முள்ளிவாய்க்கால் மேற்கு,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 08.12.1999
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
சிவரூபன் (கார்வண்ணன்)
சிவநேசன்
சிவபாக்கியநாதன்
கெற்பலி, மிருசுவில்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 08.12.1999
★★★



கரும்புலி மேஜர் செழியன்
மகேந்திரராஜா பாலமுரளி
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.12.1999
★★★



கரும்புலி மேஜர் மீனா
நடராசா
மேனகா
இடைக்குறிச்சி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 25.12.1999
★★★



கடற்கரும்புலி மேஜர் நந்தன்
தர்மராசா தயாளன்
குமரபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 25.12.1999
★★★



கரும்புலி கப்டன் நாகராணி
அருமைநாயகம் றோகினி
தாவடி தெற்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 25.12.1999
★★★



கரும்புலி மேஜர் ஆதித்தன்
பழனியாண்டி சுதாகரன்
தெரணிகல, பதுளை,
சிறீலங்கா.
வீரச்சாவு: 25.12.1999
★★★



கடற்கரும்புலி கப்டன்
அறிவரசன்
(அறிவு) முத்துலிங்கம்
ஜெகன்
வேலணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.12.1999
★★★



கடற்கரும்புலி மேஜர் ரூபன்
சீனிவாசன் சிவானந்தன்
கிரான், மட்டக்களப்பு.
வீரச்சாவு: 01.02.2000
★★★



கடற்கரும்புலி மேஜர் மதன்
சிதம்பரநாதம் சிவாஜிநாதன்
மாவடிச்சேனை, மூதூர்,
திருகோணமலை.
வீரச்சாவு: 12.03.2000
★★★



கடற்கரும்புலி மேஜர் பரதன்
சதாசிவம் சந்திரகுமார்
விநாயகர்புரம்,
திருக்கோவில்,
அம்பாறை.
வீரச்சாவு: 12.03.2000
★★★



கடற்கரும்புலி கப்டன்
தினேஸ்
(சுவேந்திரன்)
வயிரவநாதன்
கஜானன்
கருகம்பனை, கீரிமலை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.03.2000
★★★



கரும்புலி மேஜர் சுதாயினி
தெய்வேந்திரபிள்ளை
ஜெயசுகி
இடைக்குறிச்சி, வரணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.03.2000
★★★



கரும்புலி மேஜர் தனுசன்
தங்கராசா இலங்கேஸ்வரன்
இறால்க்குழி, மூதூர்,
திருகோணமலை.
வீரச்சாவு: 27.03.2000
★★★



கரும்புலி மேஜர் மலர்விழி
பாலகிருஸ்ணன் சங்கீதா
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 31.03.2000
★★★



கரும்புலி மேஜர் ஆந்திரா
(நாயகம்)
விநாயகமூர்த்தி சுதர்சினி
மருதங்கேணி தெற்கு,
தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 31.03.2000
★★★



கரும்புலி கப்டன் சத்தியா
(சசி)
கிருஸ்ணமூர்த்தி முகுந்தினி
நெல்லியடி, கரவெட்டி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 31.03.2000
★★★



கரும்புலி மேஜர்
அறிவுக்குமரன்
குமாரவேல் கேதீசன்
முகத்தான்குளம்,
செட்டிகுளம்,
வவுனியா.
வீரச்சாவு: 11.04.2000
★★★



கடற்கரும்புலி கப்டன்
வீரமணி
கணபதிப்பிள்ளை
கதிர்காமநாதன்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.2000
★★★



கரும்புலி மேஜர்
மறைச்செல்வன்
செல்வராஜா ரஜனிகாந்தன்
சுந்தரபுரம்,
சாஸ்திரிகூழாங்குளம்,
வவுனியா.
வீரச்சாவு: 10.05.2000
★★★



கரும்புலி மேஜர் நீகஜீவன்
சிவராசா கலைக்குமார்
கரடித்தோட்டம், காரைதீவு,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 20.05.2000
★★★



கரும்புலி மேஜர் குமலவன்
சிவப்பிரகாசம் லுகாகரன்
பழுகாமம், பெரியபோரதீவு,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.05.2000
★★★



கரும்புலி மேஜர் சதா
மாணிக்கம்
கனகாம்பிகை
தென்னியங்குளம்,
துணுக்காய்,
மல்லாவி, முல்லைத்தீவு.
வீரச்சாவு: 25.05.2000
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
ஞானேஸ்வரன்
(ஞானக்குமார்)
அழகப்போடி
விநாயகமூர்த்தி
திக்கோடை, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 26.06.2000
★★★



கடற்கரும்புலி மேஜர் சூரன்
இராசதுரை ரவீந்திரன்
4ம் கட்டை, பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 26.06.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
நல்லப்பன்
வேலுப்பிள்ளை ராசன்
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.06.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
சந்தனா
குணசிங்கம் கவிதா
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.06.2000
★★★



கடற்கரும்புலி கப்டன்
இளமதி
கனகநாயகம்பிள்ளை
ஜெயசித்திரா
வேலணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.06.2000
★★★



கடற்கரும்புலி கப்டன்
பாமினி
பரராசசிங்கம் விஜயலட்சுமி
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.06.2000
★★★



கடற்கரும்புலி கப்டன்
ஜெயாஞ்சலி
இராமையா இந்திராதேவி
தாளையடி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 03.07.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
சிறீவாணி
சின்னத்தம்பி சாந்தி
3ம் குறிச்சி, களுதாவளை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 05.07.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
திசையரசி
செல்லச்சாமி செல்வம்
உடுத்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 15.08.2000
★★★



கரும்புலி கப்டன்
தமிழ்க்குமரன்
சின்னக்குட்டி சதீஸ்வரராஜா
4ம் வட்டாரம், ஊறணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.09.2000
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
றெஜி
(இளங்கோ) மாணிக்கம்
றமேஸ்
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு: 23.10.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
றோஸ்மன்
(கணேஸ்) தேவராசா
ரவீந்திரராசா
கோபாலபுரம், நிலாவெளி,
திருகோணமலை.
வீரச்சாவு: 23.10.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
நிதர்சன்
தியாகராஜா தியாகேந்திரன்
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.
வீரச்சாவு: 23.10.2000
★★★



கடற்கரும்புலி மேஜர் நித்தி
(சோழவேங்கை)
இராசையா
ஜெகன்
பூந்தோட்டம், வவுனியா.
வீரச்சாவு: 23.10.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
மயூரன்
கநதசாமி பிரகாஸ்
மயிலனை வடக்கு,
சுண்ணாகம்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 23.10.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
திருமாறன்
(திருவாளவன்) ஜெயம்
நிசாதரன்
ஆவரங்கால், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 23.10.2000
★★★



கரும்புலி மேஜர் சோபிதன்
துரைச்சாமி ஜீவகணபதி
தச்சன்குளம், மூன்றுமுறிப்பு,
வவுனியா.
வீரச்சாவு: 24.10.2000
★★★



கரும்புலி மேஜர் வர்மன்
(மேனவன்)
வடிவேல் தங்கத்துரை
தேற்றாத்தீவு,
களுவாஞ்சிக்குடி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 24.10.2000
★★★



கரும்புலி கப்டன் சந்திரபாபு
குமரப்போடி லிங்கராசா
படையாண்டவெளி,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 24.10.2000
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
கதிர்காமரூபன் (பெத்தா)
கனகானந்தம்
ஆனந்தகிருஸ்ணன்
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.11.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
இலக்கியன்
சிவகாமி கரிதரன்
3ம் வட்டாரம்,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 02.11.2000
★★★



கடற்கரும்புலி கப்டன்
குமாரவேல்
- சுப்பிரமணியம் சுதர்சன்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.11.2000
★★★



கடற்கரும்புலி கப்டன்
வல்லவன்
நவநீதன் பத்மலதன்
தட்சன்தோப்பு, கைதடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.11.2000
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
சல்மான் (இரும்பொறை)
சிவஞானம் சிவஜங்கரன்
நல்லூர், பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 02.11.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
சதாசிவம்
(சதா) பிள்ளையான்
திருச்செல்வன்
சந்திவெளி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 02.11.2000
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
நரேஸ் முருகேசு
பிறேம்குமார்
தும்பளை தெற்கு,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 03.11.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்
சுடர்மணி
(செங்கதிர்) சிவராசா
சிறீதரன்
வண்ணாங்கேணி வடக்கு,
பளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 03.11.2000
★★★



கடற்கரும்புலி கப்டன்
கஸ்தூரி
(பூங்கதிர்) நல்லநாதன்
பவானி
பெரியமடு, வவுனியா.
வீரச்சாவு: 21.02.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
விடுதலை
கந்தையா இந்திராணி.
ஆழியவளை, தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 21.02.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
காந்தன்
மகாதேவன் சுதாகரன்
15ம் கட்டை, மணலாறு,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 29.03.2001
★★★



கடற்கரும்புலி கப்டன்
வாகைசூடி
மரியநாயம் பிலிப்ஸ்.றீபன்
பெரியவிளான், இளவாலை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.03.2001
★★★



கடற்கரும்புலி கப்டன்
ராகுலன்
ஏரத்பண்டா கிருஸ்ணகுமார்
கோரக்கன்கட்டு, பரந்தன்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 04.08.2001
★★★



கடற்கரும்புலி கப்டன்
கரிகாலன் பூலோகசிங்கம்
புஸ்பகாந்தன்
முள்ளிவாய்க்கால் கிழக்கு,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 04.08.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
குமரவேல்
(மதி) கிருஸ்ணபிள்ளை
சிவகுமார்
காங்கேசன்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.09.2001
★★★



கடற்கரும்புலி கப்டன்
தமிழினியன்
(பொறையரசு)செல்வரத்தினம்
யோகேஸ்வரன்
நெளுக்குளம், வவுனியா.
வீரச்சாவு: 15.09.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
ஓசையினியவன்
இரத்தினம்
ராஜ்குமார்
அரியாலை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 15.09.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
அருணா

(சுதா) குலசிங்கம்
தவச்செல்வி
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.09.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
நித்தியா
செல்வராசா தயாளினி
புலொலி மேற்கு, தம்பசிட்டி,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.09.2001
★★★



கடற்கரும்புலி மேஜர் காந்தி
(வேங்கை) செபமேயு
ஜெறின்
விடத்தல்தீவு, மன்னார்.
வீரச்சாவு: 16.09.2001
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
அனோசன் (மாதவன்)
சிதம்பரப்பிள்ளை சிவகுமார்
ஒதியமலை, நெடுங்கேணி,
வவுனியா.
வீரச்சாவு: 16.09.2001
★★★



கடற்கரும்புலி கப்டன்
புலிமகள்
முத்துலிங்கம் யசோதா
உடையார்கட்டு தெற்கு,
குரவயல்,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 23.09.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
சிவாகரன்
(நல்லமுத்து) கார்த்திகேசு
செந்தில்குமார்
9ம் யூனிற், பாவற்குளம்,
வவுனியா.
வீரச்சாவு: 23.09.2001
★★★



கரும்புலி கப்டன்
வாஞ்சிநாதன்
பாலசுந்தரம் தயாபரன்
பண்டாரவெளி,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 09.10.2001
★★★



கடற்கரும்புலி கப்டன்
அன்புக்கினியன்
நவசிவாயம்
சிவரூபன்
புலோலி தெற்கு, மந்திகை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 15.10.2001
★★★



கரும்புலி மேஜர் உதயகீதன்
ஆனந்தன் விஜயஜெயந்தன்
கண்ணகிபுரம்,
அக்கரைப்பற்று,
அம்பாறை.
வீரச்சாவு: 15.10.2001
★★★



கடற்கரும்புலி கப்டன்
இளங்குயிலன்
றோயல்இம்மனுவேல்
பற்றிக் எட்மன்.
முருங்கன், மன்னார்.
வீரச்சாவு: 21.10.2001
★★★



கடற்கரும்புலி மேஜர் றோசா
கணேசன் கற்புக்கரசி
வாரிவளவு, காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 21.10.2001
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
அமுதசுரபி சின்னப்பு
நந்தினி
செம்பியன்பற்று தெற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.10.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
கடலரசன்
(சமுத்திரன்) தம்பிப்பிள்ளை
நமசிவாயம்
8ம் வட்டாரம், சித்தாண்டி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 30.10.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
கஸ்தூரி
தங்கராசா சுதாசினி
பொன்னாலை மேற்கு,
சுழிபுரம்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.10.2001
★★★



கடற்கரும்புலி கப்டன்
கனியின்பன்
மயில்வாகனம் சிறிகாந்
வத்திராயன், உடுத்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.10.2001
★★★



கடற்கரும்புலி கப்டன்
அன்புமலர்
(கேசவி) பொன்ராசா
அன்பழகி
வசாவிளான் யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.10.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
வளவன்
முருகேசு உதயகுமார்
மானிப்பாய் மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.11.2001
★★★



கடற்கரும்புலி மேஜர்
அறிவுச்செல்வன் (வசந்தன்)
வைரமுத்து வினோதரன்
நாககொட்டியான்,
ஆனையிறவு,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 01.05.2002
★★★

**கரும்புலிகள் வித்தியாசமானவர்கள் அபூர்வமான பிறவிகள், இரும்புபோன்ற உறுதியும், பஞ்சுபோன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்** - தேசியத் தலைவர்



கடற்கரும்புலி மேஜர் சூரி
(சூரியன்)
நாகேந்திரன் கமலேந்திரன்
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.05.2002
★★★



கடற்கரும்புலி மேஜர்
அச்சுதன்
(வாகீசன்) கணேசன்
விஜயகுமார்
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.05.2002
★★★



கடற்கரும்புலி மேஜர்
பாண்டியன்
முத்துக்குமார்
கணபதிப்பிள்ளை
கரடியனாறு, செங்கலடி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 01.05.2002
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
ஆற்றலோன் (சுதன்)
கிருஸ்ணசாமி சதீஸ்வரன்
சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 07.02.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
பொதிகைத்தேவன்
சிவஞானசுந்தரமூர்த்தி
தயாபரன்
புலோலி தெற்கு,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 07.02.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
அன்பன்
(ஊர்வண்ணன்) இராசையா
குகதாஸ்
அரியாலை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 07.02.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
சாருமதி
செல்வநாயகம் உமாபதி
தனங்கிளப்பு, சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.03.2003
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
சிலம்பரசன் (ரஞ்சன்)
வேலாயுதப்பிள்ளை
ஜெயரஞ்சன்
ஆழியவளை, வடகிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.03.2003
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
கதிர்
செல்வரட்ணம் சசிந்திரன்
மீசாலை தெற்கு,
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.06.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
வள்ளுவன்
துரை கைலேஸ்வரன்
மயிலங்காடு, ஏழாலை
தெற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.06.2003
★★★



கடற்கரும்புலி மேஜர் நிமால்
(நிமல்) தங்கராசா
செல்வக்குமார்
பரந்தன், கிளிநொச்சி.
வீரச்சாவு: 14.06.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
மணியரசன்
முத்துலிங்கம் லவக்குமார்
நெடுங்கேணி, வவுனியா.
வீரச்சாவு: 14.06.2003
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
அமுதம் (ஈழப்பிரியா)
பாலசுப்பிரமணியம்
சுகந்தினி
பற்றாலை, தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.07.2003
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
யாழினி நவரத்தினம்
நிரஞ்சினி
தோப்புக்காடு, காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.07.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
கதிரோவியன்
(கார்த்தீபன்) செல்வன்
வரதன்
புன்னாலைக்கட்டுவன்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.07.2003
★★★



கடற்கரும்புலி கப்டன்
ஈகைவண்ணன்
(ஈகைவாணன்)
சுவேந்திரன் பாவு
கொக்குவில், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.07.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
தனிச்சுடர்
(பூவிழி) இராசலிங்கம்
மலர்விழி
தேராவில், பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 30.07.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
புகழினி
விஜயராணி வடிவேல்
இலங்கைத்துறைமுகத்துவா
ரம்,
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு: 30.07.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
இசைநிலவன்
(மதிவண்ணன்) கந்தசாமி
தனேந்திரன்
தோப்புக்காடு, காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.07.2003
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
முருகேசன் (கில்லரி)
கணேசன்
சிவகுருநாதன்
னைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.07.2003
★★★



கடற்கரும்புலி மேஜர்
எழிலரசன்
(எழில்) நாகேந்திரம்
அமுதன்
ஈச்சிலம்பற்றை,
விநாயகபுரம்,
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு: 26.12.2004
★★★



கடற்கரும்புலி மேஜர்
தர்மேந்திரன்
கனகசபை
சின்னப்பொடியன்
முனைக்காடு, 7ம் வட்டாரம்,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 26.12.2004
★★★

**பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக்கியுள்ளேன்.** – தேசியத் தலைவர்



கடற்கரும்புலி லெப்.கேணல்
நளா
(அகரெழில்)கவிதா நடராசா
4ம், வட்டாரம், புங்குடுதீவு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 07.01.2006
★★★



கடற்கரும்புலி மேஜர் வஞ்சி
(வஞ்சியின்பன்)
பஞ்சாட்சரம்
குணசீலன்
அனிஞ்சியன்குளம்,
மல்லாவி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 20.05.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
புரட்சிநிலவன் வைரமுத்து
வசீகரன்
ஆழியவளை, தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.02.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
அன்பு
அமுதசுமணா
நாகேஸ்வரன்
ஆழியவளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.05.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
கவியழகி பேதுறுப்பிள்ளை
சாந்தினி டெலறோஸ்
மணற்காடு, குடத்தனை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.05.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
சஞ்சனா (புவிச்செல்வி)
ஜெனித்தா புஸ்பராசா
வியாபாரிமூலை,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.05.2006
★★★



கடற்கரும்புலி மேஜர்
மலர்நிலவன்
யேசுராசா சாந்தன்
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.05.2006
★★★



கடற்கரும்புலி மேஜர்
கடல்வீரன்
தாவீது விமலதாஸ்
முள்ளியான்,
வெற்றிலைக்கேணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.05.2006
★★★



கரும்புலி லெப்.கேணல்
பூட்டோ (சங்கர்)
கனகரட்ணம்
ஸ்ரான்லியூயின்
பாலைக்குழி, அடம்பன்,
மன்னார்.
வீரச்சாவு: 11.08.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
அந்தணன் (தமிழ்மாறன்)
நடராசா தயாபரன் (தயா)
செங்கலடி வீதி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 17.09.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
கலைச்செல்வன் ( சபீன்)
கோபாலசாமி நாகரூன்
மல்லாகம், யாழ்ப்பாணம்
வீரச்சாவு: 17.09.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
விதுசன் (வெள்ளை)
நடராசா விக்கினேஸ்வரன்
கிண்ணியடி,
வாழைச்சேனை,
மட்டக்களப்பு
வீரச்சாவு: 17.09.2006
★★★



கடற்கரும்புலி கப்டன்
சமர்மறவன்
அருமைலிங்கம்,
அருளானந்தம்
ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்
வீரச்சாவு: 17.09.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
வளவன் சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 15.10.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
அரவிந்தா சீனிவாசகம்
ஜெயந்தினி
பழையமுறிகண்டி,
புத்துவெட்டுவான்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 18.10.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
தனு
(தில்லைச்செல்வி)
மதியாபரணம்
நாகேஸ்வரி
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 18.10.2006
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
மான்பாலன் ஆடிவேல்
ஜெயகீசன்
திருகோணமலை.
வீரச்சாவு: 27.11.2006
★★★



கடற்கரும்புலி லெப்.
கேணல்
கார்குழலி கனகலிங்கம்
சுகந்தினி
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 21.01.2007
★★★



கடற்கரும்புலி மேஜர்
சுகந்தன்
கந்தசாமி நகுலேஸ்வரன்
இல 49, கோணாவில்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 27.01.2007
★★★



கடற்கரும்புலி மேஜர்
தீக்கதிர்
மருசலின் தமிழின்தாசன்
முள்ளியான்கட்டைக்காடு,
வரமராட்சி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.01.2007
★★★



கடற்கரும்புலி கப்டன்
முறையமுதன்
அந்தோனியப்பன்
மரியனேசன்
வெள்ளாங்குளம், 03ம்
பிட்டி,
மன்னார்.
வீரச்சாவு: 27.01.2007
★★★



கடற்கரும்புலி லெப்.
எழுகடல்
கதிர்வேல் மகேந்திரன்
02ம் சந்தி பாடசாலை
அருகாமை,
கனகராயன்குளம்,
வவுனியா.
வீரச்சாவு: 27.01.2007
★★★



கடற்கரும்புலி லெப்.
மணிக்கொடி
நடராசா ராம்குமார்
அம்பலவன் பொக்கனை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.01.2007
★★★



கடற்கரும்புலி மேஜர்
அருமைச்சேரன்
பருமாள் சுதாகரன்
இரணைப்பாலை,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 27.02.2007
★ ★ ★



கடற்கரும்புலி மேஜர்
பாசமலர்
கணேசன் பிரியதர்சினி
155ம் கட்டை,
கிருஸ்ணபுரம்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 27.02.2007
★ ★ ★



கடற்கரும்புலி லெப்.
கேணல்
வித்தியா சின்ராசா
மேரிஅன்ரனி
கொன்சின்சியா
01ம் யூனிற், மல்லாவி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 22.06.2007
★ ★ ★



கரும்புலி லெப்.கேணல்
வீமன்
கோபாலபிள்ளை பிரதீபன்
திருகோணமலை.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி லெப். கேணல்
இளங்கோ இராசதுரை
பகீரதன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி லெப். கேணல்
மதிவதனன்
பாலசுப்பிரமணியம்
தயாசீலன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி மேஜர் சுபன்
கதிரவன்
ஜீவகாந்தன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி மேஜர் கனிக்கீதன்
இராசன் கந்தசாமி
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி மேஜர் இளம்புலி
துரைரட்ணம் கலைராஜ்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி மேஜர் காவலன்
சண்முகம் சத்தியன்
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி மேஜர்
எழிலின்பன்
விமலநாதன் பிரபாகரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன் தர்மினி
கணேஸ் நிர்மலா
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன் புரட்சி
செல்வராசா தனுசன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன்
கருவேந்தன்
மயில்வாகனம் சதீஸ்குமார்
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன் புகழ்மணி
தர்மலிங்கம்
புவனேஸ்வரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன்
புலிமன்னன
கணபதி நந்தகுமார்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன்
அன்புக்கதிர்
வில்சன் திலீப்குமார்
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன் சுபேசன்
நாகராசா மகாராஜ்
மன்னார்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன் செந்தூரன்
கணேசநாதன் தினேஸ்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன் பஞ்சீலன்
சிவானந்தம் கஜேந்திரன
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன் ஈழப்பிரியா
கந்தையா கீதாஞ்சலி
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன் அறிவுமலர்
சேவியர் உதயா
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி கப்டன்
ஈழத்தேவன்
தங்கராசா மோசிகரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கரும்புலி லெப். அருண்
பத்மநாதன் திவாகரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★ ★ ★



கடற்கரும்புலி லெப்.
கேணல்
அன்புமாறன் கனகலிங்கம்
சுபாஸ்கரன்
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 21.03.2008
★ ★ ★



கடற்கரும்புலி மேஜர்
கனிநிலா
குணராசா குணரூபா
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.03.2008
★★★



கடற்கரும்புலி மேஜர்
நிறஞ்சினி
நன்னித்தம்பி அன்பரசி
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.03.2008
★★★



கடற்கரும்புலி லெப்.
கேணல் செம்பிளவளவன்
கிளிநொச்சி.
வீரச்சாவு: 10.05.2008
★★★



கடற்கரும்புலி மேஜர் அமுது
முத்தையா பாக்கியராஜ்
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.07.2008
★★★



கடற்கரும்புலி மேஜர்
மாதங்கி
சந்திரகாந்தன் சரிதா
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.07.2008
★★★



கடற்கரும்புலி மேஜர் அன்பு
(அன்பழகன்) பத்தினியன்
குணசீலன்
திருமலை.
வீரச்சாவு: 31.07.2008
★★★



கரும்புலி மேஜர் நிலாகரன்
முனியாண்டி ஜீவராசா
கிளிநொச்சி.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி கப்டன் நிமலன்
தவராசா தவக்குமார்
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி லெப். கேணல்
மதியழகி
இரத்தினசாமி
லோகேஸ்வரி
பண்டியன்குளம், மல்லாவி.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி லெப். கேணல்
வினோதன்
இராசரத்தினம் பிரதாப்
வேலணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி கப்டன் கனிமதி
திருநாவுக்கரசு தட்சாயினி
நேரடம்பன், பூநகரி.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி கப்டன்
அறிவுத்தமிழ்
வையாபுரி சசிகலா
சமயபுரம், வவுனியா.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி கப்டன்
எழிலழகன்
கிருஷ்ணபிள்ளை
பிரபாகரன்
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி மேஜர் ஆனந்தி
சாந்தகுமார் விஜயலட்சுமி
மன்னமபிட்டி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி கப்டன் அகிலன்
இராசகுலேந்தரன் கேதாரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி கப்டன் முத்துநகை
சிவகுருநாதன் சிவரோகினி
முகாவில், இயக்கச்சி.
வீரச்சாவு: 09.09.2008
★★★



கரும்புலி கப்டன் எழில்
வேந்தன்
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 03.12.2008
★★★



கடல்கரும்புலி மேஜர்
செஞ்சுடர்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 04.02.2009
★★★



வான்கரும்புலி கேணல்
ரூபன்
வீரச்சாவு: 20.02.2009
★★★



கரும்புலி லெப். கேணல்
சிரித்திரன்
முருகப்பிள்ளை சிவரூபன்
இடைக்காடு, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.02.2009
★★★



கரும்புலி லெப். கேணல்
மாறன்
வீரச்சாவு: 09.03.2009
★★★



கரும்புலி மேஜர்
தமிழ்மாறன்
வீரச்சாவு: 09.03.2009
★★★



கரும்புலி கப்டன்
கதிர்நிலவன்
வீரச்சாவு: 09.03.2009
★★★



முகம், முகவரி
தெரியாத பல
கரும்புலிகளுக்கு
எமது
வீரவணக்கம்



கரும்புலி வீரர்கள் பலர் இன்று பெயர் குறிப்பிடப்படாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கியபோதும், அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப்புகழ் பெற்று வாழும். – தேசியத் தலைவர்

# கரும்புலிகள் நாள்

## யூலை – 05






# வவுனியாவின் வீரபுரம் சிங்களவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது!

யூன 15, 2023

வவுனியாவின் வீரபுரம் பகுதியில் தமிழ்மக்களுக்கு வழங்கபடவேண்டிய 250 ஏக்கர் காணி, சிங்கள மக்களால் அபகரிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

“1994ஆம் ஆண்டு செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரபுரம் மக்களுக்காக 400 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு, வாழ்வாதாரத்திற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஏக்கர் வழங்குவதாக கூறி குடியமர்த்தப்பட்டார்கள். ஆனால், தற்போது வரை மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை.

“ஆனால், ஒதுக்கப்பட்ட காணிகளில் 75 சதவீதமான காணிகள், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தை சேர்ந்த பெரும்பாண்மையின சிங்கள மக்கள் அபகரித்திருக்கின்றார்கள்.

“இதேவேளை, எமது மதுராகநகரை சேர்ந்த பொது மக்கள் தெற்கு சிங்கள பிரிவிற்குள் சென்று குடியேறுவதற்காக சிறு துண்டு காணியை கேட்டபோது, அதற்கு அந்தப் பகுதியில் உள்ள பௌத்த மதகுரு சம்மதித்தால் தான் அவர்கள் தமது பிரிவிற்குள் வரமுடியும் என்று மாவட்டச் செயலகத்தால் பதில் வழங்கப்பட்டது.

“ஆனால், தற்போது 250 ஏக்கருக்கும் மேற்ப்பட்ட காணிகளை தெற்கில் இருக்கும் மக்கள் அபகரித்திருக்கின்றார்கள். உண்மையில் வீரபுரம் மக்களுக்கு அந்த காணிகள் வழங்கப்பட வேண்டும்” எனவும் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.



# சிறீலங்கா அதிரடிப்படை உதவியுடன் முல்லைத்தீவில் சித்திரவதை!

யூன் 18, 2023

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், கிழவன்குளத்தில் கடந்த புதன்கிழமை (14) காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு அடித்து துன்புறுத்தப்பட்ட நவரத்தினம் நவரூபன் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், நேற்று (17) மாலை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி காண்டீபன் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்டவரது குடும்பத்தினரை சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிழவன்குளத்தில் வசிக்கும் நவரத்தினம் நவரூபன் என்பவரது வீட்டுக்கு கடந்த 14ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் 4 விசேட அதிரடிப் படையினரின் துணையுடன் சென்ற 7 வனஜீவராசிகள் திணைக்களத்தினர், நவரூபனை கைதுசெய்துள்ளனர்.

அதன் பின்னர், கைதான நவரூபனை அழைத்துச் சென்று, கட்டிவைத்து அடித்து சித்திரவதை செய்துள்ளனர். அத்தோடு, அவர் மீது பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தி, நீதிமன்றத்தில் முற்படுத்தி, 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கவும் காவல்துறையினர் முயன்றுள்ளனர்.

இருப்பினும், நவரூபன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில், காவல்துறையினரின் மோசமான சித்திரவதைகளால் படுகாயமடைந்த நவரூபன் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, நவரூபனின் குடும்பத்தினரை நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி காண்டீபன் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று சந்தித்து நவரூபனின் நிலைமை குறித்து கேட்டறிந்து ஆறுதல் தெரிவித்துள்ளனர்.



# யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிப் பகுதியில் மனித எழும்புக்கூட்டு எச்சங்கள் மீட்பு!

யூன் 22, 2023

1995 ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை விடுவிக்கும் படை நடவடிக்கையின் போது சிறீலங்காப் படைகளால் படுகொலை செய்யப்பட்ட மேலும் ஒரு தொகுதி தமிழ் இளைஞர்களது மனித வன்கூட்டு தொகுதிகள் அகப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டி பகுதியில் நேற்றும் சில மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் இடம்பெறும் கட்டுமானங்களின் போது, சில மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.





இதனையடுத்து, குறித்த பிரதேசத்தை குற்றம் நிகழ்ந்த பிரதேசமாக அடையாளப்படுத்தி ஊர்காவல்துறை பொலிஸார் நீதிமன்ற கட்டளையை பெற்று நேற்றைய தினம் நீதவான் முன்னிலையில் அகழ்வு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, மேலும் சில மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தாக தெரிவிக்கப்படுகின்றது.

அவை சுமார் 20 வருடங்கள் முன்னரான மனித எச்சம் என சந்தேகிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சான்று பொருட்கள் ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளன.

# குருந்தூர் மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறித் தொடரும் கட்டுமானப் பணிகள்

## ரவிகரன் கடும் கண்டனம்!

யூன் 21, 2023

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் நீதிமன்றக்கட்டளையை மீறித் தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், அதற்கு முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.



குருந்தூர்மலைக்கு 21.06.2023இன்று நேரடியாகச் சென்ற முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரை ராசா ரவிகரன் அங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டு, அங்கு தொடர்ந்தும் நீதிமன்றக் கட்டளையை மீறி கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்திய பின்னர் இது தொடர்பில் தனது கடுமை யான கண்டனங்களை அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலையில் 12.06.2023க்கு முன்னிருந்த நிலையை பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு நீதிமன்றம் 19.07.2022அன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

ஆனால் அதன் பின்னர் இங்கு நீதிமன்றக் கட்டளையை மீறிக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிலையில் அவ்வாறு கட்டுமானப் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றமைக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடந்த 23.02.2022அன்று நான் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து 02.03.2023அன்று முல்லைத்தீவு நீதிமன்றில் AR/673/18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதமன்றக் கட்டளை மீறப்பட்டு கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடும் செய்யப்பட்டது.

தொடர்ந்தும் அதுதொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதுதொடர்பான வழக்கின் விசாரணைகள் எதிர்வரும் 07ஆம் திகதியும் முல்லைத்தீவு நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் தற்போது இங்கு கட்டுமானப்பணிகள் தொடர்ந்தும் இடம்பெறுவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அந்தவகையில் விகாரையின் உச்சிப் பகுதியில் பல கைகள் பொருத்தப்பட்டு சிமெந்துக் கலவைகள் இடப்பட்டதற்கான அடையாளங்களை எம்மால் அதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அதனைவிட விகாரையின் அருகே புதிதாக ஒரு கல்வெட்டு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கல்வெட்டில் நீதிமன்றக் கட்டளையை மீறி, அத்து மீறி அமைக்கப்பட்ட பௌத்தவிகாரைக்கு, போலியான வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன.

அத்தோடு குறித்த விகாரையானது தொல்பொருள் திணைக்களத்தினர், இராணுவத்தினர், சிவில் பாதுகாப்புப் படையினர், பௌத்தலோகே நற்பணி மன்றத்தினர் ஆகி யோருடைய முழுமையான ஒத்துழைப்புடனேயே கட்டப்பட்டதாகவும் குறித்த கல் வெட்டில் குறிப்பிடப்பட் டுள்ளது.

நீதிமன்றம் குருந்தூர்மலையில் கட்டுமானப்பணிகளை மேற்கொள்ளக்கூடாதென்ற கட்டளையைப் பிறப்பித் திருக்கின்றது.

அதுதவிர நீதிமன்றக் கட்டளையை மீறிக் கட்டுமானப்பதிகள் இடம் பெறுவதாக எம்மால் தொடரப்பட்ட வழக்கு நிலுவையிலுள்ளது.

இவ்வாறு நிலைமைகள் இருக்கும் போது தொடர்ந்தும் இவர்கள் கட்டுமானப் பணிகளை மேற்கொண் டுவருகின்றனர்.

இவர்களின் இத்தகைய அத்துமீறிய நடவடிக்கையை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறு நீதிமன்றக் கட்டளையை மீறி தொடர்ந்தும் கட்டு மானப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பிலே எதிர்வரும் 04ஆம் திகதியன்று எமது சட்டத்தரணிகள் ஊடாக நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளோம்- என்றார்.





# தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் ஆகிய கிராமங்கள் மீள்குடியேற்றப்படவேண்டும்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

யூன் 21, 2023

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய பகுதிகள் மீள்குடியேற்றப்படவேண்டும் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலையில் 21.06.2023இன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தண்ணிமுறிப்பு, ஆண்டான் குளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு தமது பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தனர். இந் நிலையில் இவ்வாறு இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் இது வரையில் அவர்களது பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட வில்லை.

இவ்வாறான சூழலிலேயே தண்ணிமுறிப்புப் பகுதியில் உள்ள குருந்தூர் மலை ஆக்கிரமிக்கப்பட்டு, அங்கு பாரிய பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதுடன், குருந்தூர் மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய விவசாய நிலங்கள் பலவும் தொல்லியல் திணைக்களத்தால் அப கரிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையிலேயே முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இத்தகைய கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலே நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

இவ்வாறு குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றில் நிலுவையிலுள்ள நிலையில், முல்லைத்தீவு பொலீசாரோ, தொல்லியல் திணைக்களமோ அல்லது, பௌத்த பிக்குகளோ நீதி மன்றை மதிப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் தரப்புகளான நாம்தான் நீதிமன்றத்தினதும், நீதி பதியினதும் கட்டளைகளை மதித்து நடக்கின்றோம்.

இந் நிலையில் கொழும்பிலே இருக்க வேண்டிய, கொழும் பைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப் பினர்கள் சிலர் இனவாதத்தைத் தூண்டும் விதமாக குருந் தூர் மலைக்கு வருகைதருவதும், பார்வையிடுவதுமாகச் செயற்படுகின்றார்கள்.

தெற்கிலே தமது வாக்குவங்கியைப் பலப்படுத்துவதற் காகவே சில இனவாத அரசியல்வாதிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.



குருந்தூர்மலையை அண்டிய பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குரிய 306ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நோக்குடன் தொல்லியல் திணைக்களம் செயற்படு கின்றது.

இந் நிலையில் இந்த குருந்தூர்மலையை அண்டிய காணிவிடயம் தொடர்பாக அண்மையில் எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியிருந்தனர். அப்போது ஜனாதிபதி இந்தக் காணிகளை விடுவிக்குமாறு உரியவர்களுடன் பேசியிருந்தபோதும் தொல்லியல் திணைக்களத்தினர் தொடர்ந்தும் அபகரிப்புச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தக் காணிகள் அனைத்தும் எமது தமிழ் மக்களுடைய வாழ்வாதார விவசாயக் காணிகளாகும்.

இவ்வாறான காணிகளை அபகரித்து இங்கு பௌத்த விகாரைகளை அமைத்து, சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகள் இங்கு முனைப்புப்பெற்று வருகின்றன.

இவ்வாறான சிங்களமயமாக்கல் செயற்பாடுகளுக் கெதி ராகவும், பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கெதி ராகவும் நாம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்போது பௌத்த வழிபாடுகளுக்கு எம்மால் இடையூறு ஏற்படுத்தப்பட்டதாக பௌத்த பிக்குகளால் எம்மீது வழக்குத் தொடரப்படு கின்றது.

அத்தோடு தொல்லியல் திணைக்களத்தினர் தமது செயற் பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக எம்மீது வழக்குத் தொடர்கின்றனர்.

இந் நிலையில் தமது காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுவிடுமோ என எமது தமிழ் மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழலில் இவ்வாறான சில பெரும்பான்மை யின இனவாத அரசியல்வாதிகள் தமது வாக்கு வங்கியை நிரப்பும் நோக்குடனேயே இங்கு வருகைதருகின்றனர்.

இந் நிலையில் இவ்வாறான பெரும்பான்மையின இனவாத அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எமது நோக்கமல்ல.

எமது தமிழ்மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். தமிழர்களின் பூர்வீக பகுதி களான தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய கிராமங்கள் மீள்குடியேற்றப்படவேண்டும். எமது தமிழ் மக்களுடைய காணிகள் பறிக்கப்படாமல் எமது மக் களிடமே அவை கையளிக்கப்படவேண்டும் - என்றார்.















# மருதங்கேணி விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் இரண்டு மணிநேரம் விசாரணை!

யூன் 21, 2023

மருதங்கேணி விவகாரம் தொடர்பில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த இரண்டு ஊடக வியலாளர்களிடம் இரண்டு மணிநேரமாக பொலிஸாரால் வாக்குமூலம் பெறப்பட்டது.

கிளிநொச்சி இரணைமடு பகுதியில் உள்ள பிராந்திய குற்ற விசாரணை பிரிவினரால் இன்று புதன்கிழமை குறித்த வாக்குமூலம் பெறப்பட்டது.

கிளிநொச்சி பிராந்திய குற்ற விசாரணை பிரிவினரின் அழைப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடக வியலாளர் த.பிரதீபன் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் த.பரமசிவன் (சிவா) ஆகியோர் குறித்த வாக்குமூலத்தை இன்றையதினம் வழங்கினர்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் ஜூன் 2ம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்ட கூட்டத்தில் புலனாய்வுப் பிரிவினைச் சேந்தவர் சென்றிருந்த நிலையில் குழப்பமான நிலை ஏற்பட்டதுடன் சமூக வலைத்தளங்களில் வீடியோக்கள் வெளியாகி பரப்பை ஏற்படுத்தின.

குறித்த காணொளிகள் மற்றும் செய்திகள் ஊடகங்களில்




வெளியானமை தொடர்பாகவே குறித்த ஊடகவிய லாளரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

# கன்மன்பிலவின் வருகைக்கு முன் குருந்தூர் மலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

யூன் 21, 2023

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில புதன்கிழமை (21) பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

கம்மன்பிலவின் வருகைக்கு முன்னதாக குருந்தூர்மலை அடிவாரத்தில் ஒன்றுகூடிய தண்ணிமுறிப்புக்குரிய மக்களும், மக்கள் பிரதிநிதிகள் சிலரும் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

தண்ணிமுறிப்புப் பகுதியில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறும், தண்ணிமுறிப்புப் பகுதியில் மீள் குடியேற்றம் செய்யுமாறும் வலியுறுத்தியே இவ்வாறு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு திட்டமிடப்பட்ட சிங்களமயமாக்கல் மற்றும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் இதன்போது கடுமையான எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் இ.சத்தியசீலன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயற்பாட்டாளர்



அ.பீற்றர் இளஞ்செழியன், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

உதயன் கம்மன்பில எம்.பி குருந்தூர்மலைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், குருந்தூர்மலை அடிவாரம் மற்றும் குருந்தூர் மலையை அண்டிய பகுதிகளில் அதிகளவில் காவல்துறையினர் குவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பிரேத பரிசோதனை அறிக்கையை வெளியிடுவதற்கும் தேசிய பாதுகாப்புக்கும் என்ன சம்பந்தம்?

எம்.கே. சிவாஜிலிங்கம்

யூன் 24, 2023

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கை வெளியிடுவதற்கும், நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் என்ன சம்மந்தம் உள்ளது என வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் ஒருவரினால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, தேசிய பாதுகாப்பு விடயம் என கூறி பதிலளிக்க நாட்டின் பாதுகாப்பு அமைச்சு, இராணுவ தலைமையகம் மறுப்பு தெரிவித்தது.

அது தொடர்பில் சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில்,

தமிழ் விடுதலைப் புலிகளின் தலைவர் உயிரிழந்ததாக கூறப்பட்ட பின்னர், உயிரிழந்தது அவர் தான் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவரின் உடலை தாங்கள் மரபணுப் பரிசோதனை செய்து உறுதிப்படுத்தினோம் என்று யுத்தம் முடிந்த ஒரிரு நாட்களில் அரசாங்கம் அறிவித்திருந்தது,

2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் மரபணுப்பரிசோதனை செய்து கொள்வதற்கான வசதிகள் இருந்திருக்கவில்லை. இந்தியாவின் ஐதராபாத்திலும், சிங்கப்பூர் போன்ற இடங்களில்தான் அந்த வசதி இருந்தாக நாங்கள் அறிந்து கொண்டோம்.

ஆகவே யுத்தம் முடிந்த ஒரிரு நாட்களில் மரபணுப்பரிசோதனை செய்ததாக பொய்யான தகவலை அரசாங்கம் வெளியிட்டிருந்தது.

பிரபாகரனின் மாதிரிகளை நாங்கள் எடுத்து வைத்திருந்தோம், அதை அவருடைய தந்தை அல்லது தாயாரின் மாதிரிகளுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்தினோம் என்று செல்வதற்கும் தேசிய பாதுகாப்பிற்கும் குந்தகம் என்பதற்கும் என்ன தொடர்பு உள்ளது.

அரசாங்கம் பச்சைப் பெய்யை சொல்லுகின்றது. ஒரு பிரேத பரிசோதனை நடத்தப்படவேண்டும் என்றால், சட்டவைத்திய அதிகாரி முன்னால்தான் நடத்தப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான ஒன்று நடந்ததாக அரசாங்கம் இதுவரை கூறவில்லை.

அதைவிட ஒரு நீதிபதி முன்னால்தான் மரண விசாரணை நடைபெறவேண்டும். நீதிபதிதான் பிரேத பரிசோதனை நடத்துவதற்கான உத்தரவை வழங்க வேண்டும். அவ்வாறான எதுவும் இங்கு நடக்கவில்லை.

கருணாவையும், தயா மாஸ்டரையும் கொண்டு சென்று காட்டியவர்களுக்கு, ஒரு நீதிபதியையும் அல்லது ஒரு சட்டவைத்திய



அதிகாரியையும், உலங்கு வானூர்தி மூலம் அழைத்துச் செல்வதற்கு அரசாங்கத்திற்கு என்ன தடை இருந்தது.

அரசாங்கம் தொடர்ந்தும் பொய்யையும், பித்தலாட்டமும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைவே பெய்மையாமக்குகின்றது. தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புச் செய்வது உட்பட அரசாங்கம் நினைத்தவற்றை செய்வதற்கு தேசிய பாதுகாப்பு என்ற வார்த்தையை பயன்படுத்துவது போல, பிரபாகரனின் விடயத்தையும் மூடி மறைப்பதற்காக திட்டமிட்டு தேசிய பாதுகாப்பு என்பதை, நாட்டின் பாதுகாப்பு துறையும், படைத்துறையும் பயன்படுத்தியுள்ளது என்பதே உண்மை என்றார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் சிங்களமயமாக்கல்!

யூன் 24, 2023

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் தமிழர் விரோத சிங்களமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஊடாக பல்கலைக்கழக பீடாதிபதிகளுக்கு அக்கடிதம் அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில்,

எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பலமொனதொரு திரளாக எழுவதற்கும் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்தில் தவிர்க்க முடியாத குரலாக ஒலிப்பதற்கும், பல்கலைக்கழக அறிவுசார் பலமான பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களான உங்கள் அனைவரதும் நேரடியான மற்றும் மறைமுகமான பங்களிப்புக்களும் ஆதரவுகளுமே காரணமாகும்.

இருப்பினும் சில விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தவும் அறியத்தருவதற்குமானதொரு சூழல் தற்போது எழுந்திருக்கின்றமையால் அதனை இந்தக் கடிதம் வாயிலாக அறியத்தருகின்றோம்.

1. தமிழ் மக்களின் கூட்டு உணர்வுகளோடு தொடர்புடைய தினங்களில் களியாட்டங்கள் மற்றும் கொண்டாட்டங்களிற்கு ஒப்புதல் வழங்குவதனையும் அவற்றினை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வதனையும் தவிர்க்குமாறும், அன்றைய தினங்களில் பல்கலைக்கழக நாட்காட்டியில் நிகழ்வுகள் இடம்பெறாமையை உறுதி செய்யுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

அண்மையில்க் கூட தமிழ் மக்களின் உணர்வுகளைப் உதாசீனப்படுத்தி அவமதிக்கும் விதத்தில் நிகழ்வொன்று இராணுவப் பிரசன்னத்தோடு இடம்பெற்றிருந்தது. அது தமிழ் மக்களின் ஆறாத மனங்களை மேலும் புண்படுத்தியிருந்ததோடு, பலத்த விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திட்டமிட்டு இடம்பெறும் மறைமுகமான சிங்களமயமாக்க முயற்சிகளால் தமிழ் மாணவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாமையை உறுதி செய்யுமாறு வேண்டுகின்றோம்.

பல்கலைக்கழக நுழைவு என்னும் எந்தப் புள்ளியில் இனப்பிரச்சினை ஆரம்பமாகியதோ அதே புள்ளியில் மீண்டும் வந்து நிற்கின்றோமா? என்று எண்ணத் தோணுகின்றது. தமிழ் மக்களின் உரிமைப் பயணத்தில் பலமான குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் குரலை நசுக்கும் விதமாக பெரும்பாண்மையின மாணவர்கள் திட்டமிட்ட வகையில் உள்நுழைக்கப்பட்டு வருகின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

இவ்வாறானதொரு சூழலில் அவர்கள் பெரும்பாண்மையினைக் கைப்பற்றுவதன் ஊடாக தமிழ் மாணவர்களுக்குரிய தலைமைத்துவ வாய்ப்புக்கள் யாவும் சனநாயகம் என்ற போர்வையில் பறிக்கப்படுவதற்கான சூழல் எழுந்துள்ளது. இதனால் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்கென்றிருக்கும் இறுதியான ஒரேயொரு வாய்ப்பாகவிருக்கும் யாழ்ப்பாணப்




பல்கலைக்கழகமும் இழக்கப்படும் சூழல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு வருகின்றது.

தாயகத்தில் இடம்பெறும் பௌத்த - சிங்களமயமாக்கலுக்கு எதிராக யாழ் பல்கலைச் சமூகம் போராடி வருகையில், எமது விரிவுரையாளர்களே பல்கலையினுள் சிங்களமயமாக்கலை முன்னெடுக்கும் சூழல் உருவாகுமேயானால் அது ஒரு முரணான செயலாகும்.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே எமக்கு அநீதி இழைக்கப்படுகிறது, எவரேனும் நீதி தாருங்கள்" என்னும் கையறு நிலைக்கு எமது தமிழ் மாணவர்களை தள்ளிவிட வேண்டாம் என்றும், இவை பொதுவெளியில் மக்கள் மன்றத்திற்குச் செல்ல முன்னர் அவ்வாறான தமிழர் விரோத முயற்சிகளை தடுத்து நிறுத்துமாறும் வேண்டிக் கொள்கிறோம் - என்றுள்ளது.

கடிதத்தின் பிரதி பல்கலைக்கழக துணைவேந்தர், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக

# சிறீலங்கா அரச ஆதரவாளர் அமைப்பால் கனடா பிரதமர் மற்றும் கனடா நாடாளுமன்ற உறுப்பினர் உருவப் பொம்மைகள் வவுனியாவில் எரிப்பு!

யூன் 24, 2023

வவுனியாவில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி ஆகியோரின் உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் தேசிய ஒற்றுமைக்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக இன்று (24) மாலை முன்



னெடுக்கப்பட்டது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி ஆகியோரின் உருவ பொம்மைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் "பயங்கரவாதம் எங்களுக்கு வேண்டாம் ஜஸ்டின் ட்ரூடோ இதை கேள், உங்களுடைய சுதந்திரத்தினை எங்களுக்கு தா, படுகொலை எங்கே நடந்தது?, ஜஸ்டின் ட்ரூடோ இதை கேள் உனக்கு தேவை பயங்கரவாதம், எங்களுடைய நாட்டில் கை போடாதே ஜஸ்டின் ட்ரூடோ" போன்ற கோசத்தினை எழுப்பியவாறும், "இலங்கையின் இறையாண்மைக்கு கைகொடுங்கள், கனடா



இனவாதத்தை பற்ற வைக்காதீர்கள் அது குற்றம்" போன்ற பல்வேறு பதாதைகளை தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதியில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் கனடா தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி ஆகியோரின் உருவ பொம்மைகள் வீதியில் போடப்பட்டு எரிக்கப்பட்டன.

இப் போராட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் உட்பட தமிழ், முஸ்லிம், சிங்கள இனத்தினை சேர்ந்த 30க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# இறால் பண்ணைக்கு அமைக்கப்பட்ட சட்டவிரோத மின் வேலியில் சிக்கி கடற்தொழிலாளர் உயிரிழப்பு!

யூன் 28, 2023

இறால் பண்ணைக்கு பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி கடற்தொழிலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு ஓட்டமாவடியை சேர்ந்த முத்துவான் அன்சார் (வயது 54) என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஓட்டமாவடி ஆற்றில் உள்ள ஆமை ஓடை குடா பகுதியில் இறால் பண்ணை அமைந்துள்ள தனியார் ஒருவர் இறால் பண்ணை பாதுகாப்புக்கு என சட்டவிரோதமான முறையில் மின்சார வேலியை அமைத்துள்ளார்.

இந்நிலையில் , குறித்த பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்டு இருந்த கடற்தொழிலாளர் மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை குறித்த சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி இதுவரையில் யானை ஒன்றும் மூன்று கால் நடைகளும் இறந்துள்ள போதிலும் குறித்த நபருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்காத நிலையிலையே நேற்றைய தினம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என ஊரவர்கள் குற்றம் சாட்டு கின்றார்கள்.



# கொக்குத்தொடுவாய் மத்தி, பிரதான வீதி அருகாமையில் நீர் வழங்கள் அதிகாரசபையினால் நீழ் வழங்கல் வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போது மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது!

## யூன் 29.2023










# கனடிய செய்திகள்

## மனிடோபா நெடுஞ்சாலை விபத்தில் 15 பேர் பலி!

யூன் 16, 2023

கனேடிய மாகாணமான மனிடோபாவில் நடந்த சாலை விபத்தில் குறைந்தது 15 பேர் இறந்துள்ளனர் என்று ரோயல் கனடியன் மவுண்டட் காவல்துறை (RCMP) தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் வயதானவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தும் டிரெய்லர் டிரக் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

வின்னிபெக்கிற்கு மேற்கே இரண்டு மணிநேரத்தில் கார் பெரிக்கு அருகில் உள்ள டிரான்ஸ்-கனடா நெடுஞ்சாலையில் இவ்விபத்து நடந்தது.

இன்று வியாழக்கிழமை (17:35 பிஎஸ்டி) உள்ளூர் நேரப்படி 11:43 மணிக்கு விமான ஆம்புலன்ஸ் மற்றும் 12 ஆம்புலன்ஸ்கள் உள்ளிட்ட அவசர வாகனங்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டன.

பேருந்தில் இருந்த பெரும்பாலான முதியவர்கள் டாபின், மனிடோபா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.



## கனேடிய நிரத்தரக் குடியுரிமை அனுமதி தொடர்பில் முக்கிய அறிவிப்பு!

யூன் 21. 2023

கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு, கனேடிய நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கு விண்ணப்பிப்போரின் Biometrics சேகரிப்பு தொடர்பில், தனது கொள்கையில் முக்கிய மாற்றம் ஒன்றைச் செய்துள்ளது.

கனடாவில் நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கு விண்ணப்பிப்போர், தங்கள் கைரேகைகள் மற்றும் தங்கள் முகத்தைக் காட்டும் புகைப்படம் ஆகியவற்றை, கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பிடம் சமர்ப்பிக்கவேண்டும். இவைதான் Biometrics என அழைக்கப்படுகின்றன. அவற்றை சமர்ப்பிப்பதற்கான கட்டணம் 85 கனேடிய டொலர்கள் ஆகும்.

ஜூன் 14 முதற்கொண்டு, நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கு விண்ணப்பிப்போர், தங்கள் கைரேகைகள் மற்றும் தங்கள் முகத்தைக் காட்டும் புகைப்படம் ஆகியவற்றை, அதாவது Biometrics விவரங்களை சமர்ப்பிக்கவேண்டும்.

ஏற்கனவே அவர்கள் தற்காலிக குடியிருப்பு அனுமதிக்காக Biometrics விவரங்களை சமர்ப்பித்திருந்தாலும், மீண்டும் அவர்கள் அவற்றை சமர்ப்பிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோவிட் காலகட்டத்திற்காக மட்டும், ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருந்த Biometrics விவரங்களை மீண்டும் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு நிலை உருவாகியிருந்தது.

இப்போது கோவிட் காலகட்டம் முடிந்துவிட்டதால், கோவிட் கால கட்டத்திற்கு முன் நடந்ததுபோலவே, நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கு விண்ணப்பிப்போர் தங்கள் கைரேகைகள் மற்றும் தங்கள் முகத்தைக் காட்டும் புகைப்படம் ஆகியவற்றை, அதாவது Biometrics விவரங்களை சமர்ப்பிக்கவேண்டும் என



கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு அதிகாரி ஒருவர் விளக்கமளித்துள்ளார்.

## ரொறன்ரோ பிக்கரிங் பகுதியில் பாரிய விபத்து; இருவர் பலி!

மே 21, 2023

ரொறன்ரோ பிக்கரிங் பகுதியில் இடம்பெற்ற கோர வீதி விபத்துச் சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிக்கரிங் 401 அதிவேக நெடுஞ்சாலையில் எரிபொருள் ஏற்றிச் சென்ற ட்ரக் வண்டியொன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இந்த ட்ரக் வண்டியானது எதிரில் வந்த ட்ரக் மற்றும் பயணிகள் வாகனமொன்று என்பனவற்றுடன் மோதுண்டுள்ளது.

இந்த சம்பவத்தில் ட்ரக் வண்டிகளின் சாரதிகள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மூன்றாவது வாகனமும் தீப்பற்றிக் கொண்டதாகவும் அதில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக தப்பித்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






### முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# கனடிய பாடசாலைகளில் மீண்டும அறிமுகமாகும் கூட்டெழுத்து முறை!

யூன் 23, 2023

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் மீண்டும் கூட்டெழுத்து கற்பித்தல் மீள ஆரம்பிக்கப்பட உள்ளது.

கடந்த காலங்களில் கூட்டெழுத்து எழுதுவது தொடர்பில் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் பாடசாலை பாடத் திட்டத்தில் கூட்டெழுத்து எழுதுவதற்கு கற்பிக்கப்பட உள்ளது.

கூட்டெழுத்து எழுதுதல் மாணவர்களின் கையெழுத்து போடுவதற்கான பயிற்சி மட்டுமல்ல என கல்வி அமைச்சர் ஸ்டீவன் லீஸ் தெரிவித்துள்ளார்.

கூட்டெழுத்து பயிற்சியானது இளையர்களின் பல்வேறு ஆற்றல் திறன்களை விருத்தி செய்யக்கூடியது என கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த தலைமுறையினர் ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்கப்பட வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.



# உலகின் மிக மோசமான காற்றின் தரத்தை உடைய நகரமாக மொன்றியால் பதிவாகியுள்ளது!

யூன் 27, 2023

உலகின் மிக மோசமான காற்றின் தரத்தை உடைய நகரம் கனடாவில் பதிவாகியுள்ளது.

உலகின் பிரதான நகரங்களில் காற்றின் தரம் தொடர்பில் தகவல்கள் நாள்தோறும் திரட்டப்பட்டு பதிவிடப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்றைய தினம் உலகின் மிக மோசமான காற்றின் தரத்தை கொண்ட நகரமாக கனடாவின் மொன்றியால் நகரம் பதிவாகியுள்ளது.

காற்றின் தரத்தை அளவீடு செய்வதற்காக பயன்படுத்தப்படும் சுட்டிகளின் அடிப்படையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக நேற்றைய தினம் கனடாவின் மொன்றியால் நகரின் காற்றின் தரம் 230 வளி மாசடைதல் புள்ளிகளை கொண்டிருந்தது.

அதற்கு அடுத்தபடியாக குவைத் நாட்டின் குவைத் நகரத்தில் 221 புள்ளிகள் காணப்பட்டன.

வடக்கு கியுபெக்கில் நிலவி வரும் காட்டுத் தீ நிலைமைகளினால் இவ்வாறு மொன்றியாலில் காற்றின் தரம் மிக மோசமடைந்துள்ளது.



# ரொரன்டோ மாநகரசபை மேயபராக ஒலிவியா சோவ் தெரிவு!

யூன் 28, 202

டொரண்டோ மாநகர சபையின் நேராக ஒலிவியா சோவ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 13 ஆண்டுகளாக மாநகர சபையின் ஆட்சி அதிகாரம் வலது சாரி கட்சிகளின் வசம் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

டொரன்டோ நகரம் மீள் இணைக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக பெண் ஒருவர் மேயர் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

66 வயதான சோவ் ஆரம்ப முதலே இந்த தேர்தலில் முன்னணி வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் 37.2 வீத வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த நாள் மகிழ்ச்சிகரமான நாள் என தெரிவித்துள்ள சோவ், ஒன்றிணைந்து செயல்படும்போது பல வெற்றிகளை ஈட்ட முடியும் என்பது தெளிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு ஆதரவளித்த அனைத்து வாக்காளர்களுக்கும் நன்றி பாராட்டுவதாக தெரிவித்துள்ளார்.




# கனடாவில் பற்றிய தீயின் புகைமண்டலம் வட அட்லாண்டிக் கடலைத் தாண்டி ஐரோப்பா வரை நீண்டுள்ளதாக தெரிவிப்பு!

யூன் 28, 202

கனடாவில் பற்றி எரிந்து வரும் காட்டுத் தீயின் புகைமண்டலம் வட அட்லாண்டிக் கடலைத் தாண்டி ஐரோப்பா வரை நீண்டுள்ளதாக தெரிவிக்கபட்டுகின்றது.





76 ஆயிரம் சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவில் தற்போது கனடாவில் எரிந்து கொண்டிருக்கும் காட்டுத் தீ மிக மோசமான பதிவு என என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் கோப்பர்நிகஸ் வளிமண்டல கண்காணிப்பு சேவை தெரிவித்துள்ளது.

இக் காட்டுத் தீ காரணமாக 160 மில்லியன் டன் கார்பனை வெளியிட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

காட்டுத் தீ காரணமாக இந்த மாதத் தொடக்கத்தில் நியூயார்க் நகரம் புகை மண்டலமாகக் காட்சியளித்த நிலையில், தற்போது வட அட்லாண்டிக் கடலைத் தாண்டி ஐரோப்பாவை அடைந்துள்ளது.

அதேசமயம் இதனால் புகை அதிகமாக இருந்தாலும் காற்றின் தரம் பாதிக்கப்பட வாய்ப்பில்லை என்று கூறப்பட்டுள்ளது.

# சுவிட்சர்லாந்து வளி தரம் குறித்த நிறுவனத்தினால் உலகின் காற்றின் தரம் குறித்த பட்டியலில் ரொரன்டோ நகரின் பெயரும் உள்ளடக்கம்!

யூன் 29, 2023



உலகின் காற்றின் தரம் குறைந்த நகரங்களின் வரிசையில் டொரன்டோ நகரின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து வளி தரம் குறித்த நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காட்டுத்தீ காரணமாக கனடாவின் அனேகமான பகுதிகளில் இவ்வாறு காற்றின் தரம் மோசமடைந்துள்ளது.

குறிப்பாக டொரன்டோ பெரும்பாகப் பகுதி, ஹமில்டன் பகுதி போன்றவற்றின் காற்றின் தரம் மிக மோசமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகில் காற்றின் தரம் மிகவும் மோசமான நகரமாக சிக்காகோ கருதப்படுகிறது.

கனடாவின் காட்டுத்தீ புகைகள் சிக்காகோ நகரை அடைந்துள்ளதனால் இவ்வாறு மோசமான காற்றின் தரத்தை கொண்ட நகரங்களில் ஒன்றாக சிக்காகோ அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக மோசமான காற்றின் தரத்தை கொண்ட ஆறாவது நகரமாக டொரன்டோ நகரம் பட்டியலிடப்பட்டுள்ளது.

காட்டுத்தீ காரணமாக காற்றின் தரம் மிகவும் குறைவடைந்து வரும் நிலையில் ஆரோக்கிய கேடுகள் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் பல்வேறு மருத்துவத்துறைப் பணியாளர்களுக்கு தட்டுப்பாடு!

யூன் 29, 202

கனடாவில், குடும்ப நல மருத்துவர்கள் முதல், பல்வேறு மருத்துவத்துறைப் பணியாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

ஆகவே, அது தொடர்பான அறிவிப்பு ஒன்றை நேற்று பெடரல் அரசு வெளியிட்டுள்ளது.

கனடாவில், குடும்ப நல மருத்துவர்கள் முதல், பல்வேறு மருத்துவத்துறைப் பணியாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதைத் தொடர்ந்து, கனடாவின் புலம்பெயர்தல் அமைப்பைப் பயன்படுத்தி மருத்துவத்துறைப் பணியாளர்களைப் பணிக்கு எடுக்க இருப்பதாக பெடரல் அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தக ஊழியர்கள், பல் மருத்துவர்கள், பிஸியோதெரபிஸ்டுகள், கண் சிகிச்சை நிபுணர்கள் முதலானோருக்கு கனடாவில் தட்டுப்பாடு நிலவுகிறது.

குடும்ப நல மருத்துவர்களைப் பொருத்தவரை, ஆறு மில்லியன் கனேடியர்களுக்கு ஒரு குடும்ப நல மருத்துவர் இல்லை என ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

ஐந்து ஆண்டுகளில் மருத்துவர்கள் தட்டுப்பாடு இன்னும் மோசமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2028 வாக்கில், கனடாவில் 30,000 குடும்ப நல மருத்துவர்கள் மற்றும் பொது மருத்துவர்கள் உட்பட 44,000 மருத்துவர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என பெடரல் அரசின் தரவுகள் தெரிவிக்கின்றன.





# தமிழக செய்திகள்



## விழுப்புரம், மேல்பாதி திரௌபதி அம்மன் கோயிலுக்குள் செல்வதற்குரிய ஆதித்தொல் குடிமக்களின் வழிபாட்டுரிமையை நிலைநாட்டாது, கோயிலை முத்திரையிட்டு மூடுவதா? சீமான் கண்டனம்

யூன் 13, 2023

விழுப்புரம் அருகே, ஆதித்தொல்குடி மக்கள் வழிபாடு செய்ய அனுமதி மறுக்கப்பட்ட மேல்பாதி திரௌபதி அம்மன் கோயிலுக்கு முத்திரையிட்டு, அரசதிகாரிகள் மூடியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. கோயில் என்பது அனைத்து மக்களுக்குமான பொதுச்சொத்து அங்கு சென்று வழிபாடு செய்ய எல்லோருக்கும் சமவுரிமைவுண்டு என்பதே சட்டம் முன்வைக்கும் சனநாயக நியதியாகும். சாதியைக் காரணமாகக் காட்டி, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு வழிபாடு செய்ய அனுமதி மறுப்பதும், கோயிலுக்குள் நுழையவே விடாது தடுப்பதும் எதன் பொருட்டும் ஏற்புடையதல்ல. அதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஆதித்தொல்குடிகளுக்குக் கோயிலுக்குள் நுழைந்து வழிபாடு செய்ய அனுமதி மறுக்கப்படும் பொழுது சட்டத்தின் துணையோடு அவர்கள் உள்ளே நுழைய வழிவகை செய்வதும், வழிபாடு செய்ய வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதும்தான் சரியான நிர்வாக நடவடிக்கையாக இருக்க முடியும். அதனைவிடுத்து, கோயிலுக்கு முத்திரையிட்டு, அக்கோயிலை மொத்தமாக மூடுவது சிக்கலை மேலும் பெரிதுப்படுத்துமே ஒழிய, ஒருபோதும் தீர்வைத் தராது. சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுமெனக் காரணம் கூறி கோயிலை இழுத்து மூடியிருப்பது அப்பட்டமான ஏமாற்று வேலை. இதன் மூலம் மக்களிடையே மேலும் பதற்றமும், இறுக்கமும்தான் உருவாகும். சாதியின் பெயரால் உரிமைகள் மறுக்கப்படும்போது, சக மக்கள் ஒடுக்கப்படும்போது ஆளும் அரசு உரிமையையும், நியாயத்தையும் நிலைநாட்ட வேண்டும் அதை விடுத்து சிக்கலைக் கிடப்பில் போடுவது சனநாயகத் துரோகமாகும்.

கேரளாவில் முன்னெடுக்கப்பட்ட வைக்கம் கோயில் நுழைவுப் போராட்டத்தின் நூற்றாண்டுக் கூட்டத்தில், திராவிடத்தின் பெருமையெனக் கூறி, சுயதம்பட்டம் அடித்துக் கொள்கிற திமுகவின் தலைவரும், முதல்வருமான ஐயா ஸ்டாலின் அவர்கள், தங்களது ஆட்சிக்காலத்தில் அனுமதி மறுக்கப்பட்ட ஆதிக்குடி மக்களின் கோயில் வழிபாட்டுரிமையை நிலைநாட்டாது கோயிலைப் பூட்டுவது வெட்கக்கேடு. சாதியத்தையும், தீண்டாமையையும் சமரசமின்றி எதிர்ப்போமென வாக்குறுதி அளித்துவிட்டு, சாதியவாதிகளின் செயலுக்குத் துணைபோகும் திமுக அரசின் இச்செயல் இழிவான அரசியலில்லையா? அற்ப அரசியலுக்காகவும், சாதிய வாக்குக்காகவும் இரட்டை வேடமிடும் திமுக அரசின் இத்தகைய சந்தர்ப்பவாதத்தின் பெயர் தான் 'திராவிட மாடல்' ஆட்சியா? பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்று தராது கோயிலையே மூடுவதுதான் திமுகவின் சமூக நீதிக்கொள்கையா? ஏற்கனவே, புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் குடிநீர்த்தொட்டியில் மனிதக்கழிவு கலக்கப்பட்ட விவகாரத்தில் 4 மாதங்களைக் கடந்தும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவோ. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் சொல்லவோ, சாதியத்தின் குறியீடாக இருக்கும் அந்தக் குடிநீர்த்தொட்டியை இடித்துத் தகர்க்கவோ முன்வராத திமுக அரசு, இக்கோயில் விவகாரத்தில் கோயில் வழிபாட்டுரிமையைப் பெற்றுத் தராது கோயிலையே முத்திரையிட்டு, மூடுவது எந்தவகையில் நியாயமாகும்? இதுதான் திராவிடம் சாதியத்தையும், தீண்டாமையையும் எதிர்க்கும் இலட்சணமா? பேரவலம்!



ஆகவே, மேல்பாதி திரௌபதி அம்மன் கோயில் விவகாரத்தில் முத்திரையிடப்பட்டு, மூடப்பட்டதைத் திரும்பப் பெற்று, கோயிலைத் திறக்க வேண்டுமெனவும், காவல்துறையினரின் பாதுகாப்போடும், அரசதிகாரிகளின் துணையோடும் ஆதிக்குடிகள் கோயிலுக்குள் சென்று வழிபாடு செய்யும் உரிமை நிலைநாட்டப்பட வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன்.

## பயணிகள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அதிவேகமாக இயக்கப்படும் தனியார் பேருந்துநிறுவனங்களின் உரிமங்களை ரத்து செய்ய வேண்டும் சீமான் வலியுறுத்தல்!

யூன் 19, 2023

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே இரு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட கோரவிபத்தில் சிக்கி 4 பயணிகள் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்துள்ள செய்தி பெரும் அதிர்ச்சியும், மிகுந்த மன வேதனையும் அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆறுதலைத் தெரிவித்து, துயரில் பங்கெடுக்கிறேன். காயமடைந்தவர்கள் விரைந்து நலம் பெறவும் விழைகிறேன்.

அலட்சியமாகப் பேருந்தை இயக்கி இவ்விபத்து ஏற்பட காரணமானவர்களை தமிழ்நாடு அரசு உடனடியாக கைது செய்து கடும் தண்டனை பெற்றுத்தர வேண்டும். மேலும், தமிழ்நாடு முழுவதும் பயணிகள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில், அதிவேகமாக இயக்கப்படும் தனியார் பேருந்துகளைக் கண்டறிந்து, அதன் ஓட்டுநர்கள் மற்றும் அப்பேருந்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்களை ரத்து செய்ய தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய கடும் நடவடிக்கைகள் மூலம் மட்டுமே, எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் ஏற்படுவதையும், அவற்றில் சிக்கி அப்பாவி மக்கள் பலியாவதையும் தடுக்க முடியும்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு 50 லட்ச ரூபாய் துயர் துடைப்பு நிதியாக வழங்குவதுடன் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டுமெனவும், காயமடைந்தவர்களுக்கு உரிய உயர் மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன், துயர் துடைப்பு நிதியாக 10 லட்ச ரூபாயும் வழங்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

## நெடுந்தீவில் 22 தமிழக மீனவர்கள் சிறீலங்கா கடற்படையினரால் கைது!

யூன் 22, 2023

இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்கும் அடுத்து சீனாவிற்கும் பயணிக்கவுள்ள நிலையில் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு அருகே நேற்று புதன்கிழமை இரவு இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் 3 படகையும் அதிலிருந்த 22 கடற்றொழிலாளர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை மயிலிட்டி துறைமுகத்துக்கு அழைத்து வந்திருந்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.



## மத்திய அரசின் மின்சார விதி திருத்தம்; மக்கள் மீது கடுமையான பொருளாதார தாக்குதல்... பாமக நிறுவனர் ராமதாஸ் கண்டம்!

யூன் 24, 202

மத்திய அரசின் மின்சார விதி திருத்தத்தை தமிழகத்தில் செயல்படுத்த பாமக நிறுவனர் ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். மத்திய அரசின் இந்த மின்சார விதி திருத்தம் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மீது கடுமையான பொருளாதார தாக்குதலைத் தொடுக்கும் பெரும் அநீதி என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழகம் உட்பட பல மாநிலங்களின் மின்சாரக் கட்டணம் சமீபத்தில் உயர்த்தப்பட்டது. இதனால் ஏழை எளிய மக்கள் பெரும் சிரமம் அடைந்துள்ளனர். தற்போது மத்திய அரசின் மின்சார விதி திருத்தத்தால் மின்சாரக் கட்டணம் மேலும் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மத்திய அரசின் மின்சார விதி திருத்தத்திற்கு பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, மத்திய அரசு கொண்டுவந்த மின்சார சட்டம் மற்றும் அதன் அடிப்படையிலான மின்சார (நுகர்வோர் உரிமை) விதிகளில் செய்யப்பட்ட திருத்தங்களால் எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்று அஞ்சினோமோ, அவை அனைத்தும் நடைமுறைக்கு வரத் தொடங்கிவிட்டன. முதல்கட்டமாக, 2024-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வணிகப் பயன்பாட்டுக்கான மின் இணைப்புகளுக்கும், 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வீடுகளுக்கான மின் இணைப்புகளுக்கும் அதிக மின் பயன்பாட்டு நேரங்களுக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மீது கடுமையான பொருளாதார தாக்குதலைத் தொடுக்கும் இந்த நடவடிக்கை



பெரும் அநீதி ஆகும்.

# உலக செய்திகள்

## ஒரே ரொக்கெட்டில் 41 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தி சீனா புதிய சாதனை!

யூன் 16, 2023

சீனாவின் ஷாங்க்சி மாகாணத்தில் உள்ள தையுவான் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து நேற்று மதியம் 1.30 மணிக்கு ஒரே நேரத்தில் 41 செயற்கைக்கோள்களுடன் நீண்ட 2டி ரொக்கெட்டை விண்ணில் செலுத்தி அந்நாடு புதிய சாதனையை படைத்துள்ளது.

இந்த நீண்ட ரொக்கெட் 476ஆவது விமானப் பயணமாகும். ஏவப்பட்ட செயற்கைக்கோள்கள் முக்கியமாக வணிக ரிமோட் சென்சிங் சேவைகள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்ப சரிபார்ப்பை வழங்கும் எனவும் செயற்கைக்கோள்களில் பெரும்பாலானவை 36 ஜிலின்-1 தொடரைச் சேர்ந்தவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், ஜிலின்-1 செயற்கைக்கோள்களின் எண்ணிக்கை 108ஆக உயர்ந்துள்ளது.

சீனா, 420 கிலோகிராம் எடை கொண்ட ஜிலின்-1 செயற்கைக்கோளை 2015ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தியது. ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளில், அதன் எடையை வெறும் 22 கிலோவாகக் குறைத்துள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, 2030ஆம் ஆண்டில் நிலவு மற்றும் அதற்கு மேற்பட்ட பயணங்கள் மற்றும் பூமியில் தரை செயற்பாடுகளுக்கு இடையே ஒரு தகவல் தொடர்பு பாலமாக செயற்படும் ரிலே செயற்கைக்கோள்களை உருவாக்கவும் சீனா செயற்பட்டு வருகிறது.



2030ஆம் ஆண்டுக்குள் சந்திரனில் விண்வெளி வீரர்களை தரையிறக்க சீனா திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதல் அணு ஆயுதங்கள் பெலாரசுக்கு மாற்றப்பட்டதை உறுதி செய்தார் ரஷ்யா அதிவர் புதின்!

யூன் 17, 2023

தந்திரோபாய அணு ஆயுதங்களின் முதல் தொகுதியை ரஷ்யா பெலாரஸில் நிலைநிறுத்தியுள்ளது என்று விளாடிமிர் புடின் கூறுகிறார்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேச பொருளாதார மன்றத்தில் உரையாற்றிய பின்னர் கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் கூறினார்.

தந்திரோபாய அணு ஆயுதங்களின் முதல் தொகுதியை ரஷ்யா பெலாரஸில் நிலைநிறுத்தியுள்ளது. ரஷ்யாவின் பிராந்தியம் அல்லது மாநிலம் அச்சுறுத்தப்பட்டால் மட்டுமே அவை பயன்படுத்தப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி ஒரு மன்றத்தில் கூறினார்.

ரஷ்யாவின் இராணு நடவடிக்கையைக் கட்டுப்படுத்துதல் மற்றும் எங்களுக்கு மூலோபாய தோல்வியை ஏற்படுத்த நினைப்பவர்களுக்கு நாங்கள் நினைவூட்டுவதாக புதின் கூறினார்.

தந்திரோபாய அணு ஆயுதங்களை மாற்றுவது கோடையின் இறுதிக்குள் முடிவடையும் என்று புதின் கூறினார்.

ரஷ்ய மாநிலத்திற்கு ஆபத்து ஏற்பட்டால் தீவிர நடவடிக்கைகளைப் பயன்படுத்துவது சாத்தியம் என்று நான் ஏற்கனவே கூறியுள்ளேன்.

தந்திரோபாய அணு ஆயுதங்கள் சிறிய அணு ஆயுதங்கள் மற்றும் போர்க்களத்தில் பயன்படுத்த அல்லது வரையறுக்கப்பட்ட வேலைநிறுத்தத்திற்கான விநியோக அமைப்புகளாகும். அவை பரவலான கதிரியக்க வீழ்ச்சியை ஏற்படுத்தாமல் ஒரு குறிப்பிட்ட பகுதியில் எதிரி இலக்குகளை அழிக்க வடிவமைக்கப்பட்டுள்ளன.

மிகச்சிறிய தந்திரோபாய அணு ஆயுதங்கள் ஒரு கிலோதொன் அல்லது அதற்கும் குறைவாக இருக்கலாம் (ஆயிரம் தொன் வெடிக்கும் TNT வெடிமருந்துக்குச் சமமானவை).

மிகப் பெரியவை 100 கிலோ தொன்கள் வரை இருக்கும். ஒப்பிடுகையில், 1945 இல் ஹிரோஷிமா மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டு 15 கிலோ தொன்கள் எடை கொண்டது.

உக்ரைனைத் தாக்குவதற்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்த கிரெம்ளின் திட்டமிட்டுள்ளதாக எந்த அறிகுறியும் இல்லை என்று அமெரிக்க அரசாங்கம் கூறுகிறது.



ரஷ்யா அணுவாயுதத்தைப் பயன்படுத்தத் தயாராகி வருகிறது என்பதற்கான எந்த அறிகுறிகளையும் நாங்கள் காணவில்லை" என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் கூறினார்.

பெலாரஸ் ஒரு முக்கிய ரஷ்ய நட்பு நாடாகும். மேலும் கடந்த ஆண்டு பிப்ரவரியில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பிற்கு ஏவுதளமாக செயல்பட்டது.

## பழங்குடியினரின் குரல் மீதான முக்கிய வாக்கெடுப்புக்கு தயாராகும் அவுஸ்திரேலியா!

யூன் 19, 2023

அவுஸ்திரேலியாவின் பழங்குடியின மக்கள் அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டுமா என்பது குறித்த வாக்கெடுப்புக்கு அவுஸ்திரேலியாவில் உள்ள சட்டமியற்றுபவர்கள் திங்களன்று ஒப்புதல் அளித்துள்ளனர்.

இத்தகைய மாற்றம், பழங்குடி மக்களுக்கு 1960கள் வரை தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பில் ஒரு தனித்துவமான குழுவாகக் கூட கருதப்படவில்லை. முதல்முறையாக கொள்கை வகுப்பதில் அர்ப்பணிப்புடன் கூறப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் மேலவையான செனட் சட்டவரைபுக்கு 52 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 19 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்து நிறைவேற்றினர். இதேநேரம் அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் கீழ்சபை கடந்த மே மாதம் வரைவு சட்டத்தை நிறைவேற்றியது. வாக்கெடுப்பு முடிந்ததும் செனட்டில் கைதட்டல் எழுந்தன.

நாம் ஒன்று சேர்ந்து, பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஜலசந்தி தீவு மக்களை நமது அரசியலமைப்பில் அங்கீகரிப்பதன் மூலம் சரித்திரம் படைக்க முடியும் என்று பிரதமர் அந்தோனி அல்பானீஸ் ட்வீட் செய்துள்ளார்.

அவரது மத்திய இடது அரசாங்கம், குறைந்த அளவிலான கல்வி, மோசமான சுகாதாரம் மற்றும் அதிக சிறைத்தண்டனை விகிதங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்படும் பழங்குடி சமூகத்தை மேம்படுத்த விரும்புவதாகக் கூறுகிறது.

அவுஸ்திரேலியர்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு குரல் கொடுப்பதற்கு ஒரு படி நெருக்கமாக உள்ளது என்று பூர்வீக அவுஸ்திரேலிய அமைச்சர் லிண்டா பர்னி கூறினார்.

அரசியலமைப்பில் எந்த மாற்றமும் இரட்டைப் பெரும்பான்மை தேவை. அதாவது, தேசிய அளவில் 50%க்கும் அதிகமான "ஆம்" வாக்குகள் இருக்க வேண்டும் மற்றும் குறைந்தது ஆறு மாநிலங்களில் நான்கு மாநிலங்கள் ஆதரவாக பெரும்பான்மையைப் பதிவு செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சியான பழமைவாதக் கூட்டணியானது அதன் வாக்கெடுப்பு நிலைப்பாட்டில் பிளவுபட்டுள்ளது. ஆனால் லிபரல் கட்சியின் தலைவர் பீட்டர் டட்டன் "ஆம்" என்ற வாக்கு அதிகாரப்பூர்வமாக நாட்டை இன ரீதியாகப் பிரிக்கும் என்று புகார் செய்துள்ளார்.

பழங்குடியின அவுஸ்திரேலியர்களிடையே கூட, முன்மொழியப்பட்ட மாற்றம் உலகளவில் பிரபலமாகவில்லை.

சுதந்திரமான செனட்டரும், பழங்குடி ஆர்வலருமான லிடியா




தோர்ப், இந்த நாட்டில் உள்ள வெள்ளையர்களின் குற்றத்தை தணிக்கும் நோக்கத்தில் "வொயிஸ் டு பார்லிமென்ட்" ஒரு சக்தியற்ற ஆலோசனை அமைப்பு என்று விவரித்தார்.

# பிரித்தானியத் தலைநகரில் சிறீலங்கா அதிபர் ரணிலுக்கு எதிராக ஈழத்தமிழர்கள் போராட்டம்!

யூன் 19. 2023



பிரித்தானியத் தலைநகர் லண்டனில் சிறிலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்காவுக்கு எதிராக இன்று இரண்டு இடங்களில் கண்டனப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

முதலாவது போராட்டம் ரணில் விக்ரமசிங்க தங்கியிருக்கும் பார்க்லேன் இன்ரர் கொண்டினன்ரல் ஆடம்பர விடுதிக்கு அருகில் இன்று பிற்பகலில் இடம்பெற்றிருந்தது.

இதன்பின்னர் ரணில் விக்ரமசிங்க பங்கெடுக்கும் சர்வதேச ஜனநாயக ஒன்றிய மாநாடு இடம்பெறும் இடத்துக்கு அருகிலும் மாலை 3.30 மணி முதல் எதிர்ப்பு ஒன்றுகூடல் ஒன்றும் நடத்தப்பட்டிருந்தது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தின், போது “எமது தேசம் தமிழீழம், எமது தலைவர் பிரபாகரன், ரணிலே வெளியேறு” எனும் கோசங்களை எழுப்பி தமது எதிர்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

உலகளாவிய ரீதியில் பழமைவாத, மற்றும் மைய - வலது கட்சித் தலைவர்களை இணைத்து பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் மார்கிரட் தட்சர் ஆரம்பித்த சர்வதேச ஜனநாயக ஒன்றியத்துக்கு அப்போதைய சிறீலங்கா அதிபர் ஜே.ஆர் ஜெயவர்த்தன ஆதரவளித்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது அவரது மருமகனான ரணில் விக்ரமசிங்க இந்த அமைப்பின் நாற்பதாவது ஆண்டுவிழா அமர்வில் பங்கெடுப்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மனித உரிமை மீறல் குற்றவாளிகளுக்கான தண்டனைக்கு சர்வதேசத்தின் உதவியை நாடுகிறது ஐ.நா.!

யூன் 22, 2023

இலங்கையில் பொறுப்புக்கூறல் முழுமையடையாமல் இருக்கும் வரை, இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றவாளிகளை விசாரித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு உலகளாவிய மற்றும் பிரிதொரு நாட்டினுடைய அதிகார வரம்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளைப் பயன்படுத்துமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை உரிமைகள் பேரவை சர்வதேச சமூகத்திடம் வலியுறுத் தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உதவி உயர்ஸ்தானிகர் நடா அல்-நஷிப் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

மூன்றாம் நாடுகளில், தொடர்புடைய பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கு ஆதரவளிக்குமாறும், இலங்கையில் உரிமை மீறல் விடயங்களில் நம்பத்தகுந்த குற்றவாளிகளுக்கு எதிராக இலக்குத் தடைகளை நியாயமாகப் பயன்படுத்துவதற்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது வழமையான அமர்வின் போது நேற்று இலங்கை தொடர்பான வாய்மூல புதுப்பிப்பை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான பிரதி உயர்ஸ்தானிகர் நடா அல்-நஷிப் முன்வைத்தார்.

இலங்கையின் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணிப்பதில் இருந்து சில முக்கிய முன்னேற்றங்கள் மற்றும் போக்குகள் அவதானிக்கப்பட்டுள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடியானது இலங்கையர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வில் தொடர்ந்தும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடனளிப்பவர்களுடன் கலந்துரையாடல் நடந்து வருகிறது, சர்வதேச நாணய நிதியம் நிதி உதவிப் பொதிக்கு ஒப்புதல் அளித்திருந்தாலும், இது ஒரு முக்கியமான முதல் படியாகும், சாத்தியமான சீர்திருத்தங்களின் சுமை மேலும் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்காமல் இருப்பதை உறுதிசெய்வது முக்கியமாகும்.

பொருளாதார மறுசீரமைப்பினால் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாக்க வலுவான பாதுகாப்பு வலைகள் மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவை என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற போராட்டங்களின் உரத்த மற்றும் அத்தியாவசிய கோரிக்கையான ஊழல் உள்ளிட்ட நெருக்கடியின் அடிப்படைக் காரணிகளை நிவர்த்தி செய்வதும் இன்றியமையாதது என்று பிரதி உயர்ஸ்தானிகர் கூறியுள்ளார்.

எதிர்ப்பு இயக்கமானது சிறந்த நிர்வாகத்திற்கான சமூகத்தின் அபிலாஷைகளை உரத்த குரலில் வெளிப்படுத்தியது மற்றும் இலங்கைக்கான மற்றும் இலங்கையுடன் ஒரு உள்ளடக்கிய பார்வையை வெளிப்படுத்தியது. என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் 12 மாதங்களுக்குப் பிறகு, நீண்டகால சவால்களை எதிர்கொள்ளும் வரலாற்று மாற்றத்திற்கான முழு சாத்தியமும் இலங்கை தேசத்தில் இன்னும் உணரப்படவில்லை என்று அல்-நஷிப் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் ஆழமான நிறுவன சீர்திருத்தங்கள், முன்னெடுப்பு பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பதற்காக இந்த வாய்ப்பைப் பயன்படுத்துமாறு தாம், இலங்கையில் உள்ள அரசாங்கத்தையும் அரசியல் கட்சிகளையும் கோருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி தமிழ் அரசியல் கட்சிகளுடன் ஆரம்பித்துள்ள உரையாடலை நாங்கள் ஊக்குவிக்கிறோம், மேலும் உள்ளூர் மோதல்கள் மற்றும் பதற்றத்தை அதிகரித்து வரும் உள்ளூர் மோதல்களின் ஆதாரமான தொல்பொருள், வனவியல் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துவதை நிறுத்துவதாக அவர் அளித்த வாக்குறுதியை வரவேற்கிறோம்.” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான முக்கியமான உத்தரவை உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது என்பதையும் அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

இருப்பினும், இலங்கையில் இந்த நோக்கங்கள் புதிய சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அரசியலமைப்பு சபையின் புதிய நியமனங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன, இது இந்த முக்கியமான தேசிய நிறுவனத்தின் சுதந்திரம் மற்றும் செயல்திறனுக்கான ஒரு முக்கியமான விடயமாகும்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அல்லது அது போன்ற நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான திட்டங்களை அறிவிப்பதில் கவனம் தேவை என்றும் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை பல தற்காலிக ஆணைக்குழுக்களைக் கண்டுள்ளது, அவை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தத் தவறிவிட்டன. காணாமல் போனோர் அலுவலகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருப்தி அளிக்கும் தீர்மானங்களை எட்டவில்லை.

எனவே உண்மை, பரிகாரம், நினைவூட்டல், பொறுப்புக்கூறல் போன்ற பல்வேறு கூறுகளை இணைக்கும் ஒரு ஒத்திசைவான திட்டம் தேவை என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உதவி உயர் ஸ்தானிகர் தமது வாய்மொழிப் புதுப்பிப்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த காலத்தை கையாள்வதற்கான முயற்சிகளில் பொறுப்புக்கூறல் என்பது அடிப்படை இடைவெளியாகவே உள்ளது.




அத்துடன் தண்டனையிலிருந்து விலக்களித்தல் விடயத்தில் இருந்து விடுபடாத வரை, இலங்கை உண்மையான நல்லிணக்கத்தையோ அல்லது நிலையான சமாதானத்தையோ அடையாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இந்தநிலையில் கடந்த கால மீறல்களை நேரடியாக அங்கீகரிப்பதும் நம்பிக்கையை மேற்கொள்வதும் இலங்கை அதிகாரிகளின் பொறுப்பாகும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உதவி உயர்ஸ்தானிகர் நடா அல்-நஷிப் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கடந்த மாதங்களில், போராட்டங்களின்போது, எதிர்க்கட்சி தலைவர்களை கைது செய்தல், பலவந்தமான கூட்டங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் காவல்துறை நடவடிக்கைகளில் இராணுவத்தை தொடர்ந்து பயன்படுத்துதல் உள்ளிட்ட கடுமையான அணுகுமுறையுடன் துரதிர்ஷ்டவசமாக கடுமையான சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன.

நகைச்சுவை நிகழ்ச்சிகளின் போது வெளியிடப்பட்ட அறிக்கைகள் தொடர்பிலும் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சர்வதேசத் தரத்திற்குப் பின்பற்றும் சட்டத்தை மாற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

ஆனால் மார்ச் மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்பு யோசனையில் கருத்துச் சுதந்திரம், அமைதியான கூட்டம் மற்றும் உழைப்பு சுதந்திரம் ஆகியன வற்றைக் கட்டுப்படுத்தும் பரந்த விதிகள் உள்ளன.

சிவில் சமூகத்தின் வலுவான பின்னடைவைத் தொடர்ந்து, கூடுதல் ஆலோசனைகளுக்காக வரைவு யோசனை இப்போது திரும்பப் பெறப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில அனைவருக்கும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னெடுப்பதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் ஆதரவை வழங்க அலுவலகம் தயாராக உள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உதவி உயர்ஸதானிகர் தமது உரையின் முடிவில் குறிப்பிட்டுள்ளார்.

# பிரான்சில் சிறீலங்கா தூதரக பகுதியில் இடம்பெற்ற ரணில் வருகைக்கு எதிரக போராட்டம்!

யூன் 23. 2023

சிறீலங்கா அதிபர் ரணில் விக்கிரம சிங்காவின் பிரான்சு வருகைக்கு எதிரான எதிர்ப்பு ஒன்றுகூடல் இன்று (23.06. 2023) வெள்ளிக்கிழமை சிறீலங்கா தூதரகம் அமைந்துள்ள பாரிஸ் Dauphine பகுதியில் 14.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 17.00 மணிவரை இடம்பெற்றது.

பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் தமிழீழ மக்கள் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பதாதைகளை ஏந்தியவாறும் தமிழீழத் தேசியக் கொடிகளை ஏந்தியவாறும் இளையோர்கள் பலரும் முன்னின்று குரல் எழுப்பினர்.

பிரெஞ்சு மற்றும் தமிழ் மொழியிலான உரைகளும் இடம் பெற்றன.

நிறைவாகத் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரத்துடன் எதிர்ப்புப் போராட்டம் நிறைவு பெற்றது.

குறித்த போராட்டம் நேற்று (22.06.2023) வியாழக்கிழமை பாரிஸ் Place de Republique பகுதியில் இடம்பெற்றமை குறிப் பிடத்தக்க து.











# ரஷ்யாவை விட்டு பெலாராசுக்கு செல்கிறார் பிரிகோஜின்!

யூன் 24, 2023

பெலாரஷ்ய தலைவர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ வாக்னர் கூலிப்படை என்று அழைக்கப்படும் துணை இராணுவக் குழு வின் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஜினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன் போது பிரிகோஜின் தனது படைகளை மொஸ்கோவை நோக்கி செல்வதை நிறுத்தி நிலைமையை குறைக்க தனது படைகளை முகாங்களுக்குத் திரும்பிச் செல்ல ஒப்புக்கொண்டார் என்று பெலாரஷின் அரச ஊடகமான ரோசியா 24 செய்தி சேவை தெரிவித்துள்ளது.

வாக்னர் தனது போராளிகளுக்கான பாதுகாப்பு உத்தரவாதங் களுடன் ரஷ்யர்கள் இரத்தம் சிந்துவதை தவிர்க்க இந்த உடன் பாடு எட்டப்பட்டுள்ளது. புட்டினுடன் உரையாடல் ஒப்புக் கொள் ளப்பட்டதாக ரோசியா 24 கூறினார்.

பிரிகோஜின் ரஷ்ய நாட்டை விட்டு வெறியேறி பெலாரஷ் செல்லவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மாஸ்கோவை நோக்கி துருப்புக்கள் நகர்வதை நிறுத்த வாக்னர் தலைவர் ஒப்புக்கொண்டதாக பெலாரஸ் கூறுகிறது.

ஆயுத கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று ரஷ்ய அதிபர் புடின் உறுதியளித்தார். தற்போது வாக்னர் படைகள் செய்த கிளர்ச்சிக்காக தேசத் துரோகம் போன்ற எந்த தண்டனையையும் சந்திக்க மாட்டார்கள் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

வாக்னர் குழு போராளிகள் தெற்கு ரஷ்ய நகரமான ரோஸ் டோவ்-ஆன்-டானை விட்டு வெளியேறி தங்கள் கள முகாம் களுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர் என்று பிராந்திய ஆளுநர் கூறினார்.

டாங்கிகள், டிரக்குகள் மற்றும் வாக்னர் படை களைச் ஏற்றிச் செல்லும் பல சிற்றூர்த்திகள் நகரத்தை விட்டு வெளியேறுவ தாகக் கூறப் பட்டுள்ளது.

ரஷ்யாவின் இராணுவத் தலைமைக்கு எதிராக பிரிகோஜின் தலைமை தாங்கிய ஆயுத கிளர்ச்சி முடிவுக்குக் கொண்டுவர மின்ஸ்கின் தரகு ஒப்பந்தத்தின் கீழ் வாக்னர் கூலிப்படைத் தலைவர் எவ்ஜெனி பிரிகோஜின் பெலாரசுக்குச் செல்வார் என்று கிரெம்ளின் சனிக்கிழமை கூறியது.



பெலாரஷ்யன் தலைவர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ, புடினின் ஆதரவுடன் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தார். ஏனெனில் அவர் பிரிகோஜினை சுமார் 20 ஆண்டுகளாக தனிப்பட்ட முறையில் நண்பராக அறிந்திருந்தார். கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறினார்.

இரத்தம் சிந்துதல், உள்ளக மோதல்கள் மற்றும் கணிக்க முடி யாத முடிவுகளுடன் மோதல்களைத் தவிர்ப்பது மிக உயர்ந்த குறிக்கோள் என்று பெஸ்கோவ் கூறினார்.

சனிக்கிழமை தொடங்கப்பட்ட ப்ரிகோஜினுக்கு எதிரான குற்றவியல் வழக்கு கைவிடப்படும் மற்றும் பிற வாக்னர் படையினர் கிளர்ச்சிக்கான தண்டனையை எதிர்கொள்ளாது பெஸ்கோவ் மேலும் கூறினார்.

இந்த ஆயுதக் கிளர்ச்சி உக்ரைனில் நடைபெறும் சிறப்பு இராணுவத்தின் தாக்குதல் திட்டங்களை பாதிக்காது என்று அவர் மேலும் கூறினார்.

# பிரான்சில் தொடரும் போராட்டம்; ஒரு இரவில் மட்டும் 150 பேர் கைது!

யூன் 29, 2023

பிரான்சின் தலைநகர் பாரிசின் புறநகர் பகுதியில் 17 வயது சிறுவன் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த இரண்டு நாட் களாக கலவர பூமியாக உள்ளது.

மோதல்கள் தலைநகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து துலூஸ், டிஜோன் மற்றும் லியோன் உள்ளிட்ட பிற பிரெஞ்சு நகரங்களுக்கு பரவியது.

150 பேர் ஒரே இரவில் கைது செய்யப்பட்டதாக உள்துறை மந்திரி ஜெரால்ட் டார்மான் கூறினார்.

சுமார் 2,000 கலகத்தடுப்பு போலீசார் பாரிஸ் மற்றும் அதை சுற்றியுள்ள புறநகர் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

துப்பாக்கிச் சூடு நடந்த பாரிஸின் மேற்கு Hauts-de-Seine பகு தியில், கறுப்பு உடை அணிந்த முகமூடி அணிந்த ஆர்ப்பாட்டக்



காரர்கள் பாதுகாப்புப் படையினர் மீது பட்டாசுகள் மற்றும் பட்டா சுகளை ஏவியதால், தொடர்ந்து இரண்டாவது இரவு மோதல் வெடித்தது.

வடகிழக்கு பாரிஸின் தொழிலாள வர்க்கத்தின் 18வது மற்றும் 19வது வட்டாரங்களில் குப்பைத் தொட்டிகளை எரிக்கும் எதிர்ப் பாளர்களை கலைக்க, காவல்துறையினர் கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் தெளிப்பை வீசினர் ஆனால் மக்கள் போத் தில்களை வீசி பதிலடி கொடுத்தனர்.



# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4






RE/MAX HALLMARK FIRST GROUP REALTY | RAISING THE BAR

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# இலட்சியத்தில் இரும்பு மனிதர்கள்: கரும்புலிகளுக்கு தலைவர் அஞ்சலி!

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
05.07.1993

எனது அன்புக்குரியவர்களே!

கரும்புலிகள் நாளாகிய இன்றைய தினத்தில், கரும்புலி வீரர்களாகிய உங்கள் மத்தியில், கரும்புலிகள் பற்றிப் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய தினத்தில், முழு இலங்கைத் தீவையும் அதிரவைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர் ஓர் ஒப்பற்ற சாதனையை நிலை நாட்டினான். எமது விடுதலை வரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை இந்த இளம்புலி வீரன், தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படையணியாலும் செய்ய முடியாத பாரிய இராணுவ சாதனையை ஒரு தனிமனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான். எரிமலையைச் சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக் கவைத்தான்.

இந்தப் பூகம்பமான தாக்குதல் நிகழ்வு அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றி யமைத்தது. எதிரியின் சைனியங்கள் நிலைகுலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக்கொண்டது. தனிமனிதனாக, எமது போராளி ஒருவன் தன்னை அழித்து தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

முதன் முதலாக, எமது போராட்ட வரலாறு தியாகத்தின் அதியுன்னதமான ஒரு அற்புதத்தைப் பதிவு செய்து கொண்டது. அன்றிலிருந்து எமது போராட்ட மரபில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்பட்டது. என்றுமில்லாத வகையில் ஒரு புதிய போர்வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப்பார்க்கவும் முடியாத, தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலி வீரர்களின் தோற்றமும், தற்கொடைப் படையாக அவர்களின் வளர்ச்சியும் எழுச்சியும், மிகவும் நுட்பமான அவர்களின் போர்ச் சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகவே எழுந்தது.

நாம் இன அழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்கு குரல் கொடுக்கவோ, கை கொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கிறோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கிறோம். பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதிபூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டுகொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான, ஆபத்தான சூழ்நிலையில் நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில், நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்தவேண்டும். இந்தத் தேவையை, நிர்ப்பந்தத்தை நாம் அசட்டைசெய்ய முடியாது. அல்லாத பட்சத்தில் நாம் இனவாரியாக அழிந்துபோவதைத் தவிர்க்க முடியாது.

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப் பாதை யின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள், அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றிற்கும் மேலாக தன்னையே காதலிக்கிறான். தனது உயிரையே நேசிக்கிறான். உயிர் வாழவேண்டும் என்று துடிக்கிறான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர்வாழ விரும்புவதால், உயிர் அற்றுப்போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்கு பயப்படுகிறான். இது மனித இயல்பு; இயற்கையின் நியதி.

ஆனால் ஒரு கரும்புலிவீரன் தன்னை விட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக்கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்குதன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன்பற்றியது; நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்கவேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்து கொள்ளவேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங் களிலிருந்தும் தன்னை விடுதலை செய்துகொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெறமுடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும்போதுதான் வீரம் தோன்றுகிறது; துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு; கோழைத்தனத்தின் தோழன்; உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் மூலமானது மரணபயம், இந்த மரணபயத்தைக் கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்று விடுகிறான்; அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்து



விடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பார். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

“கரும்புலி” என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும் உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக் குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே “கரும்புலி” என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிவமாக அமையப் பெற்றிருக்கிறது.

இந்த இரகசியத்தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது. ஆளுக்கும் பெயருக்கும் அப்பால், அந்த தனிமனித தனித்துவத்திற்கு அப்பால், செயற்பாடே இங்கு முதன்மை பெறுகிறது. மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகறிது. பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாம தேயமாக உறங்கியபோதும் அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றிக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ்பெற்று வாழும்.

முகத்தை மறைத்து, பெயரையும் புகழையும் வெறுத்து, இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்து விட்ட இந்த சரித்திரநாயகர்களை நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

மனித தியாகத்தின் இமயத்தை தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று மனித வடிவை நோக்கி நகரும் உந்துசக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும்போது இனம் புரியாத உணர்வுகளால் எனது ஆன்மா நடுங்கும்.

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள் கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைப் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் பொழுதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக் கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே.

அன்றொரு காலம் அமைதி வழியில் உரிமை கேட்டு ஆர்ப்பரித்த தமிழினத்தை அடக்கு முறை யாளனின் இரும்புக்கரங்கள் நசுக்கி விட்டன. இன்று நீதிகேட்டு நெருப்பாக எரியும் தமிழரின்



ஆவேச எழுச்சியை எந்தச் சக்திகளாலும் நசுக்கிவிட முடியாது.

**இது கரும்புலிகளின் சகாப்தம்! இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் கொண்டு விட்ட காலம்.**

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும், சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள்; எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், விரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும், எமது வாழ்வுக்காக தமது வாழ்வை துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூசிப்போமாக…!

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

குறிப்பு: 05.07.1993 அன்று, கரும்புலிகள் தின்த்தை முன்னிட்டு தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையை இங்கு பிரசுரிக்கிறோம்.



**எங்களின் நெருப்புக் குழந்தைகளுக்காக**
**ஒரு கணம் தலைகளைக் குனிந்து வணங்குவோம்.**
**தரை, கடல், வான், மறைமுகம் என காற்றோடு**
**கலந்தவர்களுக்காக பூச் சூடி விளக்கேற்றி**
**அவர்களை ஒரு கணமாவது நினைவேந்துவோம்.**


உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
* Furnance * Air Conditioner
* Tankless Water Heater * Heat Pump
* Duct Less * Airmax Velocity * Air Handlers
* Boilers * Fire Places * HRV * Attic Insulation
* Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268




# மில்லர்

மாண்டு போனான்
மறவர்களின் மன்னன்
என்று
மதில்கள்
பறை சாற்றுகின்றன
உன் வீரமரணத்தை
விபரிக்கும்
நம் தேசத்து
மதில்களுக்குத்தான்
எத்தனை எத்தனை
மகிழ்ச்சி

மக்கு மதில்களே
நாங்கள்
உங்களைப் பார்த்து
கண்களைத்
துடைக்கவில்லை
மில்லரைப் பார்த்து
விம்மி அழுகின்றோம்

நெல்லியடி முகாமை
நிர்மூலமாக்க
நீ சென்ற நிலையை
நேரில் நான்
பார்க்கவில்லைத்தான்
ஆனால்
பார்த்தவர்களின்
தகவல்களை
மறக்கமுடியவில்லை

மரணத்துடன்
தோழமை பூண்டது
மறவர் கூட்டம்
ஆனால் நீ
மரணத்தையே
மணம் புரிந்து
அதன்
மடியில் துயின்றவன்

சாவை முறியடிக்க
சிலர்
சாத்திரம் பார்க்கும்
நேரம்
சாவையேமுதுகிலேற்றி
சரித்திரம்
படைத்துவிட்டாய்

மரணத்தைக் கண்டு
சிலர்
கார் பிடித்துச்
சென்ற நேரம்
நீ மரணத்தையே
காரில் ஏற்றிச்
சென்றவன்

நீ நுழைந்ததும் எழுந்த
பாரிய சத்தத்தின்
பயங்கர அமைதியின்
பின்
உன் குரல்
எங்காவது
ஒலிக்கின்றதா?
என்று
எம் காதுகளைக்
கூர்மையாக்கினோம்

நிமிடங்கள்
மணித்தியாலங்களாக
மாற
கண்களை
கண்ணீர் திரையிட
வெற்றி பெற்றிருந்தும்
வெறுமை உணர்வுடன்
திரும்பினோம்

மில்லரே
உன் கல்லறை
காங்கேசன்துறை
சீமேந்தால்
கட்டப்பட்டதல்ல
தேசத்தின் மத்தியில்
தியாகத்தின்
திரட்சியால்
உருவாக்கப்பட்டது

உன் கல்லறை
கண்ணீர்
விடுவதற்கல்ல
கல்விக் கூடமாகிப்
பாடம் படிப்பதற்கு

ஐந்தும், இரண்டும்
அங்கே
அறிவு
உறுத்தப்படுவதில்லை
தியாகமும்,
விடுதலையுமே
விரிவுரைகளாகின்றன

அங்கே
பரீட்சைகள்
நடைபெறுவதில்லை
அநீதிக்கெதிரான
படையெடுப்புகளே
நிகழ்கின்றன.




# இலட்சிய உறுதியில் இரும்பு மனிதர்கள்



படையியலின் மையநோக்கம் வெற்றி.

வெற்றியின் அடைவு வழி போர்.

போரின் மூலக்கூறுகளுக்குள் முதன்மையானதாக அமைகின்றது வேவு.

போரிற்கான செயற்பாடுகளுக்குள் இன்றியமையாத ஒரு பாத்திரம் வேவுப்பணிக்கு உண்டு.

சண்டையொன்று முடியும்போது, முழுவெற்றி பெற்றதாக அது நிறைவாகக் கூடிய வகையில், அதனுடைய ஆரம்பத்தை அமைத்துவிடவேண்டிய பெரும் பொறுப்பு வேவுவீரர்களையே சாருகின்றது.



பயிற்சியின்போது கரும்புலி வீரர்கள்
தங்களது உயிர் அழிந்துவிடப்போவதைப் பற்றியல்ல; தங்களது இலக்குகள் அழிக்கப்பட வேண்டியதைப் பற்றியே அவர்கள் சதா சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

வேவுத் தரவுகளில் இருந்துவிடும் சிறு தவறும்கூட, நடவடிக்கையின்போது படுதோல்வியைத் தந்துவிடும் என்பது ஒருபுறம் போக, பெருத்த உயிரிழப்பையும், போராட்டத்தில் பின்னடைவையும் கூட அது ஏற்படுத்திவிடக்கூடும்.

எனவேதான், யுத்தத்தில் அதிக பெறுமதியானவனாக ஒரு வேவு வீரன் திகழ்கின்றான்; போர் சார்ந்த பணிகளில் ஈடுபடுகின்றவர்களுள் வேவு வீரர்கள் முக்கியத்துவம் பெறுகின்றார்கள்.

இதன் காரணமாகவே படையியல் விஞ்ஞானத்தின் (Military Science) கற்கைநெறிகளுக்குள், பிரதானத்தும் மிக்க ஒரு பாடத்திட்ட அலகாக "இராணுவ வேவு" (Military Reconni - ssance) புகட்டப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் படைவீரர்கள் வெற்றிக்கொடிகளை நாட்டிய தாக்குதல்களிலெல்லாம், அந்த வெற்றிகளைப் பரிசளித்த பெருமை, எங்களது வேவு வீரர்களையே சாருகின்றது.

எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் - எத்தனையோ சிக்கல்களுக்கு இடையில் - தாங்கிக்கொள்ள முடியாத துன்பங்களோடுதான், வேவுகாண பணியை அவர்கள் செய்கின்றார்கள்.

வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட அந்தப் போரியல் பணி, அவர்களுடைய அபாயகரமான வாழ்வு, முற்றிலும் வேறுபாடான அந்த அனுபவத்தை மற்றவர்களால் பரிபூரணமாகப் புரிந்து கொள்ள முடியாது. அந்த உணர்வுத் தன்மை சற்றும் குறையாமல் அதனை எடுத்து விளக்குவது கூட கடினமானது.

எத்தகைய இடர்பாடுகளுக்கு நடுவில் நின்று, எத்துணை மனத் துணிவோடு அந்தப் பணியில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள் என்பதனை, வார்த்தைகளால் கொடுக்கப்படும் வடிவத்திற்குள் முழுமைப்படுத்திவிடவும் முடியாது.

எங்களது வேவுகாண வீரர்களது ஒவ்வொரு பயணமும், மரணத்தின் சாம்ராஜ்ஜியத்தை நோக்கியது. "திரும்பி வருவேன்" என்ற எண்ணம் அவர்களிடத்தில் இருக்காது; ஆனால், "திரும்பிவர வேண்டும்" என்ற உறுதிப்பாடு இருக்கும்.

தங்களது கையில் ஒரு போர்ச்சாதனை மட்டுமல்ல, எங்கள் அன்புக்கினிய மக்களின் எதிர்காலமும் உள்ளது என்பதை அவர்கள அறிவார்கள்.

வேவுகாண பணியானது, அசாதாரணமான ஒரு படையியல் தொழிற்பாடு. போர்வீரர்களாக இருக்கின்றவர்களிலும் கூட, எல்லோராலும் அந்தப் பணியில் ஈடுபடமுடியாது - இது எங்களது போராளிகளாக இருப்பினும்கூட.

கண்துஞ்சாது, பசிநோக்காது, மெய்வருத்தம் பாராது, வெயில் - மழை - பனி - குளிர் - பொருட்படுத்தாது, மைல் கணக்காக நடந்தும், நாட்கணக்காகக் கிடந்தும் - கருமமே கண்ணாக செயற்படவேண்டிய மிகக் கடுமையான ஒரு வாழ்வுமுறைக்குள் - ஒய்வற்று இயங்கித் தொடர்ச்சியாக நின்றுபிடிக்கக்கூடிய உடலுறுதியும், உளவுறுதியும் இருக்க வேண்டும்.

சருகு நெரிபடும் சத்தத்திற்கும் 'சடசடக்கத்' தயாராக - ரவைச்சங்கிலிகள் பொருத்திய இயந்திரத் துப்பாக்கிகளுடன் - நிமிடத்திற்கு நிமிடம் வெளிச்சம் பாய்ச்சித் தேடிக்கொண்டு திரியும் சிப்பாய்களுக்கு முன்னால் - அவர்களது கண்பார்வை எல்லைக்குள் நெருங்கி - வேவு பார்க்கும்போதும் - பதற்றப்படாமல், தடுமாறாமல் - நுணுக்கிக் கவனிக்கக்கூடிய கூர்மையான அவதானிப்புத்திறன் (Power of Observation) இருக்க வேண்டும்.




பகைவனுடைய கண்களுக்குள் சிக்கிவிடும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிடுமானால், அவன் காண்பதற்கும் அவனது துப்பாக்கி வெடிப்பதற்கும் இடையில் உள்ள சில கணங்களுக்குள்ளேயே, மின்னல் வேகத்துடனும் மிகச் சரியானதாகவும் முடிவெடுத்துச் செயற்பட்டுவிட வேண்டிய சாதுரியம்மிக்க புத்திக்கூர்மை (Ingenious Intelligence) இருக்க வேண்டும்.

நீட்டிக்கொண்டிருக்கும் சுடுகுழல்களின் எதிரில் நிலவுகின்ற - வர்ணித்துச் சொல்ல முடியாத பயங்கரமான - அந்தப் பதற்றம் நிறைந்த படைத்தளச் சூழ்நிலைக்குள்ளும், கண்ணால் காணும் அத்தனையையும் அத்துப்படியாக மின்னஞ் செய்து, பகைவீட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும், பகைவீரரின் ஒவ்வொரு அசைவையும் துல்லியமாக மனதில் பதித்து வந்து, திட்டம் வகுக்கும் தளபதிகளிடம் அவற்றை அவற்றை அப்படியே ஒப்புவிக்கக்கூடிய நினைவாற்றல் சக்தி (Memory Power) இருக்க வேண்டும்.

எதிரியின் உச்சநிலைப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கடந்து சென்று, மரணத்தின் குகைக்குள் வேவு பார்த்துவிட்டுத் திரும்பி வந்து, பார்த்தவற்றைச் சொல்லுகின்ற வேளையில் - முக்கியமில்லாத ஒன்றைத்தன்னும் மறந்து விட்டிருந்தாலோகூட, அல்லது தரவு ஒன்று முழுமைப்படாமல் சின்னத் தகவல் தன்னும் இல்லாமலிருந்தாலோகூட - தெளிவாகப் பார்த்து வரத்திரும்பவும் அனுப்பும்போதும் அந்தத் தேவையின் அவசியத்தை உணர்ந்து - மனஞ்சலியாமல், முகஞ்சுழியாமல் - அடுத்த இரவும் அந்த மரணத்தின் குகை நோக்கி நடக்கின்ற சகிப்புத் தன்மையும், தெளிந்த மனமும் இருக்க வேண்டும்.

படை நடவடிக்கைக்கான திட்டம் தீட்டப்படும்போது - களத்தின் அகநிலைச் சாதகங்களையும் பாதகங்களையும் கருத்தில் வைத்து - தீர்மானிக்கப்படுகின்ற தாக்குதல் வழிமுறைகளின் சாத்தியங்களையும் அசாத்தியங்களையும் பற்றிக் கணிப்பீடுசெய்து எடுத்து விளக்கக்கூடிய நுண்ணிய படையியல் அறிவு (Military Knowledge) இருக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக -

இன்னதுக்கு என்று இல்லாமலெல்லாம் குடுகின்ற எதிரியின் ரவைகள் துளையிட்டுவிடும் ஒரு நிலையோ, அல்லது பொறிவெடியில் சிக்கி உடலுறுப்பொன்று பிய்ப்பட்டு ரத்தம் பீறிடுகின்ற ஒரு நிலையோ, ரணவேதனையோடு உருவாகிலும் துடித்துப் பதகளிக்காமல் - தான் குழம்பி, எதிரியையும் குழப்பி, காரியத்தைக் கெடுத்து விடாமல் - கூடவந்த தோழன் வேவு பார்த்துச்செல்வதற்கு ஒத்துழைத்து, அமைதியாகத் தனது உயிரை அழிக்கக்கூடிய தற்கொடை மனப்பாங்கு இருக்க வேண்டும்.

இத்தகைய இயல்புகள்தான் ஒரு வேவு வீரனுக்குரிய பண்புகளாக உள்ளன. இந்தத் தனித்துவமான தன்மைகளால் நிறைவு பெற்றவர்களாலேயே, வேவுப் படைவீரர்களாகப் பணிபுரிய முடியும். எங்களது வேவுப்புலிகள் இப்படியானவர்கள் தான்.

அவர்களுடைய கதைகளைக் கேட்டுப்பாருங்கள். உங்களது இதயங்கள் கண்ணீர்விட்டுக் குமுறும். அவர்கள் ஒவ்வொருவருமே சொல்லொணாத் துயரங்களின் சொந்தக்காரர்கள்.




பெரிய பெரிய சோகங்களை அவர்கள் சுமந்துகொண்டு திரிகின்றார்கள். அவர்களுடைய வாழ்வு அப்படியானது.

பகைவனின் மடிதான் அவர்களுடைய வாழ்விடம். அவனுடைய அரண்களின் ஊடுகளுக்குள்தான் அவர்கள் தூங்கி விழித்தார்கள். எப்போதும் என்னவும் நடக்கலாம்; எங்கேயும் எப்படியும் நடக்கலாம். வெடி கொளுவி வீழ்வான் நண்பன். "காயம்பட்டதா என் தோழா…" என்று அள்ளி எடுத்து ஓடிவர அங்கு முடியாது. எங்களுடைய கையிலுள்ள தளமெறால் கதையே வேறு. உடல்களை மீட்பதற்காகவே உயிர்களைக் கொடுக்கும் வகையில் வளர்க்கப்பட்டவர்கள் அல்லவா நாங்கள். ஆனால், அங்கு…? எங்களால் எதுவுமே செய்ய இயலாது. காயப்பட்டு வீழும் தோழனும், தான் காப்பாற்றப்பட வேண்டும் என எண்ணவே மாட்டான்; அப்படியெந்த எதிர்பார்ப்பும் அவனிடம் இருக்காது. சாவுக்குழிக்கு மேலாக கம்பியில் நடக்கும் எங்கள் வேவு வீரர்களிடம் இருக்கும் ஒரே ஒரு நம்பிக்கை "சயனைட்" மட்டும்தான்.

கட்டுவனுக்குப் பக்கத்தில் – பகைவனது நடு முற்றத்தில் – அவன் எதிர்பாராமல் எதிர்ப்பட்டுவிட்ட ஒரு காலைப் பொழுது. துப்பாக்கிகள் நீ உமிழ்ந்தபோது சன்னங்கள் தையலிடச் சரிந்தான் ஒரு தோழன். கூச்சலிட்டபடி பகைவன் பாய, பற்களுக்கிடையில் சயனைட்டை நெரித்துக்கொண்டு கூடவந்த தோழனைப் பார்த்து விழுந்தவன் கத்தினான். "சுட்டுப்போட்டு நீ ஓடித் தப்படா!" "சுடச்சொன்னது தன்னையா…? ஆமியையா…?" இவன் யோசிக்க முன்னரே சோர்ந்துபோய், கண்கள் மேலே செருகியவனைக் கைவிட்டுவிட்டு – ரவைமழையில் நனையாமல் – தப்பித்து வந்த ஒரு வேவுவீரன்.

அடுத்த பயணம் புறப்பட, தான் தயாராகிக் கொண்டிருந்தான்.

ஒரு வேவு வீரனுக்கு அவதானம் முக்கியமானது. எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியிலும். இழுத்து விடுகின்ற ஒவ்வொரு மூச்சிலும் மிகுதியாக இருக்கவேண்டியது அது. ஏனெனில், நிறை எதிர்ப்பார்ப்புக்களுடன் உள்ளே அனுப்பப்பட்டவனான அவன். தன்னைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளான். தான் காயப்பட்டு விடாமல், தனது உடலோ உயிரோ சேதப்பட்டுவிடாமல் தன்னைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டியது, அவனது கடமையுமாகும். தெரியாத்தனமாக இழைத்து விடுகின்ற சிறு தவறும்கூட – அவன் திரும்பிச் செல்வதற்கு இருக்கிற கடைசி வாய்ப்பையும் இல்லாமல் செய்துவிடும். அவதானமின்மையாலும் அலட்சியத்தாலும் நடந்துவிடும் எந்த வொரு கவலையீனப் பிழையும், வேறு எதையுமல்ல உயிரைத் தான் அழிக்கும்.

தச்சன்காட்டுச் சந்திக்கருகில், சிங்களக் காவலரண்களுக்கு முன்பாக இன்னொரு இரவு – சத்தமின்றி காலை வைத்து ஆமைகளாய் அசைந்துபோது, "காலில் தட்டுப்படுவது கல்லோ… மரத்துண்டோ…" என அலட்சியப்படுத்த, முழங்கியது மிதிவெடி. பத்துயாருக்கு முன்னால் இருந்து "நாயோ… பூனையோ…" என நினைத்து "ரோச்" அடித்த பகைவீரன் – திகைத்து, துப்பாக்கி தூக்கி, தோர்வு நெம்பு தட்டிச் சுடுவதற்கு முன்னர், "என்னைச் சுட்டுப்போட்டு நீ தப்பி ஓடு மச்சான்…!" என்றவனை, உடலும் உள்ளமும் நடுங்கச் சுட்டு வீழ்த்திவிட்டுத் தப்பித்து மீண்ட இன்னொரு வேவு வீரன்.

கதையைக் கண்ணீரோடு சொல்லிக்கொண்டிருந்தான்.

சேந்தான்குளம் சந்தியடியில் ஒரு அதிகாலை , காவலரண்களுக்கு அருகாகப் பதுங்கிக்கொண்டிருந்தான் ஒரு வேவுப்புலி. காவல் உலா சுற்றிக்கொண்டு வந்த படைப்பிரிவு ஒன்றிலிருந்து எவனோ ஒரு சிங்களப் படையால் எதேச்சையாக "ரோச்" அடித்தான். வெளிச்சம் சரி நேராகத் தெறித்து அவனிலேயே பட்டது. உறுமத்தொடங்கின துப்பாக்கிகள் தாவிப்பாய்ந்தான எம் வீரன். தலைதெறிக்க ஓடத்தொடங்கினான். எதிரியின் காணிக்குள்ளேயே ஒரு கலைபாடு விடயம் என்னவென்றால் , ஏற்கனவே இரு நாட்களாக அவனுக்குச் சீரான சாப்பாடு இல்லை கலைத்துச் சுட்ட பகைவனுக்குத் தப்ப அவன் இளைத்து இளைத்து ஓடினான். உடல் ஒத்துழைக்க மறுத்தது. கால் சோர்ந்து கொண்டே போனது; ஆனாலும் எங்கோ அவன் திடீரென மறைந்து விட , துரத்தியவர்கள் தடுமாறிப் போனார்கள்.

பிடிக்க முடியவில்லை. ஆற்றாமையால் கண்டபடி சுட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அப்படியே மறைந்திருந்தவன் , இரவானதும் மெல்ல மெல்ல ஊரத் துவங்கினான். இயலாமையொடு ஊர்ந்தவன். எதிரியின் அரணைக் கடந்து வந்து சற்றுத் தூரத்துக்குள்ளேயே மயங்கிப் போனான். பாவம் முகாமிற்குத் தூக்கிவந்து 'சேலைன்' ஏற்றியபோது கண்திறந்தவன் ,

தப்பித்து வந்தது ஒரு அதிஷ்டம் என்று தான சொல்லவேண்டும்.

இப்படியாக – எத்தனையோ மயிரிழைகளில் தப்பி , அதிஷ்ட வசமாக மீண்டவர்கள் கொண்டுவந்த தரவுகள்தான் , பலாலிப் பெருந்தளத்தின் மையத்தில் குறிவைக்க எங்களுக்கு அத்திவாரமாக அமைந்தன.

பலாலித் தாக்குதலின் தார்ப்பரியத்தை விளங்கிக்கொள்ள வேண்டுமானால் , எங்களது வேவு வீரர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாத் தாக்குதல்களையும் போல வேதான் அதுவும் ! வேவுப்புலிவீரர்கள் பெற்றுத்தந்த வெற்றி அது.

எங்களது வேவு வீரர்கள் அபூர்வமான மனிதர்கள். சாவுக்கும் அஞ்சாத அவர்களது வீரத்தை எண்ணிப்பாருங்கள். அது போற்றுதற்குரியது. பகைவனின் நெஞ்சுக்கூட்டுக்கு மேலேறி வேவு பார்த்துவிட்டு மீளும் அந்த மனத்துணிவு அபாரமானது; அது ஒரு இணைதேட முடியாத நெஞ்சுறுதி!

தாங்கள் கொண்ட இலட்சியத்தில் அவர்கள் எத்துணை பற்றுக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த இலட்சியத்திற்காகத் தங்களது இன்னுயிரையே துச்சமெனத் தூக்கி எறிய மனமுவந்து நிற்கும் அவர்களது தியாக உணர்வு , மேன்மை மிக்கது உன்னதமானது !

தாயகத்தின் மீதும் தாயகத்து மக்கள் மீதும் அவர்கள் கொண்டிருந்த நேசம் இருக்கிறதே… அது சாதாரணமானதல்ல. அது ஒரு அளவு கடந்த காதல் தளர்ச்சியற்ற பிணைப்பு !

அந்த வீரர்களின் ஒவ்வொரு அசைவுக்குப் பின்னால் இருந்தும், எதிரியின் வளைப்புகளிற்கு மத்தியில் நின்று அவர்கள் எடுத்த ஒவ்வொரு முடிவிற்குப் பின்னால் இருந்தும், அவர்களை இயக்கிக்கொண்டிருந்த உந்துவிசை – அவர்களுடைய அந்த 'மன நிலை'தான்.

அந்த 'மனநிலை' அவர்களை வழிநடத்திச் சென்ற தலைவனின் ஆகர்சிப்பு! அந்தத் தலைசிறந்த நெறிப்படுத்தலின் கீழ் தான் அவர்கள் அணிவகுத்தார்கள். பிரபாகரன் என்ற பெருந் தலைவனின் மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பற்றுணர்வும் இறுக்கமானது. அந்த வழிகாட்டலின் கீழ் எதையும் செய்வதற்கு அவர்கள் சித்தமாக இருக்கின்றார்கள்; இருப்பார்கள். இது மிகையான தல்ல!

எங்கள் அன்னைபூமியை ஆக்கிரமித்தி நிற்கும் சிங்களப் படைகளின் மிகப் பெரியதும், மிகவும் பாதுகாப்பானதுமான தளமென்ற பெருமையுடையது பலாலி முக்கூட்டுப் படைத்தளம்.

வடபுலப் போர் அரங்கின் பிரதான கட்டளைத் தலைமையகமும் அதுவேதான்.

தனிக்காட்டு ராஜாவாக ஒரு சிங்கம், கால்களை அகல எறித்து விட்டு அச்சமற்ற அலட்சியத்தோடு படுத்திருப்பதைப் போல –

30 சதுர மெயில் விஸ்தீரணத்தில் –

அகன்று நீண்டு விரிந்து கிடக்கிறது அந்தப் பெருந்தளம்.

இவை தெரியாத விடயங்களல்ல; ஆனால், ஆச்சரியம் என்ன வெனில் –

'என்னை எவரும் ஏதும் செய்துவிட முடியாது' என்ற இறுமாப்போடு நிமிர்ந்திருக்கும் அந்த முக்கூட்டுத்தளத்தினுள் நுழைந்து, எங்களது வேவுப்படை வீரர்கள் குறிவைத்த இலக்கு, அதன் இதயமாகும்.

அது – சிறீலங்கா விமானப்படையின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தலைமையகம் என்ற கேந்திர மையமாகும்.

இந்த முப்படைக் கூட்டுத்தளத்தை சுற்றி வர – பலமான உருக்குக்கவசம் போன்று – உள்ள அதன் முன்னணிப் பாதுகாப்பு வியூகத்தை (Front Defence line) ஊடுருவி நுழைவதென்பதே , ஒரு இமாலயக் காரியம்தான.

இமையாத கண்களுடன், துயிலாமல் காத்திருக்கும் பகைவனின் பத்து "பற்றாலியன்" படைவீரர்கள்.

சரசரப்புக்கெல்லாம் சடசடத்து , சல்லடையாக்கிவிடத் தயாராக அவனது சுடுகருவிகள்.

உலகெங்கிலும் இருந்து பொறிக்கண்ணிகளையும், மிதிவெடிகளையும் வாங்கி வந்து, விதைத்து உருவாக்கியிருக்கும் அவனது கண்ணிவெடி வயல் ( Mines field )-

வானுலக நட்சத்திரங்களின் ஒளிர்வினைக் கொண்டே , பூவுலக நடமாட்டங்களைத் துல்லியமாய்க் காட்டும் அவனது 'இரவுப் பார்வை' ச் சாதனங்கள் ( Night Vision ).

தேவைக்கேற்ற விதமாகப் பயன்படுத்தவென, தேவைக்கேற்ற அளவுகளில் கைவசமிருக்கும் அவனது தேடொளிகள் (Search Lights ).

அடுக்கடுக்கான சுருள் தடைகளாயும், நிலத்துக்கு மேலால் வளைப்பின்னலாயும் குவிக்கப்பட்டிருக்கும் அவனது முட்கம்பித் தடுப்புகள்.

வன்னிப்பக்கத்துக் குளங்களைப் போல, உயர்ந்த அரண்களாக எழுப்பப்பட்டுள்ளன அவனது அணைக்கட்டுகள். உள்ளுக்கிருப்பதைக் கண்டு அறிவதற்கு வெளியில் இருந்து பார்க்க முடியாமல், நிலத்திலிருந்து வானுக்கு எழும்புகின்ற அவனது தகரவேலி.

எங்கிருந்து எங்கு என்று இடம் குறியாது, எப்போதிருந்து எப்போதுக்குள் என்று காலம் குறியாது – ரோந்து சுற்றிக் கொண்டு திரியும் அவனது 'அசையும் காவலணிகள்' (Mobile Sentries ).

அத்தனை பலங்களினாலும் பலம் திரட்டி அரசு பலத்தோடிருந்தனர் எங்கள் பகைவர்.

"எந்தப் பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும், தேடுங்கள்" என்றார் எங்கள் தேசியத்தலைவர்.

நூல் நுழையும் ஊசிக்கண் துவாரம் தேடிய எம் வேவுவீரர்கள், அந்த 'மரண வலயத்தை' ஊடுருவிக் கடந்து, சிங்கத்தின் குகைக்குள் நுழைந்தார்கள்.

வெளியில், தனது முன்னணிக் காவலரண்களிலிருந்து, அசைக்க முடியாத தன்னுடைய பலத்தை எண்ணிப் பகைவன் இறுமாந்துகொண்டிருக்க–

உள்ளே, சுமார் பத்து மைல்களுக்கு அப்பாலிருக்கும் அவனது மையத்தலத்தில் – விமான ஓடுபாதைகளில் – நடந்து வானூர்திகளை வேவு பார்த்துக்கொண்டிருந்தனர் எம் வீரர்கள்.

அவர்களுடைய முயற்சிதான் ஒரு கரும்புலி நடவடிக்கைக்கான திட்டத்திற்கு கருக்கொடுத்தது. அவர்களது ஓய்வற்ற கடும் உழைப்பு, அந்தத் திட்டத்தை படிப்படியாக வளர்த்து முழுமைப் படுத்தியது.

தாக்குதல் இலக்கை வேவு பார்த்து, தாக்குதலணி நகரப் பாதை அமைத்து, தாக்குதல் பயணத்தில் 'தரிப்பிடம்' கண்டு தாக்குதலுக்கான நாள் குறித்த அவ் வேவுப்புலி வீரர்கள்–

கரும்புலி வீரர்களுக்கு உறுதுணையாக வழிகாட்டிச் செல்லத் தயாராகி நின்றார்கள்.

தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்டுவிட்டது.

பெரிய நோக்கம் ;

அரசியல்ரீதியாகவும் படையியல்ரீதியாகவும் முக்கியத்துவத்தைப் பெறக்கூடிய ஒரு நடவடிக்கை.

எமது மக்களின் உயிர்வாழ்வோடு பிணைந்ததும் கூட.

ஆனால், அது ஒரு பலமான இலக்கு; உச்சநிலைப் பாதுகாப்புக்கு உட்பட்ட கேந்திரம்.

செல்பவர்கள் வேலமுடியும்; ஆனால் திரும்ப முடியாது.

சிங்கத்தின் குகைக்குள் நுழைந்து அதனை எதிர்கொள்வதற்கு நிகரான செயல் அது.

இருப்பினும் தாக்குதல் தேவையானது.

வேவு அறிக்கைகளின் அடிப்படையில் தாக்குதலுக்கான வழிமுறை தீர்மானிக்கப்பட்டது.

அது ஒரு கரும்புலி நடவடிக்கை.

நான் முந்தி நீ முந்தி என்று நின்றவர்ளுக்குள் தெரிவாகியவர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டது ஒரு தாக்குதலணி.

கெனடி அதன் களமுனைத் தளபதி ; அவனோடு இன்னும் 6 வீரர்கள்.

சிற்றுருவி மாதிரிப் படிவமாக (Model) அமைக்கப்பட்டிருந்த பலாலி வான்படைத் தளத்தையும், அதன் ஓடுபாதைகளையும் சுற்றி அவர்கள் நின்றுகொண்டிருந்தனர்.

தளபதி கடாபி அவர்களுக்குரிய தாக்குதல் வழிமுறைகளைத் தெளிவுபடுத்தினார். ஒவ்வொருவருக்குமுரிய இலக்குகளைக் காட்டி விளக்கினார். ஒவ்வொருவரும் எவ்விதமாகச் செயற்படவேண்டும் என்பதை அவர் சொல்லிக் கொடுத்தார்.

அவர்களுக்குரிய ஒத்திகைப் பயிற்சிகள் ஆரம்பித்தன.



"பயிற்சியைக் கடினமாகச் செய்; சண்டையைச் சுலபமாகச் செய" என்பது ஒரு படையியல் கோட்பாடு.

அந்தக் கோட்பாட்டின்படியே அவர்கள் செயற்பட்டார்கள்.

ஆகா… ! அந்த நேரத்தில் நீங்கள் பார்த்திருக்க வேண்டும் அவர்களை ;

மெய்யுருகிப் போயிருப்பீர்கள்.

எவ்வளவு உற்சாகம்; எவ்வளவு ஆர்வம்; ஓய்வற்ற பயிற்சிகளில் அவர்கள் காட்டிய மனமார்ந்த அந்த ஈடுபாடு… !

'எப்படி வாழவேண்டும்?' என்று சிந்தித்துக் கொண்டிருக்கிற எங்களுக்குள்ளிருந்து தானே அவர்கள் போனார்கள் !

உயிரைக் கொடுத்துவிட்டு எப்படி வெற்றியைப் பெறவேண்டும் என்றல்லவா ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்குள் இருந்திருக்கக்கூடிய தேசாபிமானத்தை நினைத்துப் பாருங்கள்; அவர்களுக்குள் இருந்திருக்கக் கூடிய தமிழபிமானத்தை எண்ணிப் பாருங்கள்.

எங்கள் தலைவன் ஊட்டி வளர்த்த மேன்மை மிகு உணர்வு அது.

தங்கள் கடைசிக் கணங்களில்–

தங்களின் உயிர் அழிந்துவிடப் போவதைப் பற்றியல்ல; தங்களின் இலக்குகள் அழிக்கப்பட வேண்டியதைப் பற்றியே அவர்கள் சதா சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படிப்பட்டவர்களிடம் போய் – "நீங்களில்லையாம்; ஆட்களை மாத்தப்போகினமாம்" என்று சொன்னால் எப்படியிருக்கும்?

அப்படி ஒரு கதை, கதையோடு கதையகா வந்து காதில் விழுந்தது.

"குழுக்கள் போட்டு புதுசா ஆக்களைத் தெரிவு செய்யப் போறேனேன்று சொர்ணம் அண்ணன் சொன்னவராம்" என்றது அந்தத் தகவல்.

கெனடி குழம்பிவிட்டான். அவனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தளபதியிடம் போய் சண்டை பிடித்தான்–

"நான் கட்டாயம் போக வேணும்" என்று விடாப்பிடியாய்ச் சொன்னான். "வேணுமென்றால் அவர் மற்ற ஆட்களை மாத்தட்டும். குழுக்கள் தெரிவுக்கு என்ற பெயரைச் சேர்க்க வேண்டாம்" – திட்டவட்டமாகக் கூறினான்.

எந்த மாற்றமும் செய்யப்படாமலேயே எல்லா ஒழுங்குகளும் பூர்த்தியாகிவிட்டன.

அவர்களுடைய நாள் நெருங்கிவிட்டது.

கடைசி வேவுக்குப் போனபோது – அசோக்கிடம் ஜெயம் சொன்னானாம்.

"கரும்புலிக்குள்ளேயும் நாங்கள் வித்தியாசமாகச் செய்யப் போகின்றோம்; இது ஒரு புது வடிவம். நாங்கள் இவற்றை அழிக்கும்போது சிங்களத் தளபதிகள் அதிர்ச்சிக்குள்ளாவார்கள்."

தேசியத்தலைவர் வந்து வழியனுப்பிவைத்தார் ;

அவர்களுக்கு அது பொன்னான நாள்.

ஒன்றாயிருந்து உணவருந்திய தேசியத்தலைவர், கட்டியணைத்து முத்தமிட்டு விடை தந்தபோது–

கரும்புலிகளுக்குள்ளே உயிர் புல்லரித்தது.

"நான் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றேன்" – தேசியத் தலைவர் வழியனுப்பி வைத்தார்.

மேலே – வானத்துக்கும் பூமிக்கும் இடையில்–

வெகு உல்லாசத்துடன்–




உலங்கு வானூர்த்தி ஒன்று பலாலிப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தது. அட்டகாசமாய் சிரித்துவிட்டு நவரட்ணம் சொன்னான்: "இன்றைக்கு பறக்கிறார், நாளைக்கு நித்திரை கொள்ளப் போகிறார். "

'நீண்ட' பயணத்திற்குத் தயாராகி, சிரித்துக் கும்மாளமடித்துக் கொண்டு நின்றவர்களிடம், "எல்லோரும் வெளிக்கிட்டு வீட்டீர்கள் … துரதேசத்துக்குப் போல இருக்கு… "

தளபதி சொர்ணம் கேட்க–

கண்களால் புன்னகைத்து ரங்கன் சொன்னான்–

"ஓமோம்… கிட்டண்ணையிட்ட… திலீபண்ணை… இப்படி நிறைய தெரிஞ்ச ஆக்கள் அங்க இருக்கினம். "

பலாலிப் பெருந்தளத்தின் முன்னணிக் காவலரன்களுக்கு மிகவும் அருகில் எங்கள் தளபதிகளிடம் விடைபெற்றுச் செல்லும் போது, நின்று திரும்பி தளபதி செல்வராசாவிடம் "அண்ணன் மார் கவனமாகப் போங்கோ 'செல்' அடிப்பான்" என்று சொல்லிவிட்டுப் போனான் திரு.

கைகளை அசைத்து அசைத்துச் சென்ற கரும்புலிகள் இருளின் கருமையோடு கலந்து மறைந்தார்கள்.

தாக்குதலணி, தாக்குதல் மையத்தைச் சென்றடைவதே ஒரு பெரிய விடயமாகக் கருதப்பட்டது;

தாக்குதலைச் செய்வது இன்னொரு பெரிய காரியம்.

புறப்பட்டுப் போகும் போது அவர்களிடம் இருந்தது தளராத உறுதி , தணியாத தாகம், எல்லாவற்றையும் மேவி – அசையாத தன்னம்பிக்கை.

***"அம்மா !***
***நான் உங்கள் பிள்ளைதான் ; ஆனால், தமிழீழத் தாய்மார்கள் எல்லோருக்கும் நான் ஒரு பிள்ளை…***
***…அம்மா! என்னுடைய ஆசை மக்கள் மகிழ்ச்சியாக சுதந்திரமாக வாழவேண்டும் என்பதுவே. அதனால்தான் உயிரைப் பெரிதாக நினையாமல் நான் போராடப் போனேன்.***
***அதனால், எனக்காக நீங்கள் கவலைப்படாதீர்கள்; நீங்களும் சந்தோசமாக இருக்க வேண்டும்.***
***…எமது மண் சுதந்திரமடைய வேண்டும்; அது நடைபெற வேண்டுமானால் மக்கள் எல்லோருமே தாயகத்துக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராகக் கிளர்ந்தெழ வேண்டும்.***
***இதுதான் என் கடைசி விருப்பம் "***

***இது தாக்குதலை தலைமையேற்று வழிநடத்தி காயமுற்று மயங்கிய நிலையில் எதிரியால் கைதுசெய்யப்பட்டு சமாதானத்தில் போராளிகள் பரிமாற்றத்தில் விடுவிக்கப்பட்ட "கெனடி " அவர்களால் வரையப்பட்ட மடல்…***

ஒகஸ்ட் திங்கள் முதலாம் நாள்–

பகற்பொழுது பின்வாங்கிக்கொண்டிருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை இருள் விழுங்கிக்கொள்ள , பலாலிப் பெருந்தளத்தை , மின்னாக்கி ஒளிவெள்ளத்தில் அமிழ்த்தியது !

மாலை 6.30 மணியைக் கடந்து விட்டிருந்த நேரம்.

தங்கள் இலக்கை நோக்கி அவர்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

வேவுப் புலி வீரர்கள் முன்னே; கரும்புலி வீரர்கள் பின்னே .

மாவிட்டபுரத்தையும் – தெல்லிப்பளையையும் இணைக்கும் பிரதான வீதியும், தச்சன்காட்டிலிருந்து வந்து அதனைச் சந்திக்கும் குறுக்கு வீதியும் இராணுவச் சப்பாத்துக்களால் மிதிபட்டு பேச்சு மூச்சற்றுக் கிடந்தன.

வீதியோரமாக, தட்சன்காட்டடியில் அணி நகர்ந்துகொண்டிருந்த சமயம் –

அவதானமாக; மிக அவதானமாக அவர்கள் ஊர்ந்துகொண்டிருந்த போது–

திடீரென தெல்லிப்பளை பக்கமாகக் கேட்டது 'ட்ரக' வண்டிகளின் உறுமல்.

பயங்கர வேகத்தோடு அது நெருங்கிக்கொண்டிருந்தது.

'நேராக மாவிட்டபுரம் பக்கம்தான் போகப்போறான்' என நினைத்த வேளை, தட்ச்சன்காட்டுப் பக்கமாகவே திரும்பினான் – வந்த வேகம் தணியாமலேயே.

நல்ல காலம்…

பளீரென அடித்த ஒழி வெள்ளத்தினுள் மூழ்கிப் போகாமல், பக்கத்திலிருந்த காணிக்குள், எல்லோரும் சம நேரத்தில் பாய்ந்து மறைந்து விட்டார்கள்.

அவர்களைக் கடந்து நேராகச் சென்று, சந்திக் காவலரணடியில் நின்றவன், நின்றானா…? அந்த வேகத்திலேயே திரும்பி வந்தான்.

"என்ன நாசமடாப்பா…?" என நினைத்த வேளை 'ட்ரக்' வண்டிகள் இரண்டும் அவர்களுக்கு நேர் முன்னே வந்து சடுதியாய் தரிக்க…

சில்லுகள் கிளப்பிய புழுதியோடு, புற்றீசலாய்க் குதித்தனர் சிங்களப் படையினர்.




குழல் வாய்கள் தணலாக துப்பாக்கிகள் பேசத்துவங்கின. 'பொம்மருக்கென்று' காவி வந்த நவரட்னத்தின் 'லோ' ஒன்று, 'ட்ரக' வண்டியைக் குறிவைத்து முழக்கியது.

எல்லோரும் ஓடத் துவங்கினர். அது சண்டை போடக்கூடிய இடமல்ல் சண்டை பிடிப்பதற்குரிய நேரமுமல்ல.

அவர்கள் அங்கே போனது இதற்காக்கவுமில்லை.

எங்கே தவறு நடந்தது…? எங்காவது 'சுத்துச் சென்றிக்காரன் கண்டானோ? 'டம்மி' என்று நினைத்த பொயின்ரிலிருந்து பார்த்துச் சொன்னானோ ? எங்காவது வீடு உடைத்து சாமான் எடுக்க வந்த ஆமி கண்டு அறிவித்தானோ …?

என்னவாகத்தான் இருந்தாலும் – அவர்கள் சென்ற சொக்கம் கெட்டுவிட்டது.

தட்சன்காட்டில் நிகழ்த்த அந்த துரதிர்ஷ்டம்தான், எங்களது தாக்குதல் திட்டத்தையே திசைமாற்றியது.

'திரு' இல்லை; 'ரங்கன்' இல்லை; 'புலிக்குட்டிக்கு' என்ன நடந்ததென்று தெரியவில்லை; ராஜேஷ் ஒரு வழிகாட்டி – அவனையும் காணவில்லை.

எங்கள் தாக்குதலணி சேதாரப்பட்டுவிட்டது.

ஏனையோர் ஒரு பக்கமாக ஓடியதால் சிதறாமல் ஒன்றாயினர்.

தாம் வந்த காரியத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய தவிர்க்க முடியாத கட்டாயம் எழுந்துவிட்டத்தை, எஞ்சியவர்கள் உணர்ந்தனர்; இந்தச் சண்டையோடு எதிரி உசாரடைந்து விடுவான். கரும்புலி வீரர்கள், வேவுப்புலி வீரர்களை அவசரப் படுத்தினர்.

"உடனடியாக எங்களைத் தாக்குதல் முனைக்குக் கூட்டிச் செலுங்கள். "

அடுத்த சில மணி நேரங்களின் பின் பொழுது நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில் – அவர்கள், வான்படைத் தளத்தின் முட்கம்பி வேலிக்கருகில் தயாராகிக்கொண்டிருந்தனர்.

பிரதான கட்டளையகத்தோடு கெனடி தொடர்பு எடுத்தான். நடந்து முடிந்த துயரத்தை அவன் அறிவித்தான்.

"7 பேருக்கென வகுக்கப்பட்ட தாக்குதல் திட்டத்தில் எஞ்சியிருப்பது 4 பேர் மட்டுமே" என்பதை அவன் தெரியப்படுத்தினான். "எதிரி முழுமையாக உசார் அடைந்துவிட்டால், இருக்கின்றவர்களுடன் உடனடியாக தாக்குதலை ஆரம்பிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினான். "தாமதிக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் இலக்குகள் தப்பிப் போக நாங்கள் வழங்குகின்ற சர்ந்தப்பங்கள்" என்பதை விளக்கினான். "தாக்குதலை நிகழ்த்தாமல் திரும்பி, தப்பித்து வெளியேறுவதும் சாத்தியப்படாது" என்பதையும் சொன்னான்.

அவனிடம் சற்று நேரம் அவகாசம் கேட்ட பிரதான கட்டளையகம், 'பிரத்தியேக' மாக அமைக்கப்பட்டிருந்த இன்னொரு கட்டளையகத்தோடு கலந்து பேசியது. கெனடி சொல்வதே சரியானது எனவும், அதைவிட வேறு வழியில்லை எனவும் பட்டது.

தாக்குதலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

முட்கம்பி வேலிகளை நறுக்கி அறுத்த வேவுப்புலி வீரர்கள் பாதை எடுத்துக் கொடுக்க, வான்தளத்தில் இலக்குகளைத் தேடி கரும்புலி வீரர்கள் உள்ளே நுழைந்தனர்.

* * *

***நவரட்ணம் கடைசியாய் வரைந்த மடலிலிருந்து…***

***அம்மா ! அப்பா !***

***இனத்துக்கு சுதந்திரமாக ஒரு நாடு இருந்தால்த்தான், எங்களுக்கு நிரந்தரமாக ஒரு வீடு இருக்கும். சுதந்திரமான ஒரு நாடு அமைக்கவே நான் போராட வந்தேன். இனித் தமிழீழத்தில் குண்டுகள் விழக்கூடாது; இதற்காகவே நான் இன்று***




***கரும்புலியாய்ச் செல்கின்றேன்.***

***என் ஆசை தங்கச்சி !***

***உனது அடுத்த பரம்பரை – எம் எதிர்கால சந்ததி –மிக மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்பதற்காகவே, நான் கனவிலும் நினையாத களம் நோக்கிப் புறப்படுகின்றேன்.***

***வெல்க தமிழீழம் !***

அசோக்கிடமும், ரஞ்சனிடமும் விடைபெற்று அவர்கள் உள்ளே சென்றுவிட, அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, இவர்கள் வெளியே திரும்பிக்கொண்டிருந்தனர்–

விடி சாம நேரம் –

படு இருள்.

மிகக் குறுகிய தூரத்திற்குள் தான் எதனையும் மங்கலாய்த் தன்னும் பார்க்க முடியும்.

மாவிட்டபுரத்திற்கு பக்கத்தில் ஒரு குச்சொழுங்கையால் அவர்கள் திரும்பிகொண்டிருந்த போது –

ஒரே ஒரு மணித்துளி –

இருந்தாற் போல் – அந்த இருளுக்குள் இருளாக… அவர்களிற்கு முன்னால்…

அதென்ன …? நிழலாக எதோ அசைவது போல உள்ளது !

ரஞ்சனின் கைகளைச் சுரண்டி மெதுவாக, "ஆமி நிக்கிறான் போல…" – அசோக் சொல்லிமுடிக்கும் முன் –

தீப்பொறி கக்கிய சுடுகுழலிலருந்து காற்றைக் கிழித்துச் சீரிய ரவைகள் – அசோக்கின் தசைநார்களையும் கிழித்துச் சென் றன !

தலையோ… கழுத்தோ… நெக்ஞ்சுப்பகுதியாகவும் இருக் கலாம்… சரியாகத் தெரியவில்லை… சன்னங்கள் பாய்ந்து சல்லடையாக்கிச் சென்றன.

"ஆம்…" முழுமையாக வெளிவராத குரலுடன், குப்பற விழுந் தான் அந்த வீரன்.

அடுத்த நிமிடத்தில் –

கொஞ்சம் ரவைகளையும் ஒரு கைக்குண்டையும் பிர யோகித்து, அசோகையும் பறிகொடுத்துவிட்டு, பக்கத்துக் காணிக்குள் பாய்ந்து ரஞ்சன் ஒழிக்கொண்டிருந்தான்.

முன்பொரு நாள் –

மயிலிட்டிப்பக்கமாக வேவுக்குச் சென்ற ஒரு இரவில், இராணுவம் முகாமிட்டிருக்கும் பாடசாலை ஒன்றை ரஞ்சனுக் குக் காட்டி, அசோக் மனக்குமுறலோடு சொன்னானாம்.

"இதுதான்ரா நான் படிச்ச பள்ளிக்கூடம்; இண்டைக்கு இதில சிங்களவன் வந்து குடியிருக்கிறான் மச்சான்… வீட்டுக்கு ஒரு ஆளெண்டாலும் போராட வந்தா இந்த இடமமல்லாத்தையும் நாங்கள் திருப்பி எடுக்கலாந் தானேடா… "

ரஞ்சனது நெஞ்சுக்குள் இந்த நினைவு வந்து அசைந்தது.

தொடர்ந்து நகருவது ஆபத்தாயும் முடிந்துவிடக்கூடும் என் பதால், அருகிலேயே ஒரு மறை விடம் தேடி அவன் பதுங்கிக் கொண்டான்.

இப்போது அவன் தனித்துப்போனான்; கூடவந்த தோழர்கள் எல்லோரினதும் நினைவுகள், இதயமெல்லாம் நிறைந்து வாட்டின.

இனி எப்படியாவது அங்கிருந்து அவன் வெளியேற வேண்டும். வந்தவர்களில் எஞ்சியிருப்பது அவன் மட்டும்தான். நடந் தவற்றைப் போய் சொல்வதற்காவது, அந்த மரணக்குகைக் குளிருந்து அவன் பாதுகாப்பாகத் தப்பிக்க வேண்டும். எனவே அவன் இனி மிக அவதானமாக இருக்கவேண்டியது கட்டாய மாகிறது.

மெல்ல விடிந்தது.

அவன் தொடர்ந்து நகர்ந்து வெளியேற நினைத்த போது –

மின்னலென ஒரு யோசனை மூளைக்குள் பொறிதட்டியது.

'தச்சன்காட்டில் யாரவாது அதிஷ்டவசமாகத் தப்பியிருக்கலாம். அவர்கள் பாதை தெரியாமல் மாறுபட்டு, வேவு வீரர்கள் திரும்பி வருவார்கள் என நம்பி, உள்ளே நுழைந்த முதல் நாள் இரவு அவர்கள் தங்கிய தரிப்பிடத்தில் போய் நிற்கக்கூடும். '

நப்பாசைதான்; ஒரு மன உந்துதலோடு அவன் போனான்.

அவன் அங்கே செல்ல… அங்கே… !

என்ன அதிசயம்! அவன் நினைத்து வந்ததைப் போலவே அவர்கள்…

ஆனால் நால்வருமல்ல .

ரங்கனும், புலிக்குட்டியும் மட்டும் நின்றார்கள்; ராஜேஸ் இல்லை , 'திரு' வும் இல்லை.

அவனைக் கண்டம் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி 'போன உயிர் திரும்பி வந்தது போல' என்பார்களே, அப்படி ஒரு மகிழ்ச்சி. "உடனே எங்களைக் கொண்டுபோய் கெனடி அண்ணனிட்ட விடு; இண்டைக்கு இரவுக்காவது அடிக்கலாம்" என்று அவர்கள் அவசரப் படுத்திய போது–

ரஞ்சன் நடந்தவற்றைச் சொன்னான்.

அந்தக் கரும்புலி வீரர்களால் அதனைத் தாங்கமுடியவில்லை. தாங்கள் பங்கு கொள்ளாமல் அந்தத் தாக்குதல் நடந்து முடிந் ததை அவர்களால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. தங்களது கைகளை மீறி எல்லாம் நடந்து முடிந்துவிட்டதை எண்ணி , அவர்கள் மனம் புழுங்கினார்கள்.

எல்லாம் முடிந்தது.

"இனி நாங்கள் எப்படியாவது, எந்தப் பிரசினையும் இல்லாமல் வெளியில் போய்விட வேண்டும்" என்றான் ரங்கன். போகத் தானே வேண்டும், பிறகென்ன…? ஆனால், ரங்கன் அதற்குக் காரணம் ஒன்றைச் சொன்னான்.

"இதற்குள் நிற்கும்போது எங்களுக்கும் ஏதாவது நடந்தால், இயக்கம் எங்களையும் கரும்புலிகள் என்றுதானே அறிவிக் கும். அப்போது விமானங்களை அழித்தவர்கள் என்ற பெயர் தானே வரும். ஆனால் , அவர்களுடைய தியாகத்தில் நாங்கள் குளிர்காயக்கூடாது." – இதுதான் அவனுடைய மனநிலை.

மிகவும் பாதுகாப்பானது என்று கருதிய பாதை ஒன்றினால் வெளியேற அவர்கள் முடிவு செய்தனர்.

ரஞ்சன் வழிகாட்டினான் கூட்டிவந்த வேவு வீரர்களில் இப்போது எஞ்சியிருப்பது அவன்மட்டும்தான்.

பகற்பொழுது , எனவே ஆகக்கூடிய அவதானத்துடன் அவர்கள் நகர்ந்துகொண்டிருந்தனர்.

மெல்ல மெல்ல சூரியன் உச்சியை நோக்கி உயர்ந்துகொண டிருந்தான்.

அப்போது அவர்கள் சீரவளைக்குப் பக்கத்தில் போய்க்கொண டிருக்கிறார்கள்.

சரியாக நினைவில் இல்லை, ஒரு பதினோரு மணியிருக்கும் –

ஒரு பற்றைக்குள்ளிருந்து "கதவு… ? " என ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தால், ஒரு சிங்களப் படையால் குந்திக்கொண டிருந்தான்; தங்களுடைய ஆட்கள் என்று நினைத்திருப்பான் போலும்.

என்ன பதிலி சொல்வது…? அவர்கள் யோசிக்க, அவனுக்குள் சந்தேகம் எழுந்துவிட்டது.

சற்று உறுத்தலாக, "ஓயா கவுத…?" – கேட்டுக்கொண்டே துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு அவன் எழ, ரஞ்சனின் கையில் இருந்த 'ரி . 56' அவனுக்குப் பதில் சொல்லியது.

"நாங்கள் புலிகள்."

வெடித்தது சண்டை –

அவர்கள் ஓடத் துவங்கினர்; மொய்த்துக்கொண்டு கலைத்தனர் சிங்களப் படையினர்.

கணிசமானதொரு தூர இடைவெளியில் அந்தக் கலைபாடு நடந்தது. பகைவனின் சன்னங்கள் அவர்களை முந்திக் கொண்டு சீறின.

திடீரென ரங்கன் கத்தினான், "டேய்! என்ர காலில் வெடி கொளுவிற்றுதடா…"

ஓடிக்கொண்டே பார்த்தவர்கள், வலது கால் என்பது தெரிகிறது; எந்த இடத்தில் என்பது தெரியவில்லை. அதைத் தெரிந்து கொள் வதால் எந்தப் பயனும் வந்துவிடப் போவதுமில்லை.

ரங்கன் ஓட ஓட அவனது காலிலிருந்து ரத்தம் தெறித்துக்கொண டிருந்தது.

இவர்களால் எதுவுமே செய்ய முடியாது. எதனையும் செய்ய வேண்டுமென அவனும் எதிர்பார்க்கவும் இல்லை.

"என்னால் ஏலாதடா… என்னை சுட்டுப்போட்டு நீங்கள் ஓடுங் கோடா !" – ரங்கன் கத்தினான்.

அவன் ஓட முடியாமல் பின்வாங்கிக்கொண்டிருந்தான்.

ரஞ்சன் சொன்னான். "குப்பியைக் கடித்துக் கொண்டு. 'சாஜ்ஜரை' இழு மச்சான… "

'சாஜ்ஜர்' –உடலோடு இணைக்கும் வெடிகுண்டு. தாக்குதலுக் குப் புறப்படும்போது கரும்புலி வீரர்களுக்கு வழங்கப்பட்டது. சண்டைக்களத்தில் எதிரியிடம் பிடிபடக்கூடிய சந்தர்ப்பம் வரு மானால், ஆகக் கடைசி வழியாக அவர்களைக் காக்கும்.

ரங்கன் குப்பியைக் கடித்துக்கொண்டே 'சாஜ்ஜரின்' பாதுகாப்பு ஊசியையும் இழுத்து எறிந்தான்.

மெல்ல மெல்ல அவன் பின்தங்கி விழ, கலைத்துக்கொண்டு வந்த படையினர் அவனை நெருங்க…

சாஜ்ஜரும் ரங்கனும் வெடித்துச் சிதறிய சத்தம், ஓடிக்கொண் டிருந்தவர்களின் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தார்கள் – புகையும், அவனது உயிரும் தமிழீழத்தின் தென்றலோடு கலந்துகொண்டிருந்தன.

அந்த வெடி அதிர்ச்சியில் குழம்பித் தடுமாறி, பகைவன் திரும்பவும் கலைக்கத் துவங்க முன் , அவர்கள் ஓடி மறைந்து விட்டார்கள்.

எங்கோ பதுங்கியிருந்து. எல்லாம் அடங்கிய இரவாகிய பின் மெல்ல மெல்ல நகர்ந்து வெளியில் வந்தனர் ரஞ்சனும் புலிக் குட்டியும்.

தச்சன்காட்டில் மாறுபட்டுக் காணாமறபோன ராஜேசும் ஐந்து நாட்களின் பின்னர், ஒருவழியாக வந்து சேர்ந்தான்.

ஆனால் அசோக் வரவில்லை; ரங்கன் வரவில்லை; திருவும் வரவில்லை.

* * *

நடு இரவு கடந்து போனது.

ஒகஸ்ட் 2 ஆம் நாளின் ஆரம்ப மணித்துளிகள் சிந்திக் கொண்டிருந்தன.

கெனடி பிரதான கட்டளையகத்துக்கு விபரத்தை அறிவித் தான்.

"இப்போ நாங்கள் நான்கு பேர்தான் நிற்கின்றோம். ஜெயம், நவரட்ணம், திலகன், மற்றும் நான். நாங்கள் தாமதிக்க முடியாது; மற்றவர்களுக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது; அவர்கள் வருவார்கள் என எதிர்பார்க்க முடியாது. எனவே நாங்கள் நால்வரும் உள்ளே இறங்குகின்றோம். எங்களால் முடிந்தளவிற்கு வெற்றி கரமாகச் செய்கின் றோம்." – தச்சன்காட்டுச் சண்டையின் செய்தி எங்கும் பறந்தது.

அந்தப் பெருந்தளம் – மயிர்களைச் சிலிர்த்துக்கொண்டு நிமிரும் ஒரு சிங்கத்தைப் போலத் துடித்தெழுந்தது.

ஆபத்து தங்களது வீட்டுக்குள்ளேயே நுழைந்துவிட்ட அச்சம் சிப்பாய்களைக் கவ்விக்கொண்டது.

சுடுகருவிகள் தயாராகின.

எந்த நேரத்திலும், எந்த முனையையும் உள்ளே நுழைந்து புலிகள் தாக்குவார் எனப் படைவீரர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

விமான ஓட்டிகள் வானூர்த்திகளில் ஏறித் தயார்நிலையில் இருக்குமாறு பணிக்கப்பட்டனர்.

வான்படைத் தளத்தைப் பாதுகாக்கும் காவலரண்களும், வானூர்த்திகளுக்குரிய காவற்படையினரும் உசார்நிலை யில் வைக்கப்பட்டனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் உச்சநிலைக்கு வந்து பரிபூரணமாக ஆயத்தமாகிய பகைவன், எதனையும் எதிர்கொள்ளத் தயா ராகப் போர்க்கோலம் பூண்டு நின்ற வேளை–

யுத்த சன்னதர்களாகப் புறப்பட்டுச் சென்ற எங்கள் கரும்புலி வீரர்கள்– சிங்களத்தின் சிலிர்ந்து நின்ற பிடரி மயிர்களினூடு ஊர்ந்து. அதன் முகத்தை நெருங்கினர்.





இருப்பவர்கள் - திலகன், நவரட்ணம், திரு, ரஞ்கன், ஜெயம்.

" உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது உரைத்தது தமிழீழம் - அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியரசு என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம். "



பிரதான கட்டளையகத்திலிருந்து 'வோக்கி' யில் கெனடியின் குரல் ஒலித்தது - கெனடி நிலைமையை விளக்கினான்.

"நாங்கள் நல்லா கிட்ட நெருங்கிற்றம்..."
"ஏதாவது தெரிகின்ற மாதிரி நிற்கிறதா ? "
"நாங்கள் தேடிவந்ததில் ஒன்றுதான் நிற்குது. பக்கத்தின் ஒருத்தன் நிற்கின்றான். "
"வேறு ஒன்றும் இல்லையா...? "
"அருகில் சின்னன் ஒன்று ஓடித்திரியுது."
"நீங்கள் தேடிப்போன மற்றதுகள்...? "
"இங்கு இருந்து பார்க்க எதுவும் தெரியேல்ல. தூரத்தில் நிற்கக்கூடும். இறங்கினதற்குப் பிறகுதான் தேடக்கூடியதாக இருக்கும். "

"இப்ப நீங்கள் இறங்கக்கூடிய மாதிரி நிக்கிறீங்களா...? "

"ஓமோம... குண்டு எறியக்கூடிய தூரத்திற்கு வந்திட்டம். நீங்கள் சொன்னால் நாங்கள் அடிச்சுக் கொண்டிறங்கிறம்."

"அப்படியெண்டால் நீங்கள் அப்படியே செய்யுங்கோ."

கட்டளையகம் அனுமதி வழங்கியது.

அதன் பிறகு என்ன நடந்திருக்கும்...?

கெனடி உத்தரவிட்டிருப்பான்–

"தாக்குதலை ஆரம்பியுங்கள் "

நவரட்னத்தின் கையிலிருந்த 'லோ' முழங்க 'பெல் 212' இல் தீப்பற்றி எரியும்போது, கெனடி 'டொங்கா' னால் அடிக்க திலகன் அதன் மீது கைக்குண்டை வீசியிருப்பான்.

அதே சம நேரத்தில் – ஜெயத்தின் 'லோ' பவள் கவச வண்டியைக் குறிவைத்து முழங்கியிருக்கும்.

பலாலித் தளத்தின் மையமுகாம் அதிர்ந்திருக்கும்.

தங்கள் அனைத்துக் கவசங்களையும் உடைத்து நுழைந்து, பாதுகாக்கப்பட்ட அதியுயர் கேந்திரத்தையே புலிகள் தாக்கி விட்டத்தை எதிரி கண்முன்னால் கண்டு திகைத்திருப்பான்.

சன்னங்களைச் சரமாரியாய் விசிரும் துப்பாக்கிகளோடு கூச்சலிட்டபடி பகைவன் குவிந்து வர – கெனடியின் 'டொங்கான' எறிகணைகளைச் செலுத்தி இருக்கும்.

திலகனின் ரி.56 ஓய்வற்று இயங்கிக்கொண்டிருக்க, தங் களது அடுத்த இலக்கைத் தேடி அவர்கள் ஓடிக்கொண்டிருந் திருப்பார்கள்.

"கெனடி... கெனடி... நிலைமை என்ன மாதிரியெண்டு எங் களுக்குச் சொல்லுங்கோ..."

"ஒரு ஹெலியும் ஒரு பவளும் அடிச்சிருக்கிறம். ரெண்டும் பத்தி எரிஞ்சுகொண்டிருக்குது... கிட்டப் போக ஏலாம சுத்தி நிண்டு கத்திக் கொண்டிருக்குராங்கள். "

"மற்றதுகள் என்ன மாதிரி ...? "

"தொடர்ந்து அடித்துக்கொண்டு உள்ளே இறங்கிக்கொண் டிருக்கிறம்,

பொம்மருகளைத் தேடுறம்... "

ஆனால் – 500 மீற்றருக்கு அகன்று 2600 மீற்றருக்கு நீண்டிருந்த விசாலமான ஒரு பாதை அது. மிகவும் தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'சியா மாசெட்டி' குண்டு வீச்சு விமானங்களில் தயாராய் இருந்த ஓட்டிகள், அவற்றை மேலேடுத்துவிட்டனர்.

கெனடியின் தொடர்பு நீண்ட நேரத்தின் பின் கிடைத்தது.
" கெனடி .... நிலைமை எப்படி எண்டு சொல்லுங்கோ..."

"ஒரு 'ஹெலி' யும் ஒரு 'பவளும்' அடிச்சிருக்கிறம்... முழுசா எரிஞ்சு கொண்டிருக்கு... புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."

"கெனடி... நீங்கள் அவசரப்பட வேண்டாம்... மற்ற ஆக்கள் என்ன மாதிரி ? "

"நானும் திலகனும் நிக்கிறம்..."

"கெனடி... நீங்கள் அவசரப்படாதேங்கோ... தொடர்ந்து எதுவும் செய்யக்கூடிய மாதிரி இல்லையா...? "

"அண்ணை... எனக்கு ரெண்டு காலும் இல்லையண்ணா ...."
"...................................................... "

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்; புலிகளின் தாகம் ... தமிழீழ... "

"கெனடி... கெனடி..."
"கெனடி... கெனடி.."
"திலகன்... திலகன..."
"கெனடி... கெனடி.."

* * *

ஒரு முதியவர் நீண்ட பெருமூச்சொன்றை விட்டுக்கொண்டு –

"எண்டா தம்பி செய்கிறது... வயசும் போகுது..." என்று கவலைப்பட்டபோது–

அருகில், 'ஈழநாதம்' நாளேட்டில் அவர்களின் படங்களைப் பார்த்து நின்ற அவரின் துணைவியார் ஏக்கத்தோடு சொன் னார–

"நீங்கள் வயது போகுதெண்டு கவலைப்படுறியள்... எத்தின பிள்ளைகளுக்கு வயசு போறதேயில்லை...! "

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம"

- விடுதலைப்புலிகள் (ஆவணி – புரட்டாசி 1994)

குறிப்பு: ***இது தாக்குதலை தலைமையேற்று வழிநடத்தி காய முற்று மயங்கிய நிலையில் எதிரியால் கைதுசெய்யப்பட்டு சமாதானத்தில் போராளிகள் பரிமாற்றத்தில் விடுவிக் கப்பட்ட "கெனடி " அவர்கள்.***

# தேசத்தின் காவலர்கள்



## கரும்புலிகள் எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள்.

***போர் நுட்பம், வீரம், அர்ப்பணிப்பு, மனிதாபிமானம், என்பன வற்றின் சமகாலக் குறியீடு கரும்புலிகள்***

1999 காலப்பகுதியில், சிறீலங்காவில் வெளிவந்த இரு ஆய் வுகள் பல ஆய்வாளர்களது மனக்கிடக்கையை வெளியே இழுத்து வந்தது. தமிழர்களின் போரில் நுட்பங்களும், பல மும் சிங்கள பேரினவாத இயந்திரத்தின் அரசியல் இராணுவ ஆளுமையை சிறுகச் சிறுகச் சிதைத்து ஒரு தனித்துவமான தமிழர் ஆளுமைப்பரப்பு (அரசியல், இராணுவ, இராஜதந்திர) விடயங்களில் ஏற்பட்டுள்ளமையை இவ் ஆய்வுகள் காட்டு கின்றன.

சர்வதேச கல்விக்கான பண்டாரநாயக்கா மையத்தில் இடம் பெற்ற ஆய்வரங்கொன்றில் உரையாற்றிய றோகான் குண ரட்ண புலிகள் பற்றி இராணுவ மதிப்பீடொன்றை நிகழ்த் தினார். இவர் புலிகளின் அரசியல் ஆளுமைபற்றி சந்தே கங்கள் கொண்டிருப்பினும் இராணுவ ஆற்றல் பற்றிய பிரமிப் பை வெளிப்படுத்தினார். ஒரு கெரில்லா இராணுவமாக இருந்து கொண்டு புலிகள் வெளிப்படுத்தும் இராணுவ ஆற் றல் இன்றை உலகில் எவ் விடுதலை இயக்கங்களாலும் வெளிப்படுத்தப் படாதது என்றார். புலிகளினடம் கரையோரக் கடல், ஆழ்கடல் கடற்பலம் உண்டு; விமான எதிர்ப்புத் திறன் உண்டு; ஆரம்பக் கட்டங்களிலான விமானப்பலம் உண்டு; புலிகள் மரபு ரீதியான இராணுவமாகமாறி வருகின்றார்கள் எனச் சுட்டிக்காட்டிய அவர் 1999 ஜனவரிவரை 185 தற் கொடைத் தாக்குதல்களை தரையிலும் கடலிலும் புலிகள் நடாத்தியுள்ளனர் என வியந்தார்.

தனது ஆய்வின் மையமாக அண்மையில் சிறீலங்காவுக்குப் பயணம் செய்த உலகப் போரியல் நிபுணரான ஜெராட் செலி யான் (பிரான்சு) என்பவர் புலிகள் பற்றித் தெரிவித்த கருத்தை இவர் சுட்டிக்காட்டினார். உலகின் இருபெரும் விடுதலை இயக்கங்களான வியட்நாமின் ஈ.பி.எல்.எப். இற்கும் ஈடான இராணுவ பலத்தை புலிகள் கொண்டுள்ளனர் என ஜெராட் செலியான் அபிப்பிரயாம் தெரிவித்தார். இவ் இரு விடுதலை இயக்கங்களும் தமது அரசியல் இலட்சியத்தை வென்று விட்டன என்பதை றோகான் குணரட்ண அச்சத்துடன் சுட்டிக் காட்டினார்.

சிறீலங்காவின் இராணுவப் பலத்திற்கு ஈடாக புலிகளின் இராணுவ பலம் வளர்ந்து வருகின்றது; வன்னியில் சிறீலங் காவுக்கு ஈடாக போர் புரியும் ஆற்றலை புலிகள் கொண்டுள் ளனர்; எனவே எமக்கு ஒரு பாதுகாப்புக் கொள்கை (Security Policy) தேவை என பிறிதொரு ஆய்வாளரான கொடகே பகிரங்கமாக குரல் எழுப்பியுள்ளார்.

இவ்விரு கருத்துக்களும் தமிழீழ விடுதலைப்போரின் ஆழ பரிணாமம் பற்றிய விழிப்புணர்வு (அல்லது அச்சம்) சிங்களத் திடம் ஏற்பட்டுள்ளதை சுட்டிநிற்கிறது.

சமகால உலகின் போர் வரலாற்றில் புலிகளின் போர் முறை களும் நுட்பங்களும் தனித்துவமானதாக இருக்கின்றது. பலமான எதிரிகளின் உச்ச இராணுவப் பிரயோகத்தினை எதிர்த்து சின்னஞ்சிறிய தேசிய இனத்தின் கால்களில் நின்று பிரபாகரன் நடாத்தும் விடுதலைச்சமர் இத்தனித்துவத்தை அடையாளம் காட்டுகின்றது.

சிறீலங்கா தனது மொத்த உள்ளூர் உற்பத்தியளவின் 164 சத வீதத்தை போரிற்கு செலவிடுகின்றது. உலக இராணுவக் கல்லூரிகளில் உயரதிகாரிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். தரை - கடல் - வான் போரிற்கான பலவித நவீன ஆயத தள வாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. படிப்படியான இராணுவ விஸ்தரிப்பு புலிகளுக்கு கால அவகாசத்தைக் கொடுத்து விடும் என்பதால் அதிதுரித விஸ்தரிப்புக்கள் (பலப் படுத்தல்கள்) சந்திரிகா அரசால் மேற்கொள்ளப்பட்டன. புலி களின் இராணுவ, பொருளாதார, அரசியல் பலத்தை உடைத் துவிடலாம் என்ற நோக்கில் யாழ். குடாநாட்டில் குடி மனைகள் நடுவே சந்திரிகா போரை நடாத்தி ஆக்கிரமிப்பை மேற்கொண்டார்.

இக் கணிப்பீடுகள் அனைத்தையும் எமது தேசியத் தலை வரின் திட்டமிட்ட தூரப்பார்வை கொண்ட அரசியல் - இராணுவ அணுகுமுறை சிதைத்தது.

படிப்படியாக ஒரு பலம் வாய்ந்த விடுதலை இராணுவத்தை எமது தேசியத் தலைவர் கட்டி எழுப்பினார். மரபு வழிப்போர் ஆற்றல் உருவாக்கப்பட்டது. ஆயினும் இவ் இராணுவ பலத் தின் மையமாக போர் நுட்பமும், உயரிய அர்ப்பணிப்பு உணர்வும் தேசம் மீது பாசமும் கொண்ட மேன்மையான கரும்புலிகள் விளங்கினர். கரும்புலிகள் விடுதலைப்போரின் மிக சிக்கலான வேளைகளில்கூட தமிழர்களின் போர் ஆற் றலை பேணி, அரசியல் நிலைப்பாட்டை பாதுகாக்கும் உயரிய பணியின் "முன்னரங்காக" திகழ்ந்தனர்.

இன்றைய தமிழர் போர் ஆற்றல் மிகக்கடுமையான எதிர்ப் புக்கள் மத்தியில் பேணப்பட்டு வளர்க்கப்படுவது. நியாயமான அரசியல் இலட்சியத்தின் துணை இருந்தும் கூட உலக அரசியல் உறவுகள், பிராந்திய நலன்கள் போன்றன இக் கடுமையை மேலும் தீவிரப்படுத்துகின்றன. இக்கடுமைகள் மத்தியில் தமிழர்களின் விடுதலைக்கான பாதையில் உள்ள "தடை அகற்றும்" அர்ப்பணிப்பை கரும்புலிகள் மேற்கொள் கின்றனர்.

உலக தற்கொடை இராணுவ வரலாறு என்பது போர் முனை களுக்கு அப்பால் இடம் பெறும் நிகழ்வாகவே இருந்தது. அரசியல் நிபந்தனைகளின் திட்டமிடப்படாத வெளிப் பாடாகவே தற்கொடை நிகழ்வுகள் இருந்ததாக ஒரு ஆய் வாளர் விபரிக்கின்றார். தற்கொடை வெறும் மிரட்டல் என்றும் கூட சிலர் கருதினர். ஆனால் கரும்புலிகளின் தற்கொடை இராணுவ வரலாறு போர் முனையில் தோற்றம் கொண்டது. ஒரு அரசியல் இலட்சியத்தை நகர்த்தும் வீரியத்தை வெளிப் படுத்தும் வரலாறாக இது அமைந்தது.

தரைப்போரில் மில்லர் கரும்புலிகளின் முதல் அடியை உடுத் துவைத்தார். இது கடல் போர் முனைகளில் பரவி, ஆபத்து ஏற்படும் போதெல்லாம் கரும்புலிகள் வெடித்து விதையாகி தடைகளை அகற்றியுள்ளனர்.

ஆண்களும், பெண்களுமாய் கரும்புலிகள் குண்டுகள் சுமந்து பகைமுகாமினுள் நுழைந்தும் ஆற்றிய பணிகள் வார்த்தை விபரிப்புக்கு அப்பாற்பட்டது. ஓயாத அலைகள் 2 உட்பட பல்வேறு வெற்றிகரமான பிரதான இராணுவ இலக் குகளை புலிகள் தகர்த்தபோது அங்கு கரும்புலிகள் பிரதான பங்காற்றிய வரலாறு வெளிவருகின்றது.

கரும்புலிகளை பிரபாகரனிடம் இருக்கும் உயரிய ஆயுதம் எனச்சில மேற்கு இராணுவ ஆய்வாளர்கள் விபரிக்க முற்படு கின்றனர். கரும்புலிகளின் இலக்குகள் தப்ப முடியாதவை என்ற கிலி சிங்களத்திடம் உள்ளதை பல்வேறு சிங்கள ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன. கரும்புலிகள் தமிழர் களின் பலம் என்ற உணர்வு நசுக்கப்படும் தமிழ் மக்களிடம் உள்ளது என்பதை உலகளாவிய பல்வேறு தமிழர் ஏடுகள் புலப்படுத்துகின்றன.

இப்பன்முகப்படுத்தப்பட்ட விபரிப்புக்களுக்கு அப்பால் தமி ழீழம் என்ற அரசியல் இலட்சியத்தை வென்றெடுக்கும் மனோதிடத்தை கரும்புலிகள் தமிழ் மக்களுக்கும், போராளி களுக்கும் ஏற்படுத்துகின்றார்கள். தாண்டிக்குளம் சமரில் பங்கேற்ற பிரதான தளபதிகளில் ஒருவர் கரும்புலிகளுடன் இணைந்து சமர்புரியும் வாய்ப்பு தனக்கு கிடைத்தமையை ஒரு உயரிய நிகழ்வாக விபரித்திருந்தார். மறுபுறம் கரும் புலிகளின் நினைவாக இம்ரான் - பாண்டியன் படையணியி னால் தயாரிக்கப்பட்ட இலக்கியப் படைப்புக்கள் போராளி களின் மத்தியில் கரும்புலிகள் ஏற்படுத்திய உயரிய தாக் கத்தை வெளிப்படுத்தியது.

தமிழ் மக்கள் மத்தியில் கரும்புலிகள் ஒரு பௌதீக வடிவமாக மட்டும் மதிக்கப்படவில்லை. மாறாக மக்கள் மூச்சினுள் - உணர்வினுள் கரும்புலிகள் கலந்து நிற்பதை சமகால சமூக வரலாற்றினுள் அவதானிக்கலாம்.

இது ஒரு உந்து விசையாக திகழ்ந்தது. வெறுமெனே மேற் குலக நியுணர்கள் கருதுவது போன்று இராணுவ ஆற்றல் மிக்க ஆயுதமாக மட்டும் கரும்புலிகள் தமிழர்களுக்கு திக ழாது தமிழ் மக்களின் அரசியல் இலட்சியத்தை பாதுகாத்து, சமூக பண்பாட்டு வாழ்வினுள் உறுதிபற்றிய விழிப்பை ஏற் படுத்தி போரை உந்தித்தள்ளும் பாத்திரத்தை கரும்புலிகள் வகித்துள்ளனர்.

உலக தற்கொடை வரலாற்றை தீவிர அடிப்படைவாதம் என நோக்கிய ஆய்வாளர்கள் மத்தியில், அது ஒரு பலம் மிக்க எழுச்சியின் சின்னம் அல்லது கோட்பாடு என்ற உண் மையை கரும்புலிகள் தோற்றுவித்துள்ளனர்.

- நாதன் - 01.07.1999 — களத்தில்

வன்னிச் சங்கம் - கனடா.
**VUnited Care for Kids Inc.**
Organization – Reg # 1913383. Charitable Organization.
Head office address: 8-3500 McNicoll Ave, Toronto (ONT), M1V4C7.
Secretary@vcarekids.org info@vcarekids.com 416-644-1113.

**President:**
Mr. Sivakumaran Ratnasingam

**Vice President:**
Mr. Ganeshalingam Veluppillai.

**Secretary:**
Mr. Sivasuthan Ponnaiah.

**Vice Secretary:**
Mr. Niththiyanantham Balasingam

**Treasurer:**
Mr. Vijayakumar Kumarasingam.

**Board Members:**
Mr. Kalanathan Sellaiah
Mr. Ratnakaran Sivapatham
Mr. Santhirasegaram Sivasithampa
Mr. Nirojan Navaratnam.
Mr. Tamilcelvan Kanapathipillai.
Mr. Sivaruban Mahalingam.
Mr. Ashokkumar Velautham.
Mr. Karunainathan Murugesu.
Mr. Gunabalasingam Balasingam.
Mr. Punniasingam Subramaniyam.
Mr. Rajeswaran Sabaratnam.
Mr. Uthayakumar Kumarasingam.
Mr. Piratheepan Tharmarajah.
Mr. Kanagaradanam Rasaiah.
Mr. Nevethanan Ganesanathan.
Mr. Mahenthirarajah Suppaiah.

**Internal Auditors:**
Mrs. P. Punithawathy
Mr. K. Ampalavanar.

29 – 06 – 2023.

பிரதம ஆசிரியர் அவர்களுக்கு
சங்கத்தமிழ் அலுவலகம், ரொரன்ரோ
கனடா.

அன்புடையீர்!

கடந்த காலங்களில் எங்களது அறிவித்தல்களை தங்களது இணையவழி பத்திரிகையில் பிரசுரம் செய்து உதவியமைக்கு இத்தால் நாங்கள் தங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதேபோன்று இவ்வருடமும் தங்களது பத்திரிகை மூலமாக கீழ்வரும் ஒன்றுகூடல் அறிவித்தலினைப் பிரசுரம் செய்து தருமாறு மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

**கனடா வாழ் வன்னி மக்களினது ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டியும் 2023.**

---

காலம்: 08-07-2023 சனிக் கிழமை.
நேரம்: காலை 9.00மணி தொடக்கம் மாலை 8.00மணிவரை.
இடம்: மிலிக்கன் பூங்கா திடல் - C.
INTERSECTION: Middle Field Rd and Steels Av East Scarborough.

கனடா வன்னிச் சங்கத்தினால் வருடா வருடம் நடாத்தப்படுகின்ற ஒன்று கூடலானது இவ்வாண்டும் நடாத்தப்படுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து கனடாவாழ் வன்னி மக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

விளையாட்டுப்போட்டிகள் வயதுரீதியாக நடாத்தப்பட இருப்பதால் கலந்து கொள்பவர்கள் தங்களது வயதினை உறுதிப்படுத்தத்தக்க அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிப்பதோடு விளையாட்டுகளில் பங்குபற்றுவோர் பாதணிகள் அணிந்திருக்க வேண்டும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 416–644–1113.

பொ.சிவசுதன்.
செயலாளர்.
V United Care for Kids Inc.
Secretary@vcarekids.org








# ஒரு போராளியின் நாட்குறிப்பிலிருந்து



கரும்புலி கப்டன் மில்லர்
வல்லிபுரம் வசந்தன்
யாழ்ப்பாணம்
05.07.1987 நெல்லியடி மகா வித்தியாலயத்தில்
அமைந்திருந்த இராணுவ முகாம் தாக்குதல்

## கரும்புலி மில்லர்... நீ...
## காலனும் கலங்கிய காவியம்
## காலத்தால் அழியாத ஓவியம்

இன்று (05.07.1987) நடந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி மக்களுக்கு தனி நம்பிக்கையை ஊட்டியிருக்கும் எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் எமது மக்களின் தலைவராக தம்பியை அங்கீகரித்து இந்திய விமானப்படை விமானங்கள் காத்திருந்து அழைத்துச் சென்றன. போராட்டம் ஒரு புதிய வேகத்தில் சென்று கொண்டிருப்பதை இது உணர்த்திற்று.

போவதற்கு முன் தம்பி பத்திரிகையாளர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் **"நான் இறந்து போன ஆறுநூற்றிப் பதினேழு போராளிகளினதும் சடலங்கள் மீது கடந்து செல்கிறேன். வீடு, வாசல், உடமை, உயிர் இழந்த எம் மக்களின் இழப்புக்கு மத்தியில் செல்கிறேன். இது எனக்கு விடுக்கப்பட்ட அழைப்பாகக் கருதவில்லை. தமிழீழ மக்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகவே கருதுகிறேன்"** என்று கூறினார்.

கேட்டுக் கொண்டிருந்த என் கண்கள் பனித்தன. எவ்வளவு உயிரோட்டமான வார்த்தைகள். எமது இயக்கப் போராளிகளின் தியாகத்திற்குக் கிடைத்த மதிப்பேதான் இன்று ஆயுதபாணியாக தம்பி அழைத்துச் செல்லப்பட்ட நிகழ்ச்சி.

நான் அடிக்கடி நினைப்பதுண்டு. நாம் எல்லோரும் ஒரே மக்கள் சமுதாயத்தில் தான் இருந்து போராட்டத்திற்கே புறப்பட்டோம். ஏன் எமது பையன்களிடம் இருக்கும் உறுதியும், தீரமும், தியாகமும் ஏனையவர்களிடம் இல்லையென்று" சிந்தித்துப் பார்த்தால் ஒன்று புரிந்தது. தம்பி உப்போதும் தியாகங்களைத்தான் ஊட்டி, ஊட்டி எம்மை வளர்த்தார். அதனால்தான் இன்று உலக விடுதலைப்போராட்டங்களிலேயே எங்குமே இல்லாதவாறு "சயனைட்" எமது போராட்டத்தில்தான் பிரபல்யமாகியுள்ளது. இருநூற்றி இருபததைந்துக்கு மேற்பட்ட போராளிகள் சயனைட் அருந்தியுள்ளனர். தம்பி எங்களுக்கு தியாகத்தை ஊட்டி வளர்ப்பதுபோல் ஏனைய இயக்கங்கள் புலிகள் பற்றிய குரோத உணர்வுகளை ஊட்டி வளர்ப்பதும் புரிந்தது.

அடி மனதில் குரோத உணர்வுகளை வளர்க்கும் போது தியாகம் விடைபெற்றுச் சென்று விடுகிறது. அதனால்தான் எம்மைப் போல அவர்களால் சாதிக்க முடியாமல் போய்விடுகிறது. அதே நேரத்தில் நான் எல்லாத் தியாகிகளின் தியாகங்களையும் மதிக்கிறேன். ஏனையவர்களிடமும் குரோத உணர்வுகள் நீங்கி தியாக உணர்வுகளே மேலோங்குமானால் நடைமுறைச் சிக்கல்கள் இருக்காதென நினைக்கிறேன்.

இந்த நேரத்தில் எனது நண்பன் "மில்லரின்" நினைவு என்னை வதைக்கிறது. இன்று நடைந்த நிகழ்ச்சிகளைக் காண நீ இல்லை. தன்னையே சுடச் சென்ன சீலன், ஆனந்த், ஏனையவர்கள் உயிர்காக்க கைக்குண்டில் மேல் விழுந்து தன்னுயிர் ஈந்த அன்பு, ஒரே கிறனைட்டில் இறந்த போராளிகள், ஒரே சயனைட்டில் இருவர் கடித்து இறந்த போராளிகள், இறக்கும் நேரத்திலும் கைக்குண்டால் அதிரடிப்படையினரை அழித்து தானும் அழிந்த ரவி எல்லோரின் தியாகங்களும் நினைவுக்கு வருகின்றன. கரும்புலி நீயும் எம் மனதில் நிறைந்து நிற்கிறாய். அந்தியேஷ்டிக்கு எலும்போ, சதையோ கூடக் கிடைக்கவில்லை. ஆனால் உன் நினைவு, செயல் மட்டும் வழிகாட்டலாகக் கிடைத்துள்ளது.

மில்லர்! வசதியான குடும்பத்தைச் சேர்ந்த நீ வழத் தெரியாதவனல்ல. வாழ்வின் சுகபோகங்களைவிட எம் மண்ணின் அவலங்கள்தான் உனது பாதையை மாற்றின.

இயக்கத்தில் பகுதி நேர உறுப்பினனாகச் சேர்ந்து ஆரம்பத்தில் தீவிரமான உழைத்த நீ நாளடைவில் இயக்கத்தின் முழு நேர அங்கத்தவனாகிறாய்; ஒரு சிறந்த சாரதி நீ.

தொண்டமானாறு இராணுவத்துடன் தான் உனது மோதல்கள் கூடுதலாக நடக்கும்.

வடமராட்சியை இராணுவம் கைப்பற்றவிடாமல் கூடியளவு முயற்சித்தோம் ஆனாலும் ஒரு இறுதிக்கட்டப் போருக்குரிய நிலையில் அந்தத் தாக்குதல் நடந்தபடியால் நாம் தற்காலிகமாகப் பின் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் வடமராட்சி மண்ணை இழந்த வேதனை எம்மை தியாகத்தின் எந்தக் கட்டத்திற்கும் செல்லலாம் என்ற உணர்வை ஊட்டியது. அதற்கா சந்தர்ப்பம் கிடைத்த முதல் அதிஸ்டசாலி நீ! இயக்கத்தை நீ கௌரவித்திருக்கிறாய். இயக்கம் உனக்கு அந்தக் கௌரவமான சந்தர்ப்பத்தை அளித்துள்ளது எத்தனை பேர் போட்டியிட்டார்கள். அந்தச் சந்தர்ப்பம் தங்களுக்கு கிடைக்கவேண்டும் என்று சிறந்த சாரதியான நீயே அதற்கான தகுதியைப் பெற்றாய்.

உனக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததும் நீ என்னிடம் வந்தாய். உண்மையான நட்பின் அடையாளம் நீ என்னைச் சந்திக்க வந்ததிலிருந்து புரிந்தது. ஆனால் என்னிடம் கூடச் சொல்லவில்லை. அந்தப் பாக்கியம் கிடைக்கும் முதல் ஆள் நீ யென்று! எனது மனதில் வேதனையுருவாகும் என நீ நினைத்தாயா! இல்லை அந்தச் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லையே என்று பொறாமைப்படுகிறேனடா.

சம்பவதினம் தான் நீ தான் உள்ளே செல்லும் முதல் கரும்புலிக என அறிந்து கொண்டேன். உனது சாதனைக்குரிய ஆரம்ப வேலைகளையும் நீயே மேற்கொண்டாய் சக்கைகளை அடைதல், அவற்றை ஏற்றுதல் எல்லவற்றையுமே நீ யேமேற்கொண்டாய். இறுதி நேரம் வரை உழைக்க வேண்டும் என்ற உன் மன நிலையை உணர்ந்து கொண்டேன்.

அன்று முழுக்க இயக்கத்தை விட்டு விலகிச் சென்ற எமது உறுப்பினர்களைப்பற்றி வேதனையுடன் கதைத்துக் கொண்டாய் ஒரு நல்ல நண்பனை ஆபத்தில் தான் தெரியும் என்பார்கள். இயக்கம் சோதனைகளையும், சாவல்களையும் சந்திக்கும் நேரத்தில் எம்மை விட்டுச் செல்பவர்களை மக்கள் இனங்காணட்டும். எனது இழப்பு இவர்களுக்கெல்லாம் படிப்பினையாக இருக்கட்டும் எனனோடு சேர்ந்து பழகி எங்களை விட்டுப் பிரிந்தவர்கள் எல்லாம் மனச்சாட்சியின் முன் குற்றவாளிகளாகக் கூனிக்குறுகி நிற்கட்டும் என்றெல்லாம் தேதனை யுடன் சொன்னாய்.

கொஞ்ச நேரத்தில் அனைவரையும் கலகலப்பாக வைத்திருக்க வேண்டுமென்று நீ கொஞ்ச நேரத்தில் செய்த அட்டகாசம்! அவை என்றுமே மறக்க முடியாது! கொஞ்ச நேரத்தில் உடல் சிதறி, எலும்போ, சதையோ கிடைக்காமல் போகப் போகி றோமே என்ற ஒரு சிறுகலக்கமும் கூட உன் முகத்திலோ, செயலிலோ காணமுடியவில்லை, எல்லோரையும் விட உற்சாக மாக இப்படித் தான் நீயே! திட்டப்படி இப்படித்தான் போக வேண்டு மென்றதும் நான் இதை விட இன்னும் கூடத்தூரம் போவேன் என்றாய். உனது சாவு நிச்சயமானது என்பதனால் உனது பொக்கற்றினுள் இருந்த காசை எடுத்து அருகே நிற்றவர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றாய். அந்த நேரத்தில் அதை வாங் குபவர்களின் மனம் தேவையடையக் கூடாது என்பதற்காக "இயக்கத்தில் கொக்கோ கோலா குடிக்கத் தடை, ஆனால் நான் வந்ததும் குடிப்பதற்கு நாலு கொக்கோ கோலா வாங்கி வையுங்கள்" நான் வந்து குடிப்பேன் என்றாய். நீ வந்துவிடுவாய் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அந்த நேரத்தில் உனது முடிவு எப்பவும் உனக்குத் தெரியும்.

எனது மண்ணைக் கைப்பற்றிய அந்த சூரர்கள் குறிப்பிட்ட நேரத்தின் பின் முகாமை விட்டு வெளியேறி பொது மக்களின் வீடுகளுக்குப் படுக்கப்போய் விடுவார்கள். அவர்கள் அப்படிப் போவதற்கு முன் உள்ளே போகவேண்மெனத் துடியாய்த் துடித்தாய். "நேரம் போகிறது உடனே போகவேண்டும்" என பரபரத்துக் கொண்டிருந்தாய்,எனது உயிரைப் பறிக்க காலனும் தயங்கினான். நீ கொண்டு பேன வாகனம் வழியில் புதைந்தது. நீயும் இறங்கித் தள்ளிக் ெ காண்டு விரைவாக உள்ளே போக வேண்டுமென அவசரப்படுத்தினாய்.

கரும்புலியாக உள்ளே சென்றாய் – வெளியில் பயங்கரச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து "டேய் சிலவேளை மில்லர் பாய்ந்து மதில்களுக்குப் பின்னால் கவர் எடுத்திருப்பான் கவனமாகப் பார்" என்று எம்மிடையே ஒரு குரல் கேட்டது. நீ தப்பிவிடமாட்டியா என்ற நப்பாசையில் எழுந்த அந்தக் குரலுக்குரியவன் உன்னைத் தேடுகிறான். என்னைத தேடவேண்டாம். நான் உங்கள் மனத்தினுள்ளே இடம்பிடித்துவிட்டேன் என சொல்லாமல் சொல்கிறாய். ஒரு சாதனை சரித்திரமாயிற்று.

புலிகள் தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப் படுகிறார்களென்றால் அதற்கு இந்தத் தியாகங்களே காரணம் என்பதினை அனைவரும் உணர்ந்து கொள்கின்றனர். போராட்டத்தின் அடுத்த அத்தியாகத்திற்காக நாமும் காத்துக் கொண்டிருக்கிறோம்!

\- மாஸ்டர், 24.07.1987



நெல்லியடி ராணுவ முகாமை
கரும் புலிகள் தகர்த்தனர்

பெரும்எண்ணிக்கையான
சிப்பாய்கள் பலியாகினர்

இடிபாடுகளிடையே சடலங்கள்

ஆயுதங்கள்

வீரமரணம்


கரும்புலிகள் நாள்
யூலை 05


New
RANGANAS
JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில் எங்கும் கண்டிடாத சேவை
சிங்கப்பூர், துபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1%
முதல் தங்க நகை அடைவு சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
New RANGANAS JEWELLERY
647-947-2864
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com kprranga@hotmail.com


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA
SUBRA
MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




# கிண்ணியடி படுகொலை 12 யூலை 1991



மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைப் பிரதேசசெயலர் பிரிவினுள் வாழைச்சேனையிலிருந்து 4.5கி.மீ. மேற்காகக் கிண்ணியடிக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழில்கள் விறகு வெட்டி விற்றல், மீன் பிடித்தல், விவசாயம் செய்தல் என்பனவாகும்.

12.07.1991 அன்று கும்புறுமுனை, வாழைச்சேனை இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் கிண்ணியடிக் கிராமத்தைச் சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பதின்மூன்று பொதுமக்களைக் கைதுசெய்த இராணுவம் அவர்களைக் கூரிய ஆயுதங்களினால் வெட்டிப் படுகொலை செய்தபின் அருகிலிருந்த ஆற்றில் வீசினார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# நவாலி தேவாலயப் படுகொலை 09 யூலை 1995

நவாலிக்கிராமம் யாழ். மாவட்டத்தின் தென்மேற்கே சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. நவாலிப் பகுதியில் பழைமை வாய்ந்ததும் சிறப்பு வாய்ந்ததுமாக கத்தோலிக்க மக்களின் புனித வழிபாட்டுத்தலமாக சென்.பீற்றர்ஸ் தேவாலயம் உள்ளது.

09.07.1995 அன்று இராணுவத்தினர் "முன்னேறிப் பாய்தல்" என்ற பெயரில் யாழ். குடாநாட் டின் வலிகாமம் மேற்குப்பதியை இலக்காகக் கொண்டு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட வேளை மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்குமாறு அறிவித்தார்கள். இராணுவ நடவடிக்கை காரணமாக சங்கானை, சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, தொட்டிலடி, சீரணிச்சந்தி, சுழிபுரம், சித்தன்கேணி, இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர். இதில் ஒரு பகுதியினரில் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு பொதுமக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் அத்தேவாலயத்தை அண்டிய




பகுதிகளிலும் தஞ்சமடைந்திருந்தனர்.

1995.07.09 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணியளவில் விமானப்படையினரின் ஆஜன்ரீனா நாட்டுத் தயாரிப்பான "புக்காரா" விமானம் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதும் அதன் சுற்றுப் புறத்திலுமாக ஒரே நேரத்தில் எட்டு றொக்கட் குண்டுகளை வீசியது. விமானத்தாக்குதலினால் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், பெண்கள், சிறார்கள், தாய்மார்கள் உட்பட நூற்றிஜம்பதிற்கும் மேற் பட்ட பொதுமக் கள் உடல்கள் சிதறுண்டு சம்பவ இடத்தில் உயிரிழக்க இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களிற் பலர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள். உயிரிழந்த பொதுமக்களின் உடல்களை அப்புறப்படுத்துவதிலும் காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதிலும் ஊர் மக்கள் ஈடுபட்டனர். அன்று இரவு, மறுநாட் காலையென உயிரிழந்தவர்களின் உடல்கள் உழவு இயந்திரங்களிலும் வாகனங்களிலும் ஏற்றி யாழ். போதனா வைத்தியசாலையிற் சேர்க்கப்பட்டன. மூன்று தினங்கள் கழிந்த நிலையிலும் சடலங்களைத் தேடும் பணி நின்றுவிடவில்லை.

11.07.1995 செய்வாய்க்கிழமை உறவினர்களால் அடையாளம் காணமுடியாத இருபத்துநான்கு சடலங்களை யாழ். வைத்தியசாலை நிர்வாகமும் யாழ். நோயாளர் நலன்புரி நிலையமும் இணைந்து சமய முறைப்படி அரியாலை செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்தன. இத்தாக்குதலின் பின்னர் கத்தோலிக்க மத புனித திருத்தந்தை பெருமதிப்பிற்குரிய "இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்" அவரது அதிர்ச்சியையும் தெரிவித்ததோடு, ஆலயத்தில் நடந்த அனர்த்தத்திற்கு வருத்தமும் தெரிவித்திருந்தார்.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலில் உயிரிழந்த நூற்றிஜம்பத்தைந்திற்கும் மேற்பட்ட மக்களின் நினைவாக, நவாலி மக்கள் ஆலயத்தின் வடக்குப் பக்கமாக நினைவுத்தூபி ஒன்றை அமைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றார்கள்.

மனைவியை இழந்த் மானிப்பாய் கிழக்கைச்சேர்ந்த கமலநாதன் தெரிவிக்கையில்,
"மாலை 4:30 மணிபோல் பெரிய குண்டுச் சத்தமும் புகை மண்டலமும் வயலுக்குள் நின்று பார்க்கும்போது நவாலிப் பக்கமாகத் தெரிந்தது. உடனே மகனையும் கூட்டிக்கொண்டு ஓடோடி வந்து பார்த்தால் எனது வீட்டிற்குள் போகமுடியவில்லை. கட்டட இடிபாடுகளும் முறிந்த மரங்களுமாக வீதியெங்கும் இருந்தது. அதையும் தாண்டிவளவிற்குள் வந்து பார்த்தபோது எனது மனைவிக்கு நெஞ்சிற் காயம்பட்டு இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது. மகளிற்கு தலையிலும் கையிலும் காயம். இருவரும் சாய்ந்தபடி இருந்தார்கள். அவர்களைத் தாண்டி சற்றுத் தள்ளிப்பார்த்தபோது எனது மைத்துனர் குணரட்ணம் குடும்பத்தில் அவரும் அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் முற்றத்திலேயே இறந்து கிடந்தார்கள். மனைவிக்கும் மகளுக்கும் துணியாற் காயத்திற்குக் கட்டுப் போட்டுவிட்டு அருகிலிருந்த சகோதரி என்ன ஆகியிருப்பாரெனப் பயந்து போய்ப் பார்த்தபோது எனது மைத்துனர் கணேசலிங்கம் அழுது கொண்டு மனைவி இறந்துவிட்டார். உங்களுடைய குடும்பத்தைப் போய்ப் பாருங்கோ என்று சொல்லியபடி சகோதரியைத் தூக்கிக் கொண்டு வந்தார். அந்தநேரம் வந்த அம்புலன்ஸ் வண்டியில் மனைவியையும் மகளையும் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குக் சென்றுகொண்டிருந்தோம். போகும் போது மனைவியுடன் கதைத்துக்கொண்டிருந்தேன். அங்கு கொண்டுபோய்ச் சேர்த்தபோது அன்றையதினம் ஞாயிற்றுக் கிழமை என்பதால், பிரதான வைத்தியர்கள் இருக்கவில்லை. இருந்தவர்கள் எல்லோரும் வந்து தொட்டுப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். அப்போது அவருடைய கை திடீரெனக் கீழே விழுந்தது. அந்தவேளை "அப்பா பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுங்கோ" என்றதோடு அவரின் உயிரும் பிரிந்து விட்டது."
இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைதாசன் மேரிசசிகலா மாணவி 18
02. இதயசாந்தினி - -
03. இம்மானுவேல் டுசிந்தா - மாணவி - 14
04. இராமு வீரசிங்கம் - கடற்றொழில் - 43
05. இராசகுலசிங்கம் இராஜ்மோகன் - மாணவன் - 16
06. இராசதுரை மகேஸ்வரி - 34
07. ,ராசதுரை சந்திரகாந்தன் மாணவன் 13
08. இராசதுரை சுதா - மாணவன் - 09
09. இராசரத்தினம் ஆனந்தராசா லிகிதர் - 34
10. ஜீவராஜ் பிரதீபன் - மாணவன் - 13
11. உதயகுமார் - -
12. உதயகுமார் உசாந்தினி - மாணவி - 12
13. உதயகுமார் சதீஸ்குமார் - மாணவன் - 13
14. ந.முருகதாஸ் - -
15. ந.அபிராமி - -

# நவாலி தேவாலயப் படுகொலை 09 யூலை 1995



16. நவசந்தமலர் - -
17. நாகலிங்கம் சரவணமுத்து - கமம் - 60
18. நாகேஸ் கோபாலகிருஸ்ணன் - கடற்றொழில் - 29
19. நடராசா கணாதீபன் - மாணவன் - 05
20. நடராசா சின்னத்துரை - கமம் - 65
21. நடராசா ரவி - சீவற்றொழில் - 22
22. நடேசு சித்திரபாலு - தச்சுவேலை - 51
23. நடேசன் விஜயகுமார் - மாணவன் - 18
24. நீக்கிலாப்பிள்ளை திருச்செல்வம் - அரசஊழியர் - 54
25. நித்தியானந்தம் அன்னலட்சுமி - 57
26. நவரத்தினம் ஜெயதா - மாணவி - 21
27. நல்லையா நீலாவதி - வீட்டுப்பணி - 50
28. கனகசபாபதி தவலட்சுமி - வியாபாரம் - 42
29. கனகசிங்கம் நாராயணசிங்கம் - சுயதொழில் - 50
30. கனகரத்தினம் உசாநந்தன் - தொழிலாளி - 20
31. கனகரத்தினம் சுதாகரன் - மாணவன் - 22
32. கனகரத்தினம் வசிகரன் - மாணவன் - 18





33. கந்தையா நல்லையா - கடற்றொழில் - 55
34. கந்தன் ஞானசேகரம் - மாணவன் - 17
35. கந்தசாமி அஞ்சலாதேவி - 36
36. கந்தசாமி தேனுகா - மாணவி - 2
37. கந்தசாமி தேவகுலசிங்கம் - தொழிலாளி - 36
38. கார்த்திகேசு தவச்செல்வி - மாணவி - 12
39. காத்தான் கந்தசாமி - சீவற்றொழில் - 42
40. கதிரவேலு துரைராசா - விவசாயம் - 55
41. குமாரசாமி பத்மநாதன் - கமம் - 24
42. கமலநாதன் சாவித்திரி - 45
43. கணேசவேல் தேவகணேசன் - மாணவன் - 15
44. கணேசலிங்கம் கமலாதேவி - கணக்கு உதவியாளர் - 45
45. குமரசாமி மகேஸ்வரி - ஆசிரியர் - 54
46. குணரத்தினம் பிரணவன் - மாணவன் - 05
47. குணரத்தினம் தர்சினி - மாணவி - 14
48. குணரத்தினம் ரோகினி - குடும்பத்தலைவி - 35
49. குணரத்தினம் விதுசன் - மாணவன் - 07
50. ப.இந்திரகுமார் - -
51. ப.சாந்தன் - -
52. புஸ்பராணி - -
53. பாலசிங்கம் உதயராசா - தச்சுவேலை - 23
54. பாலசிங்கம் செல்லம்மா - 33
55. பத்மநாதன் பாலயோகினி - 40
56. பத்மநாதன் மலர்விழி - மாணவி - 13
57. பத்மகுமாரன் கோமதி - வீட்டுப்பணி - 28
58. பிரான்சிஸ் கிங்ஸ்லி - எழுதுவினைஞர் - 27
59. பிலிப்பிள்ளை கபிரியேற்பிள்ளை - கிராமசேவையாளர் - 54
60. பரராசசிங்கம் செல்வரத்தினம் - வியாபாரம் - 48
61. புண்ணியமூர்த்தி சயந்தன் - மாணவன் - 09
62. வைத்தியலிங்கம் ஜெயசிங்கம் - அரசஊழியர் - 56
63. வைரமுத்து சிவராசா - தொழிலாளி - 39
64. த.குலசிங்கம் - -
65. த.புஸ்பராணி - -
66. தனலட்சுமி - -
67. தர்மகுலசிங்கம் சுஜீபா - மாணவி - 17
68. தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி - 63
69. துரைராசா - -
70. தம்பிப்பிள்ளை தியாகராசா - சுருட்டுத்தொழில் - 54
71. தம்பிராசா துவாரகாதேவி - மாணவி - 20
72. தங்கராசா தற்சுதன் - மாணவன் - 10
73. தவம் பாஸ்கரன் - தொழிலாளி - 19
74. மாயராசா ஆனந்தபுவனன் - மாணவன் - 16
75. மாயராசா செல்வநாயகி - வீட்டுப்பணி - 53
76. மாதன் பரராசசிங்கம் - மேசன் - 48
77. மகேஸ்வரன் தயாளன் - தொழிலாளி - 20
78. மகேந்திரன் மதுகரன் - மாணவன் - 17
79. மகேந்திரன் வசந்தகுமாரி - 25
80. முருகன் சரசு - 69
81. முருகேசு பொன்னம்பலம் - தச்சுவேலை - 47
82. முருகேசு செல்வரட்ணம் - வர்ணம் பூசுபவர் - 65
83. அ.தனுஸ்ரலா - மாணவி - 8
84. ஆனந்தராசா யோகேஸ்வரி - 35
85. அந்தோனிப்பிள்ளை குரூஸ் குமுதினி - மாணவி - 18
86. ஆறுமுகம் கனகலிங்கம் - வியாபாரம் - 40
87. ஆறுமுகம் குணரத்தினம் - மெக்கானிக் - 40
88. ஜெயசீலன் கனிஸ்ரன் - மாணவன் - 17
89. ஜெகதீபன் - -
90. ஜெகசோதி விமலாதேவி - வியாபாரம் - 42
91. ஜெகசோதி ரதிமலர் - மாணவி - 17
92. யோகேஸ்வரி - -
93. நேசராஜா தவரஜனி - 28
94. கோபாலகிருஸ்ணன் கபில்ராஜ்- மாணவன் - 7
95. கோபாலகிருஸ்ணன் பிரதீபன் - மாணவன் - 07
96. கோபாலகிருஸ்ணன் மதிவதனன் - 22
97. கோபாலகிருஸ்ணன் ரேவதி - 36
98. கோபாலகிருஸ்ணன் சயந்தன் - மாணவன் - 09
99. கோபாலகிருஸ்ணன் விநோபா - குழந்தை - 05
100. கோபிநாத் - -
101. பொன்னர் நாகமுத்து - 75
102. பொன்னார் உதயகுமார் - மீன்வியாபாரம் - 35
103. தொம்மைப்பிள்ளை ஜேசுதாசன் - வியாபாரம் - 21
104. தேவநாயகம் சைலஜா - மாணவி - 13
105. தேவநாயகம் தவபாலசரஸ்வதி - 45
106. தேவநாயகம் மனோதிகா - மாணவி - 08
107. தேவநாயகம் லாவன்யன் - மாணவன் - 11
108. தேவதாஸ் நரேஸ்குமார் மாணவன் 11
109. தேவதாஸ் பிரிந்தினி - மாணவி - 07
110. செ.தவராணி - -
111. செல்லையா இராசதுரை - கடற்றொழில் - 35
112. செல்லையா கிருஸ்ணரூபன் - கடற்றொழில் - 19
113. செல்வராசா பிரதீஸ் - 16
114. செல்வரட்ணம் சிவசுப்பிரமணியம் - 46
115. செல்லத்துரை இராசம்மா - 56
116. வேலு இராமலிங்கம் - தொழிலாளி - 22
117. வேலுப்பிள்ளை நடேஸ்வரன் - மாணவன் - 19
118. வேலாயுதம் லலிதாதேவி - 35
119. ஞானலட்சுமிபாலன் சீவரத்தினம் - தொழிலாளி - 47
120. சக்கரியால் ஜெகதீபன் ஜீவாதாஸ் - மாணவன் - 17
121. சுப்பையா தேவநாயகம் - தொழிலாளி - 47
122. சத்தியநாதன் - -
123. சதீஸ்குமார் - -
124. சி.மகேஸ்வரி - -
125. சின்னத்துரை நாகரத்தினம் - 60
126. சின்னத்தம்பி இன்பமலர் - மாணவி - 10
127. சின்னத்தம்பி இரத்தினசிங்கம் - கடற்றொழில் - 46
128. சின்னையா யோகசுந்தரம் - விவசாயம் -39
129. சின்னையா சரஸ்வதி - 62
130. சித்திரபாலு நாகேஸ்வரி - வியாபாரம் - 44
131. சித்திரபாலு பிரபாகரன் - மாணவன் - 21
132. சித்திரபாலு தனேஸ்வரி - மாணவி - 17
133. சித்திரபாலு மகேந்திரா - தச்சுவேலை - 25
134. சித்திரபாலு ஜெயபாலினி - மாணவி - 12
135. சித்திரபாலு ஜெயமதி - 27
136. சிவகுமாரன் சுரேக்கா - மாணவி - 12
137. சிவசோதிராஜா பிரசன்னா - மாணவன் - 10
138. சிவலிங்கராசா ரஞ்சினி - மாணவி - 11
139. சிறீஸ்கந்தராசா கோபிகன் - மாணவன் - 13
140. சசிகலா - -
141. சுவாமிநாதர் சிவபாலசுப்பிரமணியன் - ஆசிரியர் - 50
142. சரவணபவான் பராசக்தி - 27
143. சரவணமுத்து சிவமணி - பூசகர் - 63
144. சண்முகநாதன் - -
145. வன்னியசிங்கம் - -
146. வீரசிங்கம் சற்குணராசா - கடற்றொழில் - 30
147. வரதராசா கிருஸ்ணகுமார் - குழந்தை — 15 மாதம்
148. ரவிச்சந்திரன் தனுசியா - மாணவி - 8
149. எஸ்.பிரதீபா - மாணவி - 11
150. எஸ்.கேதீஸ்வரன் - -
151. எஸ்.கேமலதா கிராமசேவையாளர் - 27
152. லூக்காஸ் யூட்மோகனதாஸ் - தச்சுவேலை - 24

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ந.கயிலைநாதன் - சாரதி - 46
02. நாகேஸ்வரி - வீட்டுப்பணி - 49
03. க.இரத்தினதேவி - வீட்டுப்பணி - 19
04. கு.உதயப்பிரபா - மாணவி - 19
05. க.ரஞ்சினி - மாணவி - 09
06. கந்தமூர்த்தி செல்லம்மா - வீட்டுப்பணி - 35
07. கந்தமூர்த்தி ரஜனி - மாணவி - 07
08. கந்தமூர்த்தி ஜமுனா - மாணவி - 12
09. கந்தசாமி அமுதன் - மாணவன் - 16
10. கந்தசாமி சாமினி - வீட்டுப்பணி - 29
11. கா.தவராசா - கடற்றொழில் - 38
12. கார்த்திகேசு பேபிசாளினி - மாணவி - 08
13. கார்த்திகேசு சிவயோகராஜபுஸ்பம் - வீட்டுப்பணி - 44
14. கீ.தர்மஜெயன் - தொழிலாளி - 27
15. கி.பௌளின் - தச்சுவேலை - 51
16. ப.தயாளினி - மாணவி - 09
17. ப.சிவரூபன் - மாணவன் - 16
18. பாலச்சந்திரன் மகேஸ்வரி - வீட்டுப்பணி - 35
19. புலேந்திரன் ஜெயகரன் - மாணவன் - 15
20. துரைராசா நவரத்தினராசா - மாணவன் - 17
21. தி.கென்றிஜெயாகர் - தொழிலாளி - 18
22. தங்கராசா கௌசலா - குழந்தை - 02
23. தவராசா தேவகுமாரி — வீட்டுப்பணி - 45
24. தவராசா சிறிகரன் - 36
25. மு.கிளாடிஸ் நிர்மலா - மாணவி - 26
26. மயில்வாகனம் சசிகரன் - மாணவன் - 17
27. மார்க்கண்டு கந்தசாமி - கடற்றொழில் - 45
28. மார்க்கண்டு பேரின்பகுமார் - மாணவன் - 19
29. ஆ.முருகதாஸ் - தொழிலாளி - 30
30. அ.ஆரோக்கியம் - வீட்டுப்பணி - 59
31. அ.அருள்சீலி - மாணவி - 19
32. அ.ஜெயக்குமார் - அதிபர் - 45
33. அ.ஜெயவீரசிங்கம் - தொழிலாளி - 32
34. அ.லூத்துமேரி - வீட்டுப்பணி - 45
35. அன்ரன் ரஞ்சன் - மாணவன் - 19
36. அரசரட்ணம் குமுதினி - மாணவி - 16
37. அரசரட்ணம் மல்லிகாதேவி - வீட்டுப்பணி - 46
38. நேசராசா ஆர்த்தி - குழந்தை - 5 மாதம்

# நவாலி தேவாலயப் படுகொலை
# 09 யூலை 1995








39. கோ.இராகுலன் - மாணவன் - 12
40. பே.சிவயோகநாதன் - கமம் - 44
41. பெனடிற் ரஞ்சினிதேவி - வீட்டுப்பணி - 20
42. தே.ஜெயராணி 38
43. தே.ரஜிதா - மாணவி - 08
44. மேனகா - மாணவி - 14
45. மோ.சாந்தி - வீட்டுப்பணி - 30
46. செ.முருகானந்தன் - மாணவன் - 15
47. செ.தேவமலர் - வீட்டுப்பணி - 16
48. செ.சுமித்திரா - மாணவி - 13
49. ச.நாகேஸ்வரி - வீட்டுப்பணி - 65
50. சு.தங்கப்பட்டு - வீட்டுப்பணி - 19
51. சு.மகாதேவி - மாணவி - 15
52. ச.அருட்செல்வி - வீட்டுப்பணி - 26
53. ச.வசந்தி - மாணவி - 14
54. சி.பிரதீபா - மாணவி - 26
55. சி.திருச்செல்வி - மாணவி - 12
56. சி.யொனிசங்கர் - மாணவன் - 18
57. சி.சுதாகரன் - மாணவன் - 17
58. சி.சிவமலர் - வீட்டுப்பணி - 33
59. சி.சிவசீலன் - மாணவன் - 14
60. விஜயகுமார் புவனேஸ்வரி - வீட்டுப்பணி – 8

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)






# நவாலி தேவாலயப் படுகொலை

**09 யூலை 1995**




















# பன்னங்கண்டி படுகொலைகள் 05 யூலை 1997



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ள மிகச்சிறிய கிராமம் பன்னங்கண்டியாகும். இச்சிறிய கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும் மந்தை வளர்ப்பும் உள்ளது. இக்கிராம மக்கள் வயலும் வயல்சார்ந்த பிரதேசத்தில் தங்கள் குடும்ப உறவினர்களுடன் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

1996ஆம் ஆண்டு காலத்தில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து படையினர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்காக “சத்ஜெய” இராணுவ நடவடிக்கை என்னும் பெயரில் எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் என்பவற்றை நடத்திய வண்ணம் முன்னேறி வந்தனர். இதனால் இப்பிரதேச மக்கள் அன்று தங்கள் உடமைகள், வீடுகள் என்பவற்றைக் கைவிட்டு செய்வதறியாது இடம்பெயரத் தொடங்கினார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் வட்டக்கச்சியில் உறவினர் வீடுகளிலும், சிறிய குடிசைகள் அமைத்தும், பொது மண்டபங்களிலும் தங்கியிருந்தார்கள்.

வ்வாறு வட்டக்கச்சியில் துயருடன் இருக்கும் வேளையில், தங்கள் வீடுகளிலுள்ள பொருட்களை எடுப்பதற்காகவும், மந்தைகளைக் கொண்டுவருவதற்காகவும் சென்ற பொது மக்களை பன்னங்கண்டி மூன்றாம் வாய்க்கால் பிள்ளையார் கோயிலடியில் நின்ற படையினர் கைதுசெய்தனர். பின்னர் அவர்களின் கண்களையும், கைகளையும் கட்டி ஆயுதங்களாலும், தடிகளாலும் கடுமையாகத் தாக்கினார்கள். அப்போது அவர்கள் தாங்கள் பொதுமக்கள் என்றும் தங்களைத் திரும்பிப் போக விடும்படியும் இராணுவத்தினரைக் கும்பிட்டும், கெஞ்சியும் கேட்டார்கள். ஆனால் படையினர் அவர்களை அதே இடத்திலுள்ள இராசதுரை என்பவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கே வைத்து அடித்துக் கொலைசெய்த பின்னர் அவ்வீட்டின் மலசல கூட குழியினுள் நால்வரினது சடலங்களையும் போட்டு மூடினர்.

2000ஆம ஆண்டு மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியமரச் சென்றபோது தங்களது வீடுகளையும் காணிகளையும் துப்பரவு செய்தார்கள். அப்போது இராசதுரை வீட்டு மலசலகூடக் குழியினிலிருந்து நான்கு பேரினது எலும்புக்கூடுகள் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் ஆடைகள் இரத்தக் கறைபடிந்த நிலையிலும் மீட்கப்பட்டன. பின்னர் ஆடைகளை ஆதாரமாகக கொணடு மூன்று பேர் அடையாளங் காணப்பட்டனர். ஒருவர் இன்று வரை அடையாளங்காணப்பட வில்லை. இது ஒரு சிறுவனுடையதாக இருக்கலாமென மருத்துவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இவர்களைப் போன்றே இராணுவத்தினராற் கைப்பற்றிய பகுதிகளில் தங்களது வீடுகளைப் பார்ப்பதற்காகச் சென்று இன்றுவரை திரும்பிவரவில்லையென காணாமற் போனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். கணவரையிழந்த பன்னங்கண்டியைச் சேர்ந்த சீதாலட்சுமி தெரிவிக்கையில்,

“ஒருநாள் வீட்டைப் பார்த்து விட்டு நாங்கள் வளர்த்த மாட்டையும் பிடித்துக்கொண்டு வருவோம் என்று சொல்லிவிட்டு சிநேகிதர் களான முத்து, குமார் என்வர்களுடன் மற்றும் ஒரு பதினாறு வயதுப் பையனுடனும் நாலுபேராக வீடு பார்க்கச் சென்றார்கள். பின்பு 200ஆம் ஆண்டு கிளிநொச்சிப் பகுதியில் மலக்குழி ஒன்றி லிருந்து நான்கு பேரின் எலும்புக் கூடுகள் எடுக்கப்பட்டன. அப்போது இது சம்பந்தமாக எனக்கு அறிவிக்கப்பட்டது. அந்த நேரம் நாங்கள் அக்கராயனில் வசித்து வந்தோம். அப்போது எடுத்த எலும்புக்கூடுகளையும் உடுப்புக்களையும் அக்கராணயன் காவல் நிலையத்தில் காட்டினார்கள். அதில் என் கணவர் போட்டிருந்த உள்ளுடுப்புக்களை வைத்து அவரின் உடலை அடையாளம் காட்டினேன். எனக்கு நான்கு பிள்ளைகள். இடம்பெயர்ந்து இனிமேல் இல்லையென்று கஸ்ரத்தின் மத்தியிற் சீவித்து வந்த நேரம் எனது கணவரும் இராணுவத்தாற் கொல்லப்பட்டு விட்டார். மிகப் பெரிய சிரமத்தின் மத்தியில் பிள்ளைகளைப் படிப்பித்து வளர்த்து வருகின்றேன். எங்களுக்கு எவரும் உதவ முன்வரமாட்டார்கள். அப்படியிருந்தும் யாரிடமாவது கடன்பெற்றாலும் எம்மாற் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றோம். அநியாயமாக எனது கணவரை சிறீலங்கா இராணுவம் கொன்றதால் தான் எனக்கு இந்த கஷ்டநிலை” என்றார்.

இச்சப்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

1. சீனிவாசகம் பன்னீர்ச்செல்வம் - தொழிலாளி – 37
2. பெருமாள் சசிக்குமார் - தொழிலாளி – 38

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# மொழி வழிப்பண்பாடா? சமய வழிப்பண்பாடா?

## பழ. நெடுமாறன்

16.07.2023

"நிர்வாக வசதிக்காகவே மாநிலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலங்களுக்கென்று தனித்தனி பண்பாடுகள் கிடையாது. ஒவ்வொரு மாநிலமும் தனக்கென்று தனித்த அடையாளங் களையும் பண்பாடுகளையும் கொண்டுள்ளதாகக் கருதுகிறது. இவற்றின் மூலம் நாட்டின் வலிமை சிதைக்கப்படுகிறது.

"பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நமது நாடு வலிமை யுடன் திகழ்கிறது என்றால், அதற்குக் காரணம் நமது நாட்டின் பண்பாடேயாகும். நாட்டிற்குப் பண்பாடு உண்டே தவிர, மாநிலங்களுக்குப் பண்பாடு கிடையாது. நாளுக்குநாள் வளர்ந் துவரும் பிளவுகள் பாரதப் பண்பாட்டையே சிதைத்துவிடும்" என தமிழக ஆளுநர் ரவி கூறியுள்ளார்.



ஆளுநர் ரவியின் இந்தக் குரல் அவரின் சொந்தக் குரலல்ல. மறைந்த ஆர்.எஸ்.எஸ். குரு கோல்வால்கரின் குரலே ஆகும்.

"பல பண்பாடுகள், பல மொழிகள், பல சமயங்கள் ஆகியவற் றைக் கொண்ட பன்முகத் தன்மையும், சமய சார்பற்றத் தன்மை யும் கொண்ட சனநாயக கூட்டரசு நாடே இந்தியாவாகும்" என்று நமது அரசியலமைப்புச் சட்டம் கூறும் கருத்தை கோல்வால்கர் மறுத்தார். அவர் கூறிய பண்பாட்டுத் தேசியம் இதற்கு முற்றிலும் எதிரானது. பல பண்பாடுகள், பல மொழிகள், பல சமயங்கள் என்ற பன்முகத்தன்மையை அவர் மறுத்து இந்துத்துவப் பண் பாடு என்னும் ஒருமுகத் தன்மையை வலியுறுத்தினார். சமய சார்பற்றத் தன்மையை அடியோடு மறுத்து இந்து சமய வாதத்தை புகுத்தும் திட்டமே இதுவாகும்.

மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, ஆர்.எஸ். எஸ். தலைவராக விளங்கிய கோல்வால்கர் மிகக் கடுமையாக இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். "மொழி வழியாக மாநிலங்கள் அமைப்பது என்பது மாநில வாதத்தை வளர்த்து இறுதியில் நாடு சிதறுண்டு போவதற்குப் வழி வகுத்துவிடும். இந்தியாவில் உள்ள மாநிலங்கள் அனைத்தையும் அடியோடு ஒழித்துவிட்டு மூன்று அல்லது நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய ஜன பாத அமைப்பு உருவாக்கப்படவேண்டும். இந்தியா முழுவதும் நூறு ஜனபாத அமைப்புகள் இருக்கவேண்டும். இவற்றைக் கட்டுப்படுத்தும் மேலதிகாரம் கொண்ட ஒரேயொரு நடுவண் அரசு மட்டுமே இருக்கவேண்டும். ஜனபாத அமைப்புக்கும் நடுவண் அரசுக்கும் இடையே மாநிலமோ, மாநில அரசோ தேவையேயில்லை" எனக் கூறினார்.

பண்பாடு, சமயம், அரசியல் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்த குறிக்கோளைக் கொண்டதே ஆர்.எஸ்.எஸ். அமைப்பாகும். சமய அடிப்படையில் இந்து தர்மம், பண்பாட்டு அடிப்படையில் இந்து சமற்கிருதம், நாட்டின் அடிப்படையில் இந்து ராஷ்டிரம் ஆகிய மூன்று அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டதாகும்.

இதனடிப்படையில் உருவாக்கப்படும் பாரதப் பண்பாடு கீழ்க் கண்ட பொதுப் பண்புகளை கொண்டதாகும்.

1.வேதங்களையே முதன்மை நூல்களாகவும், முடிந்த விதிக ளாகவும் நம்பிக்கைகளாகவும் கொள்ளுதல்.

2.வேத ஞானத்திற்குரியவர்களாகவும், வேதச் சடங்குகளை இயற்றுபவர்களாகவும் பார்ப்பனர்களைக் கொள்ளுதல்.

3. புனித புண்ணியத் தலங்களாக சில இடங்களை வழிபடுதல்.

4. சமற்கிருத மொழியை மட்டுமே ஒரே புனித மொழியாகக் கருதுதல்.

5.பசுவை கோமாதாவாக ஏற்று வழிபடுதல்.

மேற்கண்ட கோட்பாடுகளின் அடிப்படையில் பண்பாட்டுத் தேசி யம் ஒன்றை உருவாக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

தமிழர் பண்பாடு, வங்காளிகள் பண்பாடு, பஞ்சாபியர் பண்பாடு என்றெல்லாம் பல்வேறு பண்பாடுகள் கிடையாது. பாரதப் பண் பாடு ஒன்றுதான் இருக்கவேண்டும் என்பதுதான் சங்கப் பரி வாரத்தின் கருத்து. அதேதான் ஆளுநர் ரவி எதிரொலிக்கிறார்.

கோல்வால்கருக்கோ அல்லது அவரது சீடர் ரவிக்கோ பண் பாட்டின் இலக்கணம் தெரியாது. எந்தவொரு பண்பாடும் மொழி யடிப்படையில் உருவாகுமே தவிர, சமய அடிப் படையிலேயோ நாட்டின் அடிப்படையிலேயோ ஒருபோதும் உருவாகாது. சமயம் ஒருபோதும் ஒரு தேசிய இனத் திற்கோ அல்லது பண்பாட்டிற்கோ அடிப்படையாக இருக்க முடியாது.

ஒரு தேசிய இனம் உருவாவதற்கு நில எல்லை, ஒரு படித்தான வாழ்க்கை முறை, இலக்கிய உடைமை, பொது பழக்க வழக்கங்கள், சமுதாய மரபு நிலை, ஒரு அரசு ஆகியவை அடிப்படைக ளாகும். ஒரு மொழி தேசிய இனத்தை உருவாக்கியதைப் போல, அந்த மொழியின் இலக்கியங்களும் அந்த தேசிய இனத்திற்குரிய பண் பாடுகளை உருவாக்குகின்றன.

பண்டைய தமிழகம் சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிந்து கிடந்த போதிலும் மூன்று நாடுகளிலும் தமிழ் மொழியே பேசப் பட்டது. மூன்று நாடுகளைச் சேர்ந்த புலவர்களும் தமிழ் இலக்கியத்திற்குச் செழுமை சேர்த் தனர். மூன்று நாடுகளிலும் தமிழ்ப் பண்பாடே நிலவியது. சேரர் பண்பாடு, சோழர் பண்பாடு, பாண் டியர் பண்பாடு என்றெல்லாம் பல பண்பாடுகள் உருவாக வில்லை. சமணம், பௌத்தம், ஆசீவகம், சைவம், வைணவம், இசுலாம், கிருத்தவம் போன்ற சகல சமயங்களைச் சேர்ந்த தமிழர்களும் தமிழ்ப் பண்பாட்டையே பின்பற்றினர். ஒவ்வொரு சமயமும் தனித்தனிப் பண்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய பழந்தமிழ் நூல்களை இயற் றிய புலவர்கள் பல்வேறு சமயங்களைப் பின்பற்றியவர்களாக இருந்தாலும்கூட மொழியடிப்படையில் அமைந்த பண்பாட்டின் அடிப்படையில்தான் தமது பாடல்களை யாத்தனர்.

சமண சமயத்தைச் சேர்ந்த இளங்கோவடிகள் பாடிய சிலப் பதிகாரம், பௌத்தரான சாத்தனார் இயற்றிய மணிமேகலை, சைவரான சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம், வைணவ ரான கம்பன் பாடிய இராமகாதை, பிற்காலத்தில் இசுலாமியரான உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணம், கிறித்தவரான வீரமா முனிவர் பாடிய தேம்பாவணி போன்ற காப்பியங்கள் தமிழ்ப் பண்பாட்டையே சிறப்பித்துப் பாடின. இவர்கள் சார்ந்த சமயங் களின் அடிப்படையில் பண்பாட்டை அவர்கள் உருவாக்க வில்லை உருவாக்கவும் இயலாது.

பல்வேறு மன்னர் குலங்களின் ஆட்சியின்கீழ் தமிழகத்தின் பல பகுதிகள் இருந்தாலும், மொழி, பண்பாடு ஆகியவற்றின் அடிப் படையில் தமிழர்கள் ஒன்றுபட்டிருந்தனர். மொழியடிப்படையில் அமைந்த இந்தப் பண்பாட்டுத் தேசிய உணர்வுதான் மொழிக் கும், மக்களுக்கும் அரணாகத் திகழ்ந்தது.

பிற மொழிப் படையெடுப்பிலிருந்து தமிழ்மொழியைக் காக்க இலக்கண வேலி அமைத்து தொல்காப்பியர் காத்தார். பிற மொழிப் பண்பாடுகளின் தாக்கத்திலிருந்து தமிழரைக் காக்க பண்பாட்டு வேலி அமைத்தார் திருவள்ளுவர்.

வடசொல் உள்பட பிற மொழிச் சொற்கள் தமிழில் பெயர்க்கப் படவேண்டுமென்றால், இவ்வாறுதான் செய்யவேண்டும் என வரையறுத்தார்.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீ,
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே. 884

வடமொழிக்குரிய சொல்லை தமிழில் பெயர்க்கவேண்டு மென்றால், இப்படித்தான் செய்யவேண்டும் என வகுத்துக் காட்டினார் தொல்காப்பியர். அவர் வகுத்த வழியில்தான் சங்கப் புலவர்களிலிருந்து இன்றுவரை தமிழ்ப்புலவர்கள் பிறமொழிக் கலப்பில்லாமல் எழுத்தாக்கங்களைப் படைக்கிறார்கள். எடுத் துக்காட்டாக, வால்மீகியின் இராமாயணத்தை தமிழாக்கம் செய்த கம்பர், இராமன், இலக்குவன், அநுமன், சுக்கிரீவன், கும் பகருணன், வீடணன், இரணியன் என்றவாறு முதலிடையிறுதி எழுத்துக்களை இலக்கணம் பொருந்த ஆண்டார் வச்சிர தந் தனை 'வச்சிரத் தெயிற்றவன்' எனவும் மகாபார்சுவனை 'மா பெரும் பக்கன்' எனவும் சூரிய சத்துருவைச் 'சூரியப் பகைஞன்' எனவும், தூமிராட்சனைப் 'புகைநிறக் கண்ணன்' எனவும் இரணியாட்சனைப் 'பொன்கண்ணான்' எனவும், இரணியனைக் 'கனகன்' எனவும், மகராட்சனை 'மகரக் கண்ணன்' எனவும் பிறமொழிப் பெயர்களைக் கம்பர் பொருள் பெயர்த்துள்ளார்.

அதைப்போல பிறப்பினால் மனிதர்களுக்கிடையே உயர்வு தாழ்வுகள் உண்டு என வலியுறுத்தியது வடவரின் மனுதர்ம சாத்திரம். இது வடமொழியினரின் பண்பாடு.




"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."
என்றார் திருவள்ளுவர்.

பிறப்பினால் ஏற்றத்தாழ்வு இல்லை என்பது தமிழரின் பண் பாடாகும்.

ஒரு மொழியும் அதன் அடிப்படையில் உருவாகும் பண்பாடும் எப்படியெல்லாம் மொழிக்கு மொழி மாறுபடுகின்றன என்பதை மேலே காட்டிய எடுத்துக்காட்டுகள் இயம்புகின்றன.

இந்தியப் பெரு நாட்டில் பல்வேறு மொழிப் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அவரவர்களுக்கு அவரவர் மொழியின்படி அமைந்த பண்பாடுகள்தான் அடையாளமாகத் திகழ்கின்றன. பல்வேறு பண்பாடுகளையும் அழித்து அனைவருக்கும் ஒரே மாதிரியான அடையாளத்தை சூட்டிவிட முடியாது.

ஐரோப்பிய நாடுகளில் வாழ்கிற மக்கள் அனைவரும் கிறித்துவ சமயத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆனாலும் அவர்களுக் கிடையே இரண்டு உலகப் போர்கள் மூண்டன. ஒரே சமயத் தைச் சேர்ந்தவர்கள் மோதிக் கொண்டனர். சமயத்தால் அவர் களை ஒன்றிணைக்க முடியவில்லை.

இமயம் முதல் குமரி வரை அனைத்து மாநிலங்களிலும் இந்து சமயம் பரவியிருக்கிறது. ஆனாலும் பல்வேறு வழிபாட்டு முறைகள், சாதி ஏற்றத்தாழ்வுகள், நீக்கமற நிறைந்திருக் கின்றன. ஒரிசாவில் உள்ள பூரி செகன்னாதர் ஆலயத்திற்கு வழிபடச் சென்ற இந்தியாவின் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்கள் திருமாலின் நாமங்களான இராமபிரானின் பெயரையும் கோவிந்தனின் பெயரையும் சூட்டிக்கொண் டிருந்தாலும் பூரி வைணவக் கடவுளான செகன்னாதரை வழிபடச் சென்ற போது அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதற்காக கோவில் பூசாரிகள் வழியை மறித்து உள்ளே நுழையவிடாமல் தடுத்துத் திருப்பியனுப்பினார்கள். குடியரசுத் தலைவருக்கே இந்த நிலை என்றால், பிற எளிய மக்களின் நிலை என்ன?

இந்த இந்து பண்பாட்டைத்தான் எல்லோரும் மீதும் திணிப் பதற்கு கோல்வால்கர் முதல் ஆளுநர் ரவி வரை வரிந்துகட்டிக் கொண்டு செயல்படுகிறார்கள்.

இராமன் பழங்குடியைச் சேர்ந்த குகனை தன்னுடைய சகோ தரனாகக் கொண்டாடுவதாகவும், அவனுடைய கொழுந்தியாக சீதையை கருதுமாறு கூறுவதாகவும் கம்பன் தனது காப்பியத் தில் படைக்கிறான். காரணம், கம்பன் தமிழ்ப்பண்பாட்டில் திளைத்தவன்.

ஆனால் அந்த இராமனின் பெயரைத் தாங்கியவர் இந்திய நாட்டின் முதல் குடிமகனாக விளங்கினாலும் குடியரசுத் தலைவராகக் கொண்டாடப்பட்டாலும் அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதற்காக கோவிலுக்குள் நுழைய அனுமதி மறுக்கப் படுகிறது. இந்த சாதி உயர்வு தாழ்வுகளை 21ஆம் நூற்றாண் டிலும் தொடர்ந்து கடைப்பிடிக்கும் இந்து சமய பண்பாட்டைத் தான் இந்தியா முழுவதிலும் ஒரே பண்பாடாகப் பதிப்பதற்கு முயல்கிறார்கள்.

# ஐ.எம்.எஃப்பைக் கையாள முடியாத தமிழர்கள்?

26.06.2023

ஐநா மனித உரிமைகள் பேரவையின் 53 வது கூட்டத்தொடர் கடந்த 19ஆம் திகதி ஆரம்பமாகியது. இக்கூட்டத்தொடரில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை வாசிக்கப்பட்டது.




கடந்த சில ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத் தொடரை நோக்கிய தமிழ் மக்களின் கவனக்குவிப்பு ஒப்பீட்டளவில் குறைந்து விடுகின்றது. ஐரோப்பாவை மையமாகக் கொண்டு இயங்கும் தமிழர் அமைப்பு என்ற ஒரு அமைப்பு ஐநா விவகாரங்களில் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது. அதே சமயம் இம்முறை நாட்டிலிருந்து மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு அரசியல்வாதிகள் யாரும் சென்றிருக்கவில்லை. அண்மை ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத்தொடருக்குச் செல்லும் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கிவிட்டது. இந்த விடயத்தில் தமிழ்த்தரப்பிடம் ஒருவித சோர்வு அல்லது ஊக்கமின்மை காணப்படுகின்றது. இதற்குக் காரணம் என்ன?

இத்தனைக்கும் கடந்த ஆண்டிலிருந்து ஐநா இலங்கை இனப்பிரச்சனை தொடர்பில் ஒரு பொறிமுறையை உருவாக்கிச் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரித்து வருகின்றது. இந்தப் பொறிமுறை சிரியா போன்ற இடங்களுக்கு உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறையைப் போன்ற பலமான ஒன்று இல்லைத்தான். அது ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்ட ஒன்றுதான். என்றாலும் தமிழர்களுக்கு சாதகமான ஒரு நகர்வு அது. அதில் ஒன்றுமே இல்லை என்று நிராகரிக்க முடியாது. சரியோ பிழையோ, போதுமோ போதாதோ அது ஈழத் தமிழர்களுக்குச் சாதகமானது. அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சிகளும் போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளில் பெறுமதியானவை. எனவே அப்பொறிமுறையை தமிழர்கள் நீண்ட கால நோக்கில் கையாள வேண்டும். ஆனால் அவ்வாறு கையாள்வதற்குரிய அரசியல் தரிசனமோ கட்டமைப்புகளோ வழி வரைபடங்களோ ஈழத்தமிழர்களிடம் உண்டா?

ஐநாவைக் கையாள்வது என்பது அதன் எல்லாப் பரிமாணங்களிலும் வெளியுறவுக் கொள்கை சார்ந்த ஒரு விடயந்தான். நிச்சயமாக மனிதாபிமான அல்லது நீதிநெறி சார்ந்த அல்லது அறநெறி சார்ந்த ஒரு விடயம் அல்ல.

எனவே ஐநாவும் உட்பட மேற்கு நாடுகளையும் பிராந்தியத்தில் இந்தியாவையும் சீனாவையும் கையாள்வதற்கு தேவையான ஒரு வெளியுறவுத் தரிசனம் அல்லது கொள்கை தமிழ்த்தரப்பிடம் உண்டா? அப்படி ஒரு வெளியுறவுக் கொள்கை இருந்தால்தான் அதற்குத் தேவையான வெளியுறவுக் கட்டமைப்பும் இருக்கும். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழர்கள் ஐநாவை கட்டமைப்புச் சார்ந்து ஒரு மையத்தில் இருந்து அணுகவில்லை என்பதே உண்மை நிலையாகும்

சில ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் சுமந்திரன் சொன்னார், வெளியுறவுக் கொள்கையை வெளிப்படையாக விவாதிக்க முடியாது என்று. ஆனால் அவர் அப்படி சொன்னதன் பொருள் அவரிடம் ரகசியமான ஒரு வெளியுறவுக் கொள்கை உண்டு என்பதல்ல. அவரிடம் வெளியுறவுக் கொள்கையே இல்லை என்றுதான் பொருள். அப்பொழுதும் இல்லை இப்பொழுதும் இல்லை. ஏனெனில் அப்படி ஒரு கொள்கை இருந்திருந்தால் அதைக் கையாள்வதற்கு தமிழரசுக் கட்சியிடம் ஒரு கட்டமைப்பு இருந்திருக்கும், ஆனால் அக்கட்சியிடம் கட்டமைப்புசார் அணுகுமுறை இல்லை. அதனால் தனி நபர் ஓட்டங்களே அதிகமாக உள்ளன.

தமிழரசுக் கட்சியிடம் மட்டுமல்ல பூகோள அரசியல் குறித்து அதிகமாகக் கதைக்கும் கஜேந்திரகுமாரிடமும் ஒரு வெளியுறவுக் கொள்கை உண்டா? கொள்கையிருந்தால் அதை நடைமுறைப்படுத்த ஒரு கட்டமைப்பு இருந்திருக்கும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் வெளியுறவு அணுகுமுறை அல்லது வெளிநாடுகளை நோக்கிய அணுகுமுறை என்று தொகுத்துப் பார்த்தால் கடந்த 14 ஆண்டுகளாக பின்வரும் போக்குகளை அவதானிக்க முடியும்.

சுமந்திரன் மற்றும் சம்பந்தரிடம் துலக்கமான ஒரு வெளியுறவுக் கொள்கை இல்லை. சுமந்திரன் அதிகம் மேற்கை நோக்கிச் சாயும் ஒருவராகப் பார்க்கப்படுகிறார். ஆனால் இந்தியாவைப் பகைப்பதில்லை. அதேசமயம் தமிழரசுக் கட்சிக்குள் தனிப்பட்ட உறுப்பினர்களிடம் இந்தியாவை நோக்கிய சாய்வு உண்டு. அது வெளியுறவுக் கொள்கை சார்ந்த நிலைப்பாடு என்பதைவிடவும் கட்சிக்குள் தமது ஸ்தானத்தைப் பலப்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கை என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். கடந்த 14 ஆண்டு கால தமிழரசுக் கட்சியின் வெளியுறவு நிலைப்பாடுகளை தொகுத்துப் பார்த்தால் அக்கட்சியானது, அதிகம் மேற்கை நோக்கியே சாய்கின்றது, அதேசமயம், பலமான நாடுகளின் இழுவிசைகளுக்கிடையே பேர அரசியலை முன்னெடுக்கத் தவறியிருக்கிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை அதுவும் ஒரு மேற்கை நோக்கிய கட்சிதான். அது திட்டவட்டமாக இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களை எதிர்க்கப் போவதில்லை என்று அக்கட்சி அறிக்கைகளில் கூறிக் கொண்டாலும், நடைமுறையில் தனது எதிரிகளை இந்தியாவின் அடிவருடிகள் அல்லது கைக்கூலிகள் என்று கூறுவதன் மூலம் அது இந்தியாவை ஒரு எதிர்த் தரப்பாகவே உருவகப்படுத்துகின்றது. இந்தியாவை ஒரு எதிர்த் தரப்பாகக் கருதினால் அதன் தர்க்க பூர்வ விளைவாக மேற்கைத்தான் கையாள வேண்டியிருக்கும். கடந்த 14 ஆண்டுகால அக்கட்சியின் நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால், அது மேற்கை நோக்கிய ஒரு கட்சிதான். ஆனால் அக்கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்னவென்றால், முன்னணியியானது வெளிப்படையாக பலமான நாடுகளை நோக்கிச் சாய்வதில்லை என்பதுதான்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழரசுக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளையும் தவிர்த்துப் பார்த்தால் விக்னேஸ்வரனின் கட்சி ஒப்பீட்டளவில் இந்தியாவை நோக்கிச் சாய்வதாகத் தெரிகிறது. 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதற்குரிய ஒரு நடைமுறை வழிவரைபடத்தை விக்னேஸ்வரன் இப்பொழுது முன்வைக்கின்றார். அது இந்தியாவை நோக்கிய ஒரு சாய்வுதான்.

இவைதவிர ஏனைய கட்சிகள் அதாவது ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் காணப்படும் கட்சிகளைத் தொகுத்து பார்த்தால், அவை இந்தியச் சாய்வு நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள்தான். அதில் உள்ள பெரும்பாலான கட்சிகள் முன்பு இந்தியாவோடு சேர்ந்து உழைத்தவை. இப்பொழுதும் இந்தியாவுக்கு விசுவாசமானவை. மேலும் அக்கூட்டுக்குள் காணப்படும் ஜனநாயக போராளிகள் கட்சியும் அண்மை காலங்களில் இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்லும் ஒரு கட்சியாகத்தான் பார்க்கப்படுகிறது. அக்கூட்டமைப்புக்குள் இருப்பவை அநேகமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகள். அதில் டெலோவையும் புளட்டையும் தவிர ஏனைய கட்சிகளுக்கு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய மக்கள் ஆணை கிடையாது. எனவே தொகுத்துப் பார்த்தால் ஜனநாயக கூட்டமைப்புத்தான் ஒப்பீட்டளவில் வெளிப்படையாக இந்தியச் சாய்வுடைய ஒரு வெளியுறவு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

எனவே தமிழ்த் தேசிய பரப்பில் காணப்படும் கட்சிகளை அல்லது கட்சிக்கூட்டுக்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது இதில் ஒப்பீட்டளவில் இந்தியாவை விடவும் மேற்கே நோக்கி அதிகம் சாய்கின்ற கட்சிகள்தான் பலமாக இருக்கின்றன என்பது தெரிகிறது. அவ்வாறு மேற்கை நோக்கிய வெளியுறவு நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன என்றால் மேற்படி கட்சிகள் ஐநாவையும் கட்டாயம் கையாள வேண்டும். ஏனென்றால் மேற்கத்திய ராஜதந்திர பரப்புக்குள்தான் ஐநாவும் வருகின்றது. ஆனால் மேற்படி கட்சிகளிடம் ஐநாவைக் கையாள்வதற்குரிய சரியான வழிவரைபடம் ஏதும் இருக்கின்றதா ?

இங்கு ஒரு முக்கியமான விடயத்தை சுட்டிக் காட்ட வேண்டும். கடந்த 2021 ஆம் ஆண்டு ஐநா கூட்டத் தொடரை முன்னிட்டுத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மூன்றையும் இணைத்து ஒரு கடிதம் எழுதப்பட்டது. கடிதத்தில் ஒரு முக்கியமான விடயம் கேட்கப்பட்டது. பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பதே அது. எனவே பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே எடுத்து ஐநா பொதுச்சபையானது அதனை சர்வதேச நீதிமன்றங்களை நோக்கிக் கொண்டுபோக வேண்டும் என்ற தொனிப்பட மேற்படி கடிதம் எழுதப்பட்டது. இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு கிட்டத்தட்ட முப்பது மாதங்கள் ஆகின்றன. ஆனால் அக்கோரிக்கையை நோக்கி மேற்படி கட்சிகள் எந்தளவுக்கு உழைத்திருக்கின்றன ?

எந்த ஒரு கட்சியும் அவ்வாறு உழைக்கவில்லை என்றே தெரிகிறது. அவ்வாறு உழைத்து இருந்திருந்தால் ஒரு பொருளாதார நெருக்கடியின்போது இலங்கை அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்பட்ட மேற்கத்திய நாடுகள் இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து இருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான நிர்பந்தங்கள் எவையும் பிரயோகிக்கப்படவில்லை என்பதைத்தான் நாட்டில் நடக்கும் சிங்கள பௌத்த மயமாக்கல் நமக்கு உணர்த்துகின்றது. ஐ.எம்.எஃப்,உலக வங்கி போன்றன பெருமளவுக்கு மேற்கத்திய ராஜதந்திர பரப்புக்குள் காணப்படும் உலகப் பொதுக்கட்டமைப்புகள். எனவே மேற்கைக் கையாள்வது என்ற நடைமுறையை கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் ஐ.எம்.எஃப்பை வெற்றிகரமாகக் கையாண்டிருக்கின்றனவா? அல்லது பலமிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் அதை செய்திருக்கின்றதா?




அவ்வாறு செய்திருந்திருந்தால் நிதி உதவியும் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நிபந்தனையும் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட முடியாதபடி பிணைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பிணைக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, ஐ.எம்.எஃப். பிரதிநிதிகள், தென்னிலங்கையிலுள்ள சிவில் சமூகங்களைச் சந்தித்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவ்வாறு தமிழ்ச் சிவில் சமூகங்களை என் இதுவரை சந்திக்கவில்லை? எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து ரணில் விக்ரமசிங்கவை காப்பாற்றுவதான மேற்கு நாடுகளின் நிலைப்பாடு எனப்படுவது, தமிழ்க் கட்சிகளின் மேற்கை நோக்கிய அணுகுமுறையின் இயலாமையைக் காட்டுகிறது.

ஐ.எம்.எஃப்பின் உதவிகள் கிடைக்கும் ஒரு காலகட்டத்திலேயே சிங்கள பௌத்தமயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றமை என்பது அந்த இயலாமைக்குச் சான்று. அரசாங்கம் ஒரு புறம் ஐநாவின் நிலைமாறு கால நீதிக்கான கட்டமைப்புகளில் ஒன்றாகிய உண்மை மற்றும் நீதிக்கான ஆணைக் குழுவை உருவாக்கப்போவதாக அறிவித்திருக்கிறது. ஆனால் அதற்குச் சமாந்தரமாக சிங்களபௌத்த மயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. ஆயின், அரசாங்கம் பொறுப்புக்கூறலுக்கு அதாவது நிலைமாறு கால நீதிக்கு விசுவாசமாக இல்லை என்று பொருள்.

எனினும் ஐ.எம்.எஃப்பும் மேற்குநாடுகளும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்து உதவுகின்றன என்றால், புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகமும் உட்பட தமிழ்த்தரப்பு மேற்கு நாடுகளை பொருத்தமான விதங்களில் கையாள்வதில் தோல்வி அடைந்து விட்டது என்று தானே பொருள்?

நன்றி: நிலாந்தன்


JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும், தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் அருங்காட்சியகம்!

24.05.2023 - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம்



கடந்த 24ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையின் முதலாவது பேராசிரியர் கா.இந்திரபாலா அவர்கள் வரலாற்றுத்துறைக்கும் தொல்லியல் சார்ந்த ஆய்வுகளுக்கும் காத்திரமான பணியை வழங்கியவர்.




அவர் எழுதிய இலங்கையில் தமிழர் எனும் நூல் எம் தமிழினத்தின் தொன்மையை, செழுமையை, வாழ்வியலை ஆதாரபூர்வமாக ஆவணப்படுத்தும் பொக்கிசம். அவர் எழுதிய இலங்கையில் தமிழர் என்ற நூலை வலம்புரி நாளிதழ் தொடராக வெளியிட்டிருந்ததை இந்நேரத்தில் நினைவுபடுத்துவது பொருத்துடையது. இவ்வாறு பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் வரலாற்றுத் துறைக்கு ஆற்றிய சேவையை இடையறாது தொடர்ந்த பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் அவர்களின் பணி மகத்தானது. அதனை ஈழத் தமிழினம் ஒருபோதும் மறந்து விடமாட்டாது.

உண்மை. பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள், எங்கள் தமிழர் தேசத்தில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகள், ஆய்வுகள், அவற்றால் கிடைக்கப் பெற்ற தொல்லியல் சான்றுகள் இந்த நாட்டில் எங்கள் இனத்தின் வரலாற்றுத் தொன்மை எத்தகையதென்பதை நிரூபித்து நிற்கிறது.

தவிர, அகழ்வராய்ச்சியில் கிடைக்கப் பெற்ற தொல்லியல் சான்றுகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி, துறைசார் நிபுணர்கள் மூலம் அவற்றின் வரலாற்றுக் கால அளவு வழிபாட்டுத் தொன்மை என்பவற்றை ஆதாரப்படுத்திய பெருமையும் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களைச் சாரும்.கலையும் - அதனோடு தமிழ் மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டுப் பெறுமானங்கள், இந்த வகையில் இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி கா.இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டிருப்பது மிகப்பெரும் நம்பிக்கையைத் தருவதுடன் எங்கள் வரலாற்றுத் தொல்லி யல் சான்றுகளை ஆவணப்படுத்தவும் அவற் றைப் பேணிப் பாதுகாக்கவும் உரிய இடம் இல் லையே என்ற மனக்குறையையும் நிவர்த்திக்கிறது.















தவர்கள் ஆவர்.

இந்த தொல்லியல் அருங்காட்சியகம் தமிழினத்தின் வரலாற்றை எடுத்தியம்பும் பெருங்காட்சியகமாக அமைய வேண்டும்.

இதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையை சிறப்புத்துறையாகக் கற்று இன்று உலகமெலாம் பரந்திருக்கும் நம்மவர்கள் பேருதவி புரிய வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.



























































விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**
**437.345.4203**

இரணைமடு



மன்னார் மாவட்டம்



கந்தரோடை, ஆனைக்கோட்டை பெரியபுளியங்குளம்



பெரியபுளியங்குளம்



ஆனைக்கோட்டை அகழ்வாய்வு -1980



நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்





## திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியகம்





நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்



பாரம்பரிய சமயச் சின்னங்கள் மற்றும் புழங்கு பொருட்கள்



அருங்காட்சிய தொல்பொருள் விவரிப்பு








**கரும்புலி வீரர்கள் பலர் இன்று பெயர் குறிப்பிடப்படாத கல்லறைகளில்
உறங்கியபோதும், அவர்களது அற்புதமான சாதனைகள்
வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப்புகழ் பெற்று வாழும்.**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்






**DEBT SOLUTIONS GTA INC.**

**CREDIT CARD & DEBT SOLUTIONS**

**வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு**

**Reduce your debts upto 80%**

கடன் அட்டைகளினது தொல்லையா? வங்கிக்கடன் தொல்லையா? சம்பளத்தில் பறிமுதலா?
CREDIT CARD PROBLEMS, BANK LOAN PROBLEMS, WAGE GARNISHEE PROBLEMS

உங்கள் வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துவது சதவீதத்தில்
(PERCENTAGE) தீர்மானிக்கப்படமாட்டாது.

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், கடன் தொடர்பான சட்டப் பிரச்சனை.
COLLECTION COMPANIES PHONING AT WORK OR HOME, LAWSUITS

உங்கள் வருமானம் (INCOME), செலவு (EXPENSES), என்பவற்றை வைத்து
உங்கள் கடன்களில் (DEBTS) சிறிய மாதாந்தத்தொகையை மட்டும் செலுத்தும்
முறை மூலம் உங்கள் மொத்தக் கடன்களில் (TOTAL DEBTS) இருந்து
விடுதலை பெறலாம்.

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்.
We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIG,
Life Insurance, Stocks, Bonds & Shares)



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

DSC DEBT SOLUTION CANADA

Head Office Location:
10 Milner Business Court, Suite 300
Scarborough ON M1B 3C8
(One Block North of 401 on Markham)

2 Robert Speck Parkway, Suite 750
Mississauga ON, L4Z 1H8

2 Country Court Blvd, Suite 400
Brampton ON, L6W 3W8

**Tel: 647-274-2832**
www.debtsolutioncanada.ca

# அப்பா இன்னும் இருக்கின்றார்...!

உண்மைக் கதை

இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் – உணர்வு பூர்வமாக நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக – நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மானைக் கும்பிடுறானுகள்...!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப் பட்டுள்ளன.

சிங்கள வெறிப்படை,

"அமைதிப் படை" – ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து. அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்...

எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.
அவற்றில்... இருந்து.

*யாழ்ப்பாணம் அவன் எண்ணங்களில் – கனவுகளில் எப்போதும் நிறைந்திருந்தது.*

*சின்ன வயதில் விளையாடி மகிழ்ந்த செம்பாட்டு மண் – கூட்டமாக நிற்கும் பனை மரங்கள் – குடாநாட்டுக்கு வெளியே தொடங்கும் அடர்ந்த பச்சைக் காடு – இரண்டு இரண்டாகப் புல் தரையில் மேயும் மைனாக்கள் – கோயிலடியில் பனங்கிழங்கு விற்கும் கிழவி – பழைய காலத்து ஏ – 40 "கார்"கள், தவில் வித்துவான்களின் இனிய மேளக்கச்சேரி – உயிரான தமிழீழம்!*

## அப்பா இன்னும் இருக்கின்றார்...!

24.10.1987 காலை 10 மணி.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்குக் "கார்" புறப்படுகிறது.

"ஷெல்" களுக்கும் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் நடுவில் ஒரு பயணம்.

சிறீவரதராஜா, மனைவி நீலாம்பிகை, குழந்தைகள் தர்சன், தர்மலா, கிரிஷன். மாமா, மாமி, சகோதரி ரஜனி மற்றும் ஓர் உறவினர் காரை அடைத்தாற்போல் உட்கார்ந்திருக்கிறார்கள்.

நல்லூர்க் கோயிலடியில் இந்தியப் படையின் முதல் தடுப்பு நிலையம் குறுக்கிடுகிறது.

நிற்கிறார்கள்.

காக்கியுடைக் கும்பல் ஒன்று "காரை" மொய்க்கிறது.

"உங்களை எல்லாம் சுட்டுக் கொல்லவேணும்... We, Will Shoot You"

ஒரு வெறியன் கூச்சலிடுகிறான்.

எல்லோரையும் கீழே இறக்கி "காரின்" ஒவ்வொரு பகுதியாக உருட்டிப் புரட்டிவிட்டு, மற்றொரு இந்தியப்படைக்காரன் அவர்களைப் பார்த்து முரட்டுத்தனமாக உறுமுகிறான்.

"புலி யாரும் இரக்கிறதா?"

சிறீவரதராஜா பக்கவாட்டில் தலையை அசைக்கிறான். குழந்தைகள் மிரளுகின்றன. மூன்று வயது தர்மலா அம்மாவின் சேலையில் முகத்தைப் புதைக்கிறாள்.

"சரி போ... போ..."

காலையிலேயே முகமெல்லாம் வியர்த்துக்கொட்ட வெலவெலத்துப்போய் ஓட்டுநர் இருக்கையில் உட்காருகிறார்.

"கார்" புறப்படுகிறது.

"அப்பா உவங்கள் எதுக்கு எங்களை மிரட்டுறாங்கள்...? சுட்டுப் போடுவாங்களே அப்பா?"

ஆறு வயது தர்சன் அப்பாவைக் கேட்கிறான்.

வெளியே மரங்கள், மின்கம்பங்கள் எல்லாம் ஓடிக்கொண்டிருப்பது கிரிஷனுக்குக் கொள்ளை மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒரு வயதுக் குழந்தை அவன்.

"கார்" க் கண்ணாடியை இழுத்து விட்டு – உள்ளே வந்த காற்றை உறிஞ்சி சிறீவரதராஜா பெரிதாக மூச்சு விடுகிறான்.
தலை சுற்றுகிறது.
"நாம் எல்லாம் தமிழனாய் பிறந்தால இப்படி அனுபவிக்கிறம்டா



தம்பி..."

சிறீவரதராஜாவின் சொற்களைக் கேட்டு ஓட்டுநர் சிரிக்கிறார். சினத்தின் வெளிப்பாடு.

"உவங்கள்தான் எங்களைக் காப்பாத்த வந்தவங்களே...?"

சிறீவரதராஜாவின் மனைவி நீலாம்பிகை முனகுகிறாள்.

"கொஞ்சம் கூட மனுசத் தன்மை இல்லாமப் பாய்ஞ்சு விழுகினம்."

"அதுதான் தங்கச்சி நினைச்சாச் சரியான கவலையாக் கிடக்குது. சிங்களவன் சுட்டானெண்டால் தாங்கிக்கொள்ளலாம்... அவன் எங்களை அழிக்கிறதுக்கு என்றே இருக்கிறவன்... உவங்கள் காப்பாத்த அல்லே வந்தவங்கள்! ஊர் ஊராக் கொல்லுகினம்."

ஓட்டுநர் நீலாம்பிகை சொன்ன கருத்துக்கு அழுத்தம் கொடுக்கிறார்.

"ஏதும் செய்யமாட்டினமே?"

மாமிக்கு நடுக்கம் பிடிக்கிறது.

"காருல வெள்ளைக் கொடி கிடக்குது அம்மா... பயமில்லாம இருங்கோ."

ஓட்டுநர் தெம்பூட்டுகிறார்.

பாம்பு ஒன்று மின்னல் வேகத்தில் பக்கத்தாலேயே சீறிக் கொண்டு பாய்வது போல, "ட்றக்" வண்டி நொடியில் "காரை"க் கடந்து மறைகிறது.

சிறீவரதராஜா பழையபடி காரின் ஜன்னல் வழியாகக் காற்றை உறிஞ்சி மூச்சு வாங்குகிறான்.

"நம்முடைய தெருவில் நாமே நடமாட முடியாத நம்முடைய நாடு"

வயிற்றெரிச்சல் அவன் வாயிலிருந்து சொற்களாய்விழ, ஓட்டுநர்

தூரத்தில் இந்தியப் படை "ட்றக்" வண்டி வருவது தெரிகிறது.
"உவங்கள் வாறாங்கள்."
தர்சன் விரலை நீட்டிக் காட்டுகிறான்.
எல்லோரும் அமைதியாகிறார்கள்.
"ஏதும் செய்யமாட்டினமே?"
எல்லோரும் அமைதியாகிறார்கள்.

மீண்டும் சிரிக்கிறார் – அதே சினத்தின் வெளிப்பாடு.

லண்டனில் வாழ்ந்தவர்கள் அவர்கள்.

மகாராணி எலிசபெத்தின் மண்ணாக இருந்தாலும் தாயகம் ஆகிவிடுமா என்ன? லண்டனில் தமிழீழம் பற்றிய கூட்டங்கள் நடக்கும்போதெல்லாம் மண்டபத்தின் முன்வரிசையில் சிறீவரத ராஜா தாகத்தோடு உட்காந்திருப்பான்.

யாழ்ப்பாணம் அவன் எண்ணங்களில் – கனவுகளில் எப் போதுமே நிறைந்திருந்தது.

யாழ்ப்பாணம் அவன் எண்ணங்களில் – கனவுகளில் எப் போதும் நிறைந்திருந்தது.

சின்ன வயதில் விளையாடி மகிழ்ந்த செம்பாட்டு மண் – கூட்டமாக நிற்கும் பனை மரங்கள் – குடாநாட்டுக்கு வெளியே தொடங்கும் அடர்ந்த பச்சைக் காடு – இரண்டு இரண்டாகப் புல்தரையில் மேயும் மைனாக்கள் – கோயிலடியில் பனங் கிழங்கு விற்கும் கிழவி – பழைய காலத்து ஏ – 40 “கார்”கள், தவில் வித்துவான்களின் இனிய மேளக்கச்சேரி – உயிரான தமிழீழம்!

“அப்பாவுக்கு உடல் நலம் இல்லை – நோய்கடுமையாக இருக் கிறது.”

ஊரில் இருந்து வந்த தந்தியைப் படித்தபோது, சிறீவரதராஜா உடைந்து போனான்.

அப்பா கண்முன் அப்படியே தோன்றினார்…!

நீளவிழிகளும் அடக்கமான சிரிப்பும் தோளில் சால்வையும் கைத்தடியும்…

அப்பா… அவனுடைய அன்பான அப்பா… அப்பா சாகுமுன் அவரை ஒரு முறை பார்த்துவிட வேண்டும்…

“நீலா, அப்பா என்னை நினைக்காம இருக்கமாட்டார் தெரியு மே?”

கண்கலங்க மனைவி நீலாம்பிகையிடம் சொன்ன சிறீவரத ராஜா, அடுத்த மணித்துளியே தர்மலாவைத் தூக்கி மார்போடு அணைத்தபடி தளதளத்த குரலில் சொன்னான்.

“மகளே… நாம அப்பாவைப் பார்க்கப் போறம்.”

“மெய்யே அப்பா… உண்மையாகத்தான் சொல்லுறீங் களே…?”

தர்சனுக்கு ஒரே கொண்டாட்டம் – அப்பப்பாவின் நோயைப்பற்றி ஒன்றும் பெரிதாகக் கவலைப்படத் தெரியாத வயது. அவன் கூத்தாடத் தொடங்கிவிட்டான்.

தங்கை தர்மலாவிடம் இரண்டு நாட்கள் தர்சன் கதை கதை யாகக் கூறிக்கொண்டே இருந்தான்.

“யாழ்ப்பாணத்துக்கு “பிளைட்டுல” போறதாம்… பேந்து அப்பப்பா “சொகளேட்” வாங்கித் தருவாராம்… பேந்து விக்கிச் சித்தப்பா கடற்கரைக்குக் கூட்டிற்றுப் போவாராம்…”

தர்மலா வானத்தில் மிதந்தாள்.

ஏற்பாடுகள் முடிந்து விமானம் புறப்படும் நாள் வந்தபோது, எல்லோரும் “ஹீத்றோ” விமான நிலையத்துக்கு வந்தார்கள்.

தர்சனின் மகிழ்ச்சி எல்லை தாண்டி இருந்தது.

விமானம் புறப்படுமுன்பு, லண்டன் நகரை நோக்கிக் கைகளை அசைத்து அவன் கூறினான்.

“குட்பை ரு லண்டன்”

சிறீவரதராஜா 05.10.1987 இல் கொழும்பு வந்து இறங்கிய போதே தமிழீழத்தில் இரத்த மழைக்கான முகில்கள் குவியத் தொடங்கிவிட்டன.

விடுதலைப் புலிகளின் மாபெரும் தளபதிகள் குமரப்பா, புலேந் திரன் உட்பட 12 விடுதலைப் புலிகள் பலாலி படை முகாமில் “சயனைட்” அருந்தி உயிரிழந்த சேதி, கொழும்பில் காட்டுத் தீயாகப் பரவிக்கொண்டிருந்தது.

எங்கும் பதற்றம்.

உணர்ச்சிவசப்பட்ட தமிழர்கள் அடுத்த ஓரிரு நாட்கள் கிழக்கில் சிங்களவர்களைப் பெருமளவில் கொன்று குவிப்பதாகக் கொழும்பில் பரபரப்போடு பேசப்பட்டது. சிங்களவர்ளின் அந்த நகரில் வீடுகளை விட்டுத் தமிழர்கள் வெளியில் இறங் கவில்லை.

தெருக்களில் “பற தெமள” முழக்கங்கள் கேட்பதாகவும் – தமிழர்கள் ஓரிரு இடங்களில் தாக்கப்பட்டதாகவும் – சேதிகள் அடிபட்டன.

வாடகைக் கார் ஒன்றை வைத்துக்கொண்டு சிறீவரதராஜா கொழும்பை விட்டுப் புறப்பட்டு, உடனடியாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தான்.

“அப்பா சாகுமுன் அவரை ஒரு முறை பார்த்துவிட வேண் டும்…” இந்தியப் படை தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பது என்ற முடிவோடு, ஒக்ரோபார் 09ஆம் தேதி தாக்குதலைத் தொடங்கிற்று.

யாழ்ப்பாணக் குடாநட்டின் நாலு திசைகளையும் பாரதப் படை யின் “ஷெல்”கள் நொறுக்கிக் கொட்டின.

எங்கும் பிணவாடை – இரத்த வெள்ளம் மனித அவதிகள் – கண்ணீர்…

துப்பாக்கி வேட்டோசை கேட்டபோதெல்லாம் காக்கைகள் வானத்தில் எழுந்து கூச்சலிட்டன.

யாழ்ப்பாணத்தில் மருத்துவமனைகள் நிரம்பி வழிந்த நாட்கள் அவை.

சிறீவரதராஜா, தனியார் மருத்துவமனை ஒன்றில் இருந்த அப்பாவை குடும்பத்தோடு போய்ப்பார்த்தான்.

அப்பாவின் கண்களில் வெள்ளம் பொங்கிற்று.

“சாகிறதுக்கு முன்னாலை உன்னைப் பார்க்க முடியுமோ இல் லையோ என்று கவலையாக இருந்தது மோனே… வந்து சேர்ந்திட்டாயே…!”

குழந்தை போல விம்மி அழத்தொடங்கினார் அப்பா.

தர்சன் கட்டிலில் உட்கார்ந்து அப்பப்பாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

“ஆசுப்பத்திரியிலை எத்தனை இளசுகள் காயத்தோடயும் – இரத் தத்தோடயும் வருகுதுகள் தெரியுமே? இந்தியப் படை இப்படி நடக்கும் என்று யார் நினைச்சது?”

முனகி முனகி அப்பா மூச்சு விட்டார்.

சிறீவரதராஜா அப்பாவைத் தேற்றினான்.

“உதையெல்லாம் பற்றி யோசியாதேயுங்கோ அப்பா – புலிகள் விட மாட்டினம்.”

அப்பாவுக்கு நோய்ப்படுக்கையில் கவலை எதுவும் இருக்கக் கூடாது என்பதுதான் சிறீவரதராஜாவின் கவலை.

யாழ்ப்பாணத்தில் – தம்பி விக்கினேஸ்வரன் வீட்டில் தங்கி ஒவ்வொருநாளும் அப்பாவைப் போய்ப்பார்த்தான் அவன்.

தர்சனும் தர்மலாவும் இரண்டு வாரங்கள் விக்கிச் சித்தப்பா வீட்டில் படாத பாடு பட்டார்கள்.

சிறிய பந்துகளை எடுத்துக் கூடையில் போட்டு “ஆசுபத்திரியில இருக்கிற அப்பப்பாவுக்குத் தோடம்பழம் கொண்டு போறதாம்” என்று விளையாட்டு.

தர்சன் முன்மண்டபத்தில் கிடந்த நீள நாற்காலியில் படுத் திருந்தான். தர்மலா பென்சிலை எடுத்து அவன் கையில் ஊசி போடுவதுபோலக் குத்தினாள்.

“நீதான் அப்பப்பாவாம்… நான் தான் டொக்ரராம்…”

தலைவாரிக்கொண்டிருந்த நீலாம்பிகை பிள்ளைகளைப் பார்த்து “என்ன இதெல்லாம்?” என்று கேட்டாள்.

“மருந்து குடுக்காட்டி அப்பப்பா செத்துப் போயிடுவார் – இல் லையா அம்மா?” என்றான் தர்சன்.

திடீரென்று பக்கத்தில் கேட்பதுபோல இந்தியப்படை “ஷெல்” எங்கோ அதிர்ந்து வெடித்தது.

“மருந்து குடுத்தும் காப்பாத்தமுடியாம எத்தனையோ உயிர்கள் செத்துக்கொண்டிருக்குதடா தம்பி” என்றான் சிறீவரதராஜா.

குழந்தைகளுக்குப் புரியவில்லை.

இரண்டு வாரங்கள் இப்படித்தான்…

புரிந்தும் புரியாததுமான பேச்சுக்கள்… நிகழ்வுகள்…

வீட்டில் மட்டுமல்ல – வெளியிலுந்தான்… இந்தியப்படை ஏன் தமிழர்களைக் கொல்கிறது? எவருக்கும் புரியவில்லை. சிறீவரத ராஜாவுக்கு மட்டும் ஒரு பெரிய மன அமைதி.

அப்பா சாகுமுன் ஒருமுறை அவரைப் பார்த்துவிடவேண்டும் என்று ஒரு தவிப்பு இருந்ததே – பார்த்தாயிற்று.

24 ஆம் தேதி காலை வழக்கம்போல் அப்பாவை அவன் மீண்டும் பார்த்தான்.

அப்பா உடலநிலை தேறிக் கலகலப்பாகவே இருந்தார்.

சிறீவரதராஜா பூரித்துப்போனான்.

தர்சன் பையில் கொண்டு வந்திருந்த பழங்களை வாங்கிக் கொண்டு “பழமா? பந்தா?” என்று கேட்டார் அப்பப்பா.

எல்லோரும் சிரித்தார்கள்.

“ஒரு வாரம் கிளிநொச்சியில் தங்கிவிட்டு வாறன் அப்பா” என் றான் சிறீவரதராஜன்.

பயணம் தொடங்கிற்று.

மருத்துவமனைக்கு வெளியே வந்து காரில் ஏறியபோதே “ஷெல்” களின் வேட்டோசை காதைப் பிளிந்து எடுத்தது.

விமானங்கள் உறுமி இரைந்தன.

அப்பாவோடு பேசிய மகிழ்ச்சி தீர்ந்து போயிற்று.

கொடுமையான பயணம்…
யாழ்ப்பாண வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன – ஓட்டுநர் எண்ணிப் பெருமூச்சு விடுகிறார்.

“றோட்டு” க்கூடச் செத்துப்போய்கிடக்குது…”




வானத்தில் மாரிகால முகிலின் இருள்… ஓரிரு மழைத்துளிகள்.

தெருவுக்குக் குறுக்கே நீளுமாகப் படுத்துக் கிடந்த மாடுகள் எழுந்து நகர்கின்றன.

பொதுமக்கள் ஆசையோடு தெருவோரத்தில் நிறுத்தி வைத்த விடுதலைப் புலிகள் தளபதி லெப். கேணல் பொன்னம்மானின் ஓவியத் தட்டி, இந்தியப்படைத் துப்பாக்கிகளால் சுட்டுக் கிழிக் கப்பட்டு நொருங்கிக் கிடக்கிறது.

“விடுதலைப் புலிகளின்ர படத்துக்குக்கூட உவை பயப்படுகினம்” சிறீவரதராஜா மனக்குமுறலைக் கொட்டுகிறான்.

“பொன்னம்மானுடைய படத்தை உடைக்கிறதால உந்த வீர னுடைய புகழை அழிக்க முடியுமே?” என்கிறார் ஓட்டுநர்.

கார் பள்ளத்தில் விழுந்து தளம்பி நகர்கிறது.

“உது ஒரு விடுதலைப் போராட்டம் பாருங்கோ – இந்தியப்படை என்ன – உலகத்துல இருக்கிற எந்த வல்லரசின்ர படை வந் தாலும், தமிழீழ மக்களின்ர போராட்டத்தை ஒடுக்க முடியாது. உண்மையிலேயே உவை படங்களோடுதான் போராடுகினம்.” சிறீவரதராஜா உறுமுகிறான்.

“பேசாதீங்கோப்பா… உங்கின அவை நிற்கிறமாதிரித் தெரியுது…”

நீலாம்பிகை பதட்டமடைகிறாள்.

கோயில் வீதியும் ஆடியபாதம் வீதியும் கூடும் சந்தியில் ஒரு கும்பல் – நல்லூர்க் கோயிலடிக் கும்பலைப் போலவே துப்பாக் கிகளோடு –

“காரை”த் தடுத்து நிறுத்துகிறார்கள்.

இந்தியப்படை வெறியன் ஒருவன் துப்பாக்கியை நீட்டிக் கொண்டே “காரை” நோக்கிப் பாய்கிறான்.

“அப்பா… உவங்கள் சுட்டுப்போடுவாங்களே…?”

நடுங்கிக்கொண்டே தர்சன் அப்பாவைக் கேட்கிறான்.

குழந்தைகளின் முகங்களை மாறி மாறிப் பார்த்துவிட்டு “ஓ!” என்று வாய் கிழியச் சிரிக்கிறான் ஒரு நீள மீசை அதிகாரி.

“சரி நீங்க போகலாம்…”

ஓட்டுநர் முகத்தில் வடிந்த வியர்வையை வழித்துவிட்டுக் “காரை” எடுக்கிறார்.

கார் நூறு யார் போகவில்லை…

“டுமில் டுமில்” என்று துப்பாக்கிகளின் கொடிய உறுமல்.

“அம்மா… ஐயோ…”

கார் ஆடி அசைந்து சாய்கிறது.

தொடர்ந்து துப்பாக்கிகளின் வெறிமுழக்கம்.

குருதி பாய நிலத்தில் விழுந்த ஓட்டுநர் அரைகுறைக் காயங்க ளோடு எதிரே இருந்த சந்து வழியாக ஓடித்தப்புகிறார்.

“போகச் சொல்லிப்போட்டுச் சுடுகிறாக்களே சண்டாளனுகள்…”

ஓட்டுநரின் கதறல் கேட்கிறது.

இன்னொரு “வீர்” என்று சின்னஞ்சிறிய பிஞ்சின் அழுகுரல்… “காரின்” உள்ளே… காயங்களோடு.

அதுதான் சிறீவரதராஜாவின் கடைசிக் குழந்தை கிரிஷன்.

மற்றவர்கள்…?

கதை முடிந்துவிட்டது!

– தமிழீழம் தை 1989

உலக வணிகம் ULAGA VANIKAM

2024



LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

# கரும்புலி கப்டன் மில்லர்

*05-07-1987 முதலாவது கரும்புலித்தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது !*

**“Black Tigers”** என்பது தற்கொடைப்பிரிவைச் சேர்ந்தவர்களை குறிப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் கொள்ளப்படுகிறது. இயக்கத்தில் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் எல்லோருக்குமே தன்னுடைய அரிய உயிரை இலட்சியத்திற்காக துறப்பதற்க்கு எப்பொழுதுமே தயாராய் இருக்கின்றனர்.

இயக்க உறுப்பினர்கள் அனைவருமே சைனைட் குப்பிகனை கழுத்தில் அணிந்து கொண்டு இருப்பார்கள். மிக இக்கட்டான சூழ்நிலையில் எதிரிகளிடம் பிடிபடாமலும் இயக்கத்தை பாதிப் படையவிடாமலும் செய்ய உயிர் துறந்தவர்கள் எத்தனையோ பேர்.

## தெய்வப் பிறவிகள்தான் கரும்புலிகள்

ஆனாலும் கரும்புலிப்பிரிவைச் சேர்ந்தவர்கள் நேரடியாகவே தமது உயிரைப் பணயம் வைத்து, அதைவிட தமது உயிரை கொடுத்து சில நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். அரிதாக, மிக அரிதாக அவர்கள் தப்பி திரும்பி வரும் சந்தர்பங்களும் உண்டு. எப்படியிருந்தபோதிலும் அவர்கள் நடவடிக்கையில் இறங்கும் போது தம்முடைய உயிரை அந்த நடவடிக்கைக்காக தியாகம் செய்யத்தயாராகவே இருப்பர். இப்படியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தற்கொடைத் தாக்குதலில் முதலில் வீரச் சாவடைந்த கப்டன் மில்லரால் நடாத்தி முடிக்கப்பட்ட தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை பற்றி சற்றுப் பார்போம்.

மில்லர் வடமராட்சியின் துன்னாலைப் பகுதியைப் பிறப்பிடமாக கொண்டவன். அவனுடைய தந்தை இலங்தை வங்கி ஒன்றில் உயர் அதிகாரியாக பணியாற்றி வந்தார். தன்னுடைய தாயகத்தை மீட்க அவன் எப்போதும் சித்தமாக இருந்தான். மில்லர் எமது இயக்கத்தில் சேர்ந்து பல தடவைகள் இராணுவத் துடன் மோதியிருக்கிறான். ஒவ்வொரு மோதலிலும் மில்லர் தன்னுடைய பணியை தனக்கே உரித்தான அபாரத் துணிச்சலுடன் செய்து பலருடைய மதிப்பை பெற்றவன்.

வடமராட்சிப் பகுதியை சிறீலங்கா இராணுவத்தினர் முற்றிகையிட்ட போது பிரபாவின் அணியின்ரோடு சேர்ந்து பதில் தாக்குதலில் ஈடுபட்டான். வடமராட்சி யுத்தம் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. பலத்த சேதத்திற்க்கு பின் வடமராட்சியை இராணுவத்தினர் வடமராட்சி பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டனர். வடமராட்சி பகுதியை திரும்ப மீட்க வேண்டுமென்பதில் மில்லர் துடியாய் துடித்தான்.

பிரபாவும், (பிரபா முன்னர் மன்னார் பிராந்தியத்தில் விக்ரருடன் பணியாற்றியவன்) மில்லரும் சேர்ந்து நெல்லியடி இராணுவ முகாமுக்குள் வெடிமருந்து வாகனங்களை விடுவதற்க்கு தலைவரிடம் அனுமதி கேட்டு, வெடி மருந்தையும் பெற்று கொண்டனர். ஒன்றன் பின் ஒன்றாக இரு வண்டிகள் விடுவதற்கு திட்டமிட்டனர். முதலாவது வண்டியை மில்லரும் அதன் பின் வண்டியை, அதன் பின் இரண்டாவது வண்டியை ராசிக்கும் ஓட்டிச் செல்ல முன்வந்தனர்.

திட்டம் உருவானது. இரவு இரவாக நெல்லியடி இராணுவ முகாமிக்குள் வண்டிகளை விடுவது என்றும் ஏனேன்றால் இராணுவத்தினர் இரவு பத்து மணிக்குப் பின்னர் முகாம்களை விட்டு வெளியே வந்து சுற்றாடலில் இருந்த மக்கள் வெளியேறிய வீடுகளில் தங்கிவிடுவார்கள் என்பதால் அதற்கு முன்னர் வெடி மருந்து நிரப்பப்பட்ட வாகனங்கள் உள்ளே விடப்பட வேண்டும்.

வாகனங்கள் முகாமை நெருங்கிச் செல்லும் பாதைகளில் பல தடைகள் போடப்பட்டு இருந்தன. எனவே வாகனங்கள் புறப் பட்டு முகாமை அடைவதற்கு அத்தடைகள் அகற்றப்படுதல் முக்கியமானதாகும். அந்த வேலையை கமல் பொறுபெடுத்துக் கொண்டான். பகல் வேளையே வாகனங்கள் தயார் செய்யப் பட்டு முகாமுக்கு அருகில் கொண்டு வரப்பட்டு இருக்கும்.

சரியான நேரம் நெரிங்கியதும் எம்தோழர்கள் முகாமைத் தம்முடைய துப்பாக்கிகளாலும், ரொக்கட்டுகளாலும் தாக்கத் தொடங்குவார்கள். அந்தச் சந்தர்பத்தில் கமலும் அவனுடைய சகாக்களும் தெருவில் உள்ள தடைகளை அகற்றுவார்கள். கமல் தடைகளை முற்றாக அகற்றிய பின் பிரபாவுக்கு அறிவிக்க வெடிமருந்து நிரப்பிய வாகனங்கள் முகாமை சென்றடையும். இதுதான் திட்டம்.

கமல் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாக கொண்டவன். இவரது தந்தை துரைரத்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையது பாதை எமது தாயகத்தை மீட்டு எடுக்க சரியான தீர்வாகது என்பதை உணர்ந்த கமல், எமது இயக்கத்திலே தன்னை இணைத்து கொண்டு போரடத் தொடங்கினான்.

பயிற்சியை முடித்து விட்டு மட்டக்கிளப்புக்குச் சென்று சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றிந்தான். கிழக்கில் எமது இயக்க வளர்ச்சியில் கமலின் பங்கு மிகவும் குறிப்பிடக்கூடியது.

மட்டக்கிளப்பில் மிகவும் சிக்கலான சூழ்நிலைகளிலும் தன் தனித்திறமையினால் எத்தனையோ அரும் பெரும் காரியங்களை ஆற்றியிருக்கின்றான்.

தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருந்தன. மில்லர் மிகவும் கடுமையாக உழைத்தான்.




இராணுவத்தினர் ஆக்கிரமிப்புகுள் இருந்த நெல்லியடிப் பகுதிக்கு வெடிமருந்துகளையும், வாகனங்களையும் மிகுந்த சிரமப்பட்டு இரவோடு இரவாக கொண்டுவந்து சேர்த்தான். அவ்வேளைகளில் கூட நான் அடுத்த நாள் இறக்க போகிறேன் என்ற விடயம் தெரிந்த மனிதனைப் போல் நடந்து கொள்ளவில்லை.

கவலையோ, திகைப்போ, பயமோ அல்லது தயக்கமோ அவனிடம் காண முடியவில்லை. வெடிமருந்துகளை ட்றக் வாகனங்களில் ஏற்றி அவற்றுக்கு இணைப்புகளை கொடுத்து தன்னுடைய சவப்பெட்டிகளை தானே தயாரித்து கொண்டு இருந்தான்.

அன்று பகல் முழுவதும் வெடிமருந்துகளுடன் இரு வாகனங்கள் தயார் செய்யப்பட்டன. குழுக்கள் யாவும் உசார் நிலைக்கு கொண்டு வரப்பட்டன. நேரம் இரவாகிய போது குழுக்கள் யாவும் முகாமை நோக்கி நகரத் தொடங்கின. மில்லர் தன்னுடைய வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டான்.

கமலுடைய குழு, வாகனம் முகாமை நோக்கி செல்லத் வேண்டிய பாதையில் போடப்பட்டு இருந்த தடைகள் உள்ள பகுதியை சென்றடைந்தனர். எனைய குழுக்களும் முகாமை நெருங்கி தத்தமது இடங்களில் தயார் நிலையில் நின்றனர்.

பொறுபாளரிடமிருந்து தாக்குதல் ஆரம்பிக்கும்படி கட்டளை பிறப்பிகப்பட்டது. எல்லோரும் முகாமை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள்.

மில்லர் ஏறி அமர்ந்து இருந்து ட்றக் வண்டியை ஸ்ராட் செய்து எஞ்சினை உறுமி விட்டு அமைதிப் படுத்தினான். பின் தன் வண்டி செல்வதற்கான உத்தரவுக்காக காத்திருந்தான். அப் போது கூட பக்கத்தில் இருந்த பிரபுவோடு ஏதோ யோக் அடித்து கொண்டு சிரித்து கொண்டு இருந்தான்.

முகாமை நோக்கி எமது தோழர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்து கொண்டிருக்கையிலேயே கமல் குறுக்கே பாய்ந்து தடைகளை அகற்ற முயன்றான். பெரிய மரக்கட்டைகள் புதைக்கப் பட்டு இருந்தன.

தான் கொண்டுவந்த வெடிமருந்துப் பெட்டியை கட்டைகளின் பின் வைத்து விட்டு விலகி மறைவில் படுத்து கொண்டான். வெடி மருந்து வெடித்தது. அத்தோடு கட்டைகள் தூக்கி எறியப் பட்டு பாதை சீராகியது. அதே நேரம் பாதைக்கு நேரே அமைக்கப் பட்டிருந்த காவல் அரணில் இருந்து இராணுவத்தினரின் மெசின்கன்கள் வெடிக்க தொடங்கியது.

கமல் தன்னுடைய வாக்கிடோக்கியில் அறிவித்தான். “தடைகள் அகற்றப்டட்டு விட்டது” ஆனால் புதிய சிக்கல் பாதைக்கு நேரேயுள்ள காப்பரணில் இருந்து துப்பாக்கிச் சூடு வருகிறது. சற்றுப் பொறு. மில்லருக்குப் பக்கத்தில் நின்ற பிரபாவின் வாக்கியிலும் அறிவிப்பு தெளிவாக கேட்டது.

அதைக் கேட்ட மில்லர் “பிரபா பரவாயில்லை, வாகனத்தின் முற் பகுதியில் குண்டுகள் துளைக்காத படி தகடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் நான் கொண்டு போய் சேர்த்து விடுவேன்.” என்றான்.

மில்லர் சற்று பொறுத்துக் கொள் அந்தப் பங்கர் உடைக்கப் பட்டதும் நீ போகலாம். மிக விரைவாக வண்டியை செலுத்தி விட்டு விட்டு, நீ இறங்கி ஓடி வந்து விடு. என்றான் பிரபா.

மில்லர் ஒரு முறை சற்று சிரித்து கொண்டான். ஏனேன்று புரியவில்லை. அருகில் இருந்த பிரபாவிற்கு கேட்க மனம் துணிய வில்லை. “பிரபா முன்பு ஒரு முறை யாழ்பாணத்தில் விடப்பட்ட வாகனம் சரியாக செல்லவில்லை. எனவே இம்முறை நான் நிதானமாகவே வாகனத்தைச் செலுத்துவேன். எப்படியும் கட்டிடத்துக்கு மிக அண்மையில் வாகனத்தை கொண்டு செல் வேன்” என்று மில்லர் கூறினான்.

கமல் தன்னுடைய வோக்கியில் ரொக்கட் லோஞ்சர் வைத் திருப்பவனை அந்த காப்பரணை உடைக்குமாறு கூற ரொக்கட் லோஞ்சரில் இருந்து மிகச் சரியாக ஏவப்பட்ட ரொக்கட் பங்கரை தாக்கியது. மணல் முட்டைகள் சிந்தின. பங்கர் இருந்த இடத்தில் ஒரே புழுதியும் புகையும். கமல் தகவலை தெரிவித்தான். பொறுபாளரிடமிருந்து மில்லரை புறப்படுமாறு பிரபாவிற்க்கு உத்தரவு வந்தது.

மில்லர் வண்டியை ஸ்ராட் செய்து மெதுவாக செலுத்தினான். பிரபா வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டான்.

வண்டி நெல்லியடிச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண்டியை நிறுத்தி பிரபாவை அழைத்தான். பிரபா மில்லருக்கு கையை அசைத்துவிட்டு வெடி மருந்து வெடிப்பதற்கான கருவியை இயக்கினான் கருவி இயங்கத் தொடங்கியது.

மில்லர் வண்டியை மெதுவாக ஓடவிட்டான் பிரபா வண்டியில் இருந்து குதித்து வண்டியோடு சேர்ந்த ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து “மில்லர் எப்படியும் திரும்பி வந்து விடு” மில்லர் அதை புரிந்து கொண்டது போல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப்படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக் கொண்டிருக்க மில்லரையும் வெடிகுண்டையும் சுமந்து கொண்டு வண்டி சென்று கொண்டிருந்தது..

வண்டி முகாமை நோக்கி வருவதை அறிந்து தோழர்கள் முகாமைவிட்டு 100 யார் பின்னுக்கு வந்தனர். கமல் நின்ற இடத்தை தாண்டி வண்டி சென்றதும் கமல் மில்லரை நோக்கி கையசைத்து பின்னுக்கு செல்ல, சில நிமிடத்தில் நிலத்தை அதிரவைத்துக் கொண்டு பெரிய ஓசை எழுந்தது.

தோழர்கள் மீண்டும் முகாமைம் நோக்கி முன்னேறினார்கள்.

இராணுத்தினர் தங்கியிருந்த சற்று முன்னர் கூட இராணுத் தினர் நின்று துப்பாக்கி பிரியோகம் செய்த மிகப் பெரிய மாடிக் கட்டிடம் தரைமட்டமாகிக் கிடந்தது. அதில் இருந்த இராணுவத் தினர் கட்டிடத்தின் உள்ளேயே இறந்து போனார்கள்.

மில்லரின் தாக்குதலை தொடர்ந்து நடந்த அத்தாக்குதலில் கமலும் வீரச்சாவடைந்தான். நெஞ்சிலே காயமடைந்த கமலின் உடல் எடுத்து வரப்பட்டது. ஆனால் மில்லர் திரும்பவே இல்லை. மில்லர் வெடிமருந்தின் அதிர்வலைகனோடு சங்கமாகி அதிர் வலையோடு சேர்ந்து தன் பணியை செவ்வனே முடித்தான்.

– உயிராயுததிலிருந்து ...



இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்கிறது...
STRUCTURAL GENOCIDE AGAINST THAMILS CONTINUES IN SRILANKA
BLACK JULY
EELAM THAMILS
GENOCIDE
1983
ஈழத்தமிழர் இன அழிப்பு
கறுப்பு யூலை
"What is happening in Sri Lanka, nothing other than Genocide"
Indra Gandhi
Prime Minister of India
August 16, 1983
The State Terrorism caused by the Sri Lankan Government
killed more than 3000 Thamil civilians within 10 days.
Many pieces of Thamil history were lost,
more than 150,000 homeless and all of this was caused
by Sinhala Mobs who were backed by the Sri Lankan
REMEMBRANCE OF BLACK JULY
1983
ஈழத்தமிழர் இன அழிப்பு
Genocide of Eelam Thamils




கரும்புலிகள் நாள்
05.07.1987...
KARUMPULIKAL NAAL
"கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள்
எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள்
எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும்
நெருப்பு மனிதர்கள்."
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்
யூலை
JULY
05
2023
"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்" "The Thirst Of the Thamils is the Homeland of Thamil Eelam"
சங்கத்தமிழ்